# தமிழரசு

டிசம்பர் 1-31 , 2000 ரூ 10/-











# கலைஞர் ஆட்சியில்

## தறிகள் இங்கே விளையாடும்
## தமிழக அரசின் புகழ் பாடும்




- தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக ஜவுளிக்கென்று தனியே ஒரு கொள்கை
- 60 வயதான நெசவாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.150 என்பது ரூ.200 ஆக உயர்வு
- 60 வயதிற்கு முன் இறக்கும் நெசவாளரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1995-96ல் ரூ.15 ஆயிரம் என்பது 2000-2001ல் ரூ.50 ஆயிரமாக உயர்வு
- 1996 வரை நிலுவையில் இருந்த தள்ளுபடி மானியம் ரூ.43.25 கோடி கலைஞர் அரசால் வழங்கப்பட்டது
- நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை ஏற்றுமதி ரக உற்பத்தியில் ஈடுபடுத்தி அதன் மூலம் நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் கணிசமான உயர்வு
- ஆண்டுக்கு ரூ.100 கோடி மதிப்பில் ஏழை எளியவர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு
- நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகளுக்கு தனியாக வணிகப் பெயர் உருவாக்கி விற்பனை அதிகரிப்பு

நூல் நயம் காண்போர் வாழ் நலன் காண்போம்

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
கார்த்திகை–மார்கழி
டிசம்பர் 1-31, 2000
மலர் : 32 இதழ் : 11 & 12
விலை ரூ.10

முதல் பக்க அட்டையில்...

**கல்லூரிகளில் கணினி அறிவியல் அறிமுகம்**

கடைசிப்பக்க அட்டையில்...

**சிறுசேரியில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா**

## இந்த இதழில்...


- சிறுசேரியில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ---------- 2
- சேலம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ---------- 7
- 100-வது உழவர் சந்தை ---------- 17
- மக்கள் சாசனம் (தொடர்ச்சி) ---------- 21
- திருக்குறள் கீர்த்தனைகள் இசைநிகழ்ச்சி முழுதும் பாடப்படவேண்டும் ---------- 60
- மாரடைப்பு ---------- 62
- கல்லூரிகளில் கணினி அறிவியல் அறிமுகம் ---------- 71
- கரூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ---------- 78


## திருக்குறள்

**நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்.**

நன்மை எது தீமை எது என ஆராய்ந்து அறிந்து, நற்செயலில் மட்டுமே நாட்டங் கொண்டவர்கள் எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்.

**– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...**




# சிறுசேரியில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா


□ முதலமைச்சர் கலைஞர்

மகளிர்க்கான இந்தப் பொன் விழா ஆண்டில் "மகளிர்க்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவைத்" திறந்து வைத்து உரையாற்றிடும் அரிய வாய்ப்பு கிட்டியுள்ளமைக்காக மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் கொள்கிறேன். இருபத்தோராம் நூற்றாண்டில், மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான வளம், நலம் இரண்டையும் வழங்கிடும் மிக முக்கியமான துறைகள் இரண்டு; ஒன்று தகவல் தொழில்நுட்பம்; மற்றொன்று உயிரியல் தொழில்நுட்பம்.

தகவல் தொழில்நுட்பவியல் வளர்ச்சியைப் பொறுத்த வரையில், தமிழகத்தில் அதற்கென்று தனித்துறை தோற்றுவிக்கப்பட்டு, பல்வேறு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்பட்டு கடந்த **4.7.2000** அன்று சென்னை தரமணியில் நமது பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள டைடல் மென்பொருள் தொழிற்பூங்கா, ஆசியாவிலேயே மிகப் பெரிதாக விளங்குவதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். திறக்கப்பட்ட நான்கு மாதங்களுக்குள், உலகின் முன்னணி நிறுவனங்களாகத் திகழும் பல மென்பொருள் நிறுவனங்களும், இந்தியாவில் உள்ள பல பெரிய மென்பொருள் தொழில் நிறுவனங்களும் அதில் தமது தொழில் அமைப்புகளை நிறுவ முன்வந்து ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளமை டைடல் பூங்காவின் வெற்றிக்கு மட்டுமல்ல; தமிழகத்திலே தகவல் தொழில்நுட்பம் அடைந்து வரும் வளர்ச்சிக்கும் சிறந்த சான்றாகும்.

இத்துடன், தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான, தரமான பல கட்டமைப்பு வசதிகளும் அங்கே உருவாக்கப்படுகின்றன. இந்தத் துறையில் தமிழகத்தில் உருவாக்கப்படும் ஆற்றல் மிகுந்த மனித வளம் உலகின் பல பகுதிகளிலும் தமிழக இளைஞர்கள் வேலைவாய்ப்புக்களைப் பெறவும் வழிவகுத்துள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருதும் நாடுகள் இந்தியாவை, குறிப்பாகத் தமிழகத்தை நாடி வரும் சூழ்நிலைகளை இந்த அரசு அண்மைச் சில ஆண்டுகளில் உருவாக்கி, மகத்தான சாதனை





படைத்துள்ளது என்பதனைப் பெருமிதத்தோடு நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படித் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காகத் தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைப் போலவே உயிரியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் இந்த அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது என்பதை நீங்களெல்லாம் மிக நன்கறிவீர்கள்.

கோடிக்கணக்கான மக்களுக்குத் தேவைப்படக்கூடிய சத்துணவு, சுகாதாரம், சுற்றுப்புறச்சூழல் போன்ற வைகளில் உயிரியல் தொழில் நுட்பத்தின் ஆற்றல்கள் பொதிந்து கிடக்கின்றன. எனவே, இந்த ஆற்றல் முழுமையாக பயன்பாட்டுக்குக் கொண்டு வரப் பட வேண்டும். வளரும் நாடுகளில் இந்த முயற்சி மிக மிக முக்கியமானது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## உயிரியல் தொழில் நுட்பத்தினால் பெரிய அளவில் வேலை வாய்ப்பு

மக்கள் தொகை பெருக்கம், வரம்பிற்குட்பட்ட விளை நிலங்கள், அதிக அளவில் பரவும் தொற்று நோய்கள் ஆகியவை தொடர்பான இன்றைய சவால்களைச் சந்தித்துத் தீர்வு காண்பதற்கு உயிரியல் தொழில்நுட்பம் நமக்குப் பெரிதும் உதவும். இவை மாத்திரமல்லாமல், உயிரியல் தொழில்நுட்பம் பெரிய அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடியது என்பதும் சிறப்பாகக் கவனத்தில் கொள்ளக்கூடியதாகும்.

உயிரியல் தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் இந்தியாவில் பயன்படுத்தப் படும் பொருள்களின் மதிப்பு சென்ற ஆண்டில் 7,154 கோடி ரூபாயாக இருந்தது. நடப்பு ஆண்டுகளில் இது 9,400 கோடி ரூபாய் அளவினை எட்டும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இது 2005–ஆம் ஆண்டில் 14,560 கோடி ரூபாய் அளவுக்கு உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விவரங்களின் அடிப்படையில் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் புதிய முதலீடுகள் செய்யப் படுவதற்கு மிகச் சிறந்த வாய்ப்புகளை இந்தியா பெற்றுள்ளது என்பது நன்றாக விளங்கும்.

முதலீட்டாளர் நட்புறவுடன் கூடிய தொழில் வளர்ச்சி குறித்த இந்த அரசின் சீரிய கொள்கைகள் காரணமாக முதலீடுகளை ஈர்ப்பதில் கடந்த சில ஆண்டுகளில் தமிழகம் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. தமிழகம் உயிரியல் வளங்களை மிக அதிக அளவில் கொண்டுள்ளது. தமிழகத்தில் அமைந்துள்ள பல்வேறு வகையான நிலவியல் பகுதிகளில் (Geographical Terrains) உயிரியல் வகைகள் பல காணப்படுகின்றன. தமிழகத்தின் வனவளம், வேளாண் வளம், நிலவளம் ஆகியவை அளவில் பெரியதாகவும், பல்வேறு வகையினதாகவும் அமைந்துள்ளன. நாட்டிலேயே மிக நீண்ட கடற்கரையை தமிழகம் கொண்டுள்ளது.

இவற்றின் காரணமாக உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சிகளுக்காகவும், உயிரியல் சார்ந்த உற்பத்திப் பொருள்களின் மேம்பாடுகளுக்காகவும், வர்த்தக நடைமுறைகளுக்காகவும் அதிக அளவில்

முதலீடுகள் செய்வதற்குரிய வாய்ப்புகளைத் தமிழகம் பெற்றுள்ளது.

இதன் காரணமாக, உயிரியல் தொழில்நுட்பத்தினைத் தமிழகத்தில் பெருக்கி வளர்க்க உதவும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக உயிரியல் தொழில் நுட்பத்திற்குத் தனிக் கொள்கை வகுத்து, அதனைச் செயல்படுத்திடும் முதல் மாநிலம் தமிழகம் என்பதனை இவ்வேளையில் நினைவு படுத்துகிறேன்.

**டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் உயர்மட்டக் குழு**


**2000–2001**–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை **24.3.2000** அன்று சட்டப் பேரவையில் வைத்து நான் உரையாற்றிய போது பின்வருமாறு குறிப்பிட்டேன்:

"வளர்ந்து வரும் உயிரியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திட உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை உருவாக்க ஆய்வறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. டாக்டர் திரு எம்.எஸ்.சுவாமி நாதனைத் தலைவராகக் கொண்ட நிபுணர் குழு இந்த அறிக்கையைப் பரிசீலித்து தனது பரிந்துரைகளை அளிக்கும்" இவ்வாறு நிதிநிலை அறிக்கை உரையிலே நான் குறிப்பிட்டேன். இந்த அறிவிப்பின்படி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழு, தமிழகத்திலே அதிக அளவில் கிடைக்கும் உயிரியல் வளங்களையும், உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த மனித வளங்களையும், தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பத் தொழில்களை அமைப்பதற்குரிய வாய்ப்புகளையும், விரிவாகப் பரிசீலித்து அவற்றின் அடிப்படையிலே உருவாக்கப்பட்ட பரிந்துரை களை **10.8.2000** அன்று அரசுக்கு வழங்கியது. அந்தப் பரிந்துரைகளில் சிலவற்றை இங்கே குறிப்பிட நான் விரும்புகிறேன்.

தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்பக் கழகம் (Tamilnadu Biotechnology Board) ஒன்றை உருவாக்கி அதன் மூலம் உயிரியல் தொழில்நுட்பத் தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான நிதியுதவிகள், தொழில்நுட்ப உதவிகள் முதலியவற்றை வழங்கலாம்.

தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்பக் கழகம், மருத்துவம், உணவு மற்றும் வேளாண்மை, தொழில் மற்றும் சுற்றுச்சூழல் உயிரியல் தொழில்நுட்பங்கள், உயிரியல் வளம் சார்ந்த தகவல்கள் (Bioinformatics) மரபணுக்கள் (Genomics) ஆகியவற்றின் மீது ஆலோசனைகள் வழங்குவதற்கு நிலையான ஆலோசனைக் குழுக்களை அமைக்கலாம்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் உள்ள சிலிகான் பள்ளத்தாக்கு அமைப்பினைப் போல, மாமல்லபுரம் – கல்பாக்கம் பகுதி, மண்டபம்–தூத்துக்குடி பகுதி, மதுரை–கொடைக்கானல் பகுதி ஆகிய மூன்று இடங்களிலும் உயிரியல் தொழில்நுட்பத் தொழில் மண்டலங்களை அல்லது உயிரியல் பள்ளத்தாக்குகளை அமைக்கலாம்.



இப்பள்ளத்தாக்குகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் தொடர்ந்து உருவாகும் உயிரியல் தொழில்நுட்ப வளாகங்கள் இந்த உயிரியல் பள்ளத்தாக்குகளுடன் இணைந்து செயல்பட முடியும்.

அயல்நாடுகளில், குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் செயல்பட்டு வரும் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களோடு தகுந்த முறையில் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளலாம். இது உயிரியல் தொழில்நுட்பப் பாதுகாப்புப் பூங்காவை நிறுவ பணிகளை விரைவுபடுத்திட உதவும்.

30 கோடி ரூபாயைத் தொடக்க மூலதன நிதியாகக் கொண்டு உயிரியல் தொழில்நுட்பத்திற்கு உதவிடும் சிறப்பு மூலதன நிதி ஒன்றை உருவாக்கலாம் என்பன போன்ற பல பரிந்துரைகளை டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையிலான உயர்மட்டக்குழு அரசுக்கு அளித்தது.

இந்தப் பரிந்துரைகளைத் தமிழக அரசு ஆழ்ந்து பரிசீலனை செய்து, அவற்றின் அடிப்படையில் தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பத்திற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டு, அதற்குரிய கொள்கை ஆவணம் 12.9.2000 அன்று சென்னையில் நடைபெற்ற, இன்றைக்கு உலகிலேயே உயிரியல் தொழில்நுட்பத் துறையில் முன்னணியில் உள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகமான கார்னெல் பல்கலைக்கழகம் நடத்திய உயிரியல் தொழில்நுட்ப மாநாட்டில் தமிழக அரசினால் வெளியிடப்பட்டது.

## தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்ப வாரியம்

இக்கொள்கை ஆவணம் கூறும் ஒரு பரிந்துரையின்படி, "தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்ப வாரியம்" ஒன்று 22.11.2000 அன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் அமையும் இந்த வாரியத்தில், தமிழக அரசின் தொழில்துறைச் செயலாளரும், நிதித்துறைச் செயலாளரும், மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறைச் செயலாளரும், அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகச் செயல்படுவார்கள்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் இவ்வாரியத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினராகவும், உறுப்பினர் செயலாளராகவும், விளங்குவார்.

மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறையின் முன்னாள் செயலாளர் டாக்டர் எஸ்.இராமச்சந்திரன், கோவை பாரதியார் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் எஸ்.இக்னாசிமுத்து (Dr.S.Ignacimuthu), பெங்களூர் இந்திய அறிவியல் கல்வி நிலையத்தில் உள்ள குளோபல் பயோடைவர்சிடி கன்வென்ஷனில் (Global Biodiversity Convention) அறிவியல் ஆலோசகக்குழுத் தலைவர் பேராசிரியர் மாதவ் காட்கில் ( Prof. Madhav Gadgil).

மராட்டிய மாநிலம் ஜாய்னாவில் உள்ள மாய்கோ உயிர் அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் (Mahyco Life Sciences Research Centre, Jaina) இணை இயக்குநர் டாக்டர் திருமதி உஷா பர்வாலே–செர் (Dr.(Mrs.)Usha Barwale-Zehr)

ஆகியோர் இந்த வாரியத்தினுடைய உறுப்பினர்களாக தமிழக அரசினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் இந்த தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த வாரியத்தின் உதவியோடு தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பம் தொழில்கள் பல அடுத்தடுத்துத் தோன்றிப் பெருக வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு இன்று திறக்கப்படும் மகளிர்க்கான பொன்விழா ஆண்டு உயிரியல் தொழில்நுட்ப வளாகம் பயன்படும் என்று நாம் நம்புகிறேன். இந்த உயிரியல் தொழில்நுட்ப வளாகம் அமைந்ததன் பின்னணியை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தமிழகத்தில் அமைந்து கிடக்கும் அளவற்ற உயிரியல் வளங்களின் அடிப்படையில் சென்னையில் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்துறையும், டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து, ஆசிய, பசிபிக் மண்டலத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய செயலரங்கம் ஒன்றை 1996–ஆம் ஆண்டு டிசம்பரில் நடத்தியது அந்தச் செயலரங்கம்.

"உயிரியல் தொழில்நுட்பத் துறையிலே தகுதி வாய்ந்த பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்புகளைப் பெருக்கிடும் நோக்கத்தோடு பெண்களுக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கலாம்." என்று பரிந்துரை செய்தது.

மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை அப்பரிந்துரையை ஏற்று, அதனை நமது நாட்டில் 50–வது சுதந்திரப் பொன்விழா நினைவு சிறப்புத் திட்டங்களில் ஒன்றாக அறிவித்தது.

அதனையொட்டி தமிழ்நாடு அரசு, மகளிருக்கான முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை சென்னையிலிருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கேளம்பாக்கத்திற்கு அருகில் இங்கே, சிறுசேரியில் அமைத்திட முடிவு செய்தது. இதன்படி இந்தப் பூங்காவை இங்கு அமைப்பதற்காக 20 ஏக்கர் நிலம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்தியாவிலேயே முதலாவதாக அமையும் இந்தப் பெண்களுக்கான முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பதற்காக மேதகு குடியரசுத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்களால் 29.7.1998 அன்று

அடிக்கல் நாட்டப்பட்டது. பின், கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் இந்த உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா உருவாக்கப் பட்டுள்ளது. மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை இப்பூங்காவை உருவாக்க 4 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. நிதி நிறுவனங்களும், வங்கிகளும் 2 கோடி ரூபாய் கடனாக வழங்குவதற்கு இசைந்துள்ளன.

இப்பூங்காவில் அமையும் தொழில் முகவர்கள் தங்கள் உற்பத்திகளைத் தொடங்குவதற்குத் தேவையான வசதிகள் அனைத்தும் இங்கே ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

வேளாண் உயிரியல் தொழில்நுட்பம், உணவுசார் உயிரியல் தொழில்நுட்பம், மருத்துவ உயிரியல் தொழில்நுட்பம் ஆகியவைகளின் அடிப்படையில் இப்பூங்காவில் உற்பத்தியாகும் பொருள்கள் உள்நாட்டுச் சந்தைகளில் வரவேற்பினைப் பெற்றுச் செல்வாக்கினைப் பெறும்.

இங்கு திறந்து வைக்கப்படும் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா, உயிரியல் தொழில்நுட்பத் தொழில்கள் தமிழகத்தில் தொடர்ந்து பெருகி, தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கும் என்றும், இப்பூங்காவின் மூலம் உயிரியல் தொழில்நுட்பத்திற்கான உலக வரைபடத்தில் தமிழகம் முக்கியமான, சிறப்பான ஒரு இடத்தைப் பெறும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன். ஏறத்தாழ ஆயிரம் மகளிர், தொழில் முகவர்களாக உருவாக இந்தப் பூங்கா வழிவகுக்கும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மகளிர் சமுதாயம் தொழில் முகவர்களாக உயர இப்பூங்கா இந்தியாவிற்கே வழி காட்டக்கூடிய ஒன்றாக விளங்க வேண்டும் என்றும் நான் உளமார விரும்புகிறேன். இங்கு தொழில் தொடங்கும் மகளிர் தொழில் முகவர்களுக்கு என் நல்வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கு வித்திடும் இந்த உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை இங்கு உருவாக்க உதவிகள் புரிந்த மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறைக்கும், வேளாண் விஞ்ஞானி அருமை நண்பர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கும் தமிழக அரசின் சார்பில் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் ஈடுபட்டு நடத்துகின்ற காரியங்கள் சிறப்பாக இருக்கும். நான் எல்லா மகளிரையும் சொல்லவில்லை. ஆனால், சிறந்த மகளிர், திறமை வாய்ந்த மகளிர், ஆற்றல் பெற்ற மகளிர் ஈடுபட்டு நடத்துகின்ற காரியங்கள் வெற்றிகரமாக இருக்கும். பாராட்டத்தக்கதாக அமையும், போற்றத் தக்கதாக, புகழத் தக்கதாக, நிச்சயமாக இருக்கும்.

## மகளிர் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள்

உதாரணத்திற்கு உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானால், தமிழக அரசு 96-க்குப் பிறகு தமிழகத்தில் மகளிர் முன்னேற்றத்திற்காக மகளிருடைய பொருளாதார மேம்பாட்டிற்காக சில திட்டங்களை வகுத்து ஆங்காங்கு மகளிர் குழுக்களை அமைத்து அந்த மகளிர் குழுக்கள் மூலமாகச் சமுதாயப் பணியை ஆற்றி வருகின்றது. அவர்கள் இருபது முப்பது பேர் குழுக்களாகச் சேர்ந்து அவர்கள் ஆற்றுகின்ற பணிகளை நானே நேரில் சென்று கண்டறிந்த போது அவர்கள் சமுதாயத் தொண்டினை எவ்வளவு திறம்பட ஆற்றுகிறார்கள் என்பதை என்னால் உணர முடிந்தது. அதுமாத்திரமல்ல, மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம், சிறுசிறு வாணிபம் செய்வதற்காக, வியாபாரம் செய்வதற்காக மகளிர் ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்றுகூடி அவர்கள் நடத்துகின்ற இந்தத் திட்டமும் போற்றத் தக்கதாக இருக்கின்றது. நாணயமாகவும் இருக்கின்றது.

இன்னொன்று சொல்வேன். நியாய விலைக்கடைகளைக் கூட இப்பொழுது மகளிர் சிலர் நடத்த முன் வந்திருக்கிறார்கள். மற்ற நியாய விலைக்



கடைகளை விட மகளிர் நடத்துகின்ற நியாய விலைக்கடைகள் மிகச் சிறந்த நியாய விலைக் கடைகளாக விளங்குகின்றன என்பதையும் தமிழக அரசு உணர்ந்திருக்கின்றது. எனவே, மகளிர்க்கான இந்தத் திட்டம் நல்ல முறையிலே மேலும் மேலும் வளருமென்ற நம்பிக்கையோடு வாழ்த்தி, பாராட்டி விடைபெறுகிறேன்.

*சிறுசேரியில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை 24-11-2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.*


# சேலம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

### நமக்கு நாமே திட்டம்

1997–98ஆம் ஆண்டு ரூ.2.15 கோடி செலவில் 668 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் பொது மக்களின் பங்களிப்பு ரூ.82.12 இலட்சமாகும். 1998–99 ஆம் ஆண்டில் மாவட்டம் முழுவதும் ரூ.2.43 கோடி செலவில் 205 பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப் பட்டுள்ளன. இதில் ரூ.127.21 இலட்சம் பொது மக்களின் பங்கேற்பு நிதியாகும். 1999–2000 ஆம் ஆண்டு 254 பணிகள் ரூ.2.86 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் ரூ.170.73 இலட்சம் பொதுமக்களின் பங்கேற்பு நிதியாகும். நடப்பாண்டில் 45 பணிகளுக்கு ரூ.100.03 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் பொது மக்கள் பங்குத் தொகை ரூ.31.82 இலட்சம் அடங்கும்.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

1997–98ஆம் ஆண்டில் 11 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.14.09 கோடி செலவில் 1,818 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1998–99ஆம் ஆண்டிற்கு 10 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.9.96 செலவில் 1,091 பணிகள் செய்யப்பட்டுள்ளன. 1999–2000 ஆண்டு 9 ஊராட்சிகளில் 1,618 பணிகள் ரூ.8.42 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 932 பணிகள் ரூ.16.18 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படவுள்ளன.



### சமத்துவபுரம்

தமிழகத்திலேயே சேலம் மாவட்டத்தில்தான் 3 சமத்துவபுரங்கள் (நெய்க்காரப்பட்டி, கத்தேரி, கோனூர்) ஒரே நேரத்தில் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஒரே நாளில் திறந்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் சின்ன சீரகாப் பாடியில் நான்காவது சமத்துவபுரம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் நடுவலூரில் ஐந்தாவது சமத்துவபுரம் அமைக்கும் பணியும் துவங்கப்பட்டு விரைவில் முடிக்கப்பட்டுள்ளது.

### சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

கடந்த 3 ஆண்டுகளில் 893 பணிகள் ரூ.12.44 கோடி நிதியில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 155 பணிகள் ரூ.3.17 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

### வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

முதல் தொகுதி – நீர்வடிப்பகுதி திட்டத்தின் மூலம் 15 நீர்வடிப்பகுதிகளில் ரூ.300 இலட்சம் செலவில் 7,500 எக்டேர் நிலப்பரப்பு பயன்பெறும் வகையில் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 25 நீர்வடிப் பகுதிகளில் ரூ.50 இலட்சம் செலவில் 12.5 எக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தும் வகையில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்தில் ஆலத்தூர் நீர்வடிப்பகுதியில் ரூ.200 இலட்சம் செலவில் 5000 எக்டேர் நிலப்பரப்பு பயன்பெறும் வகையில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

கடந்த 3 ஆண்டுகளில் (1996–97 முதல் 1998–99 முடிய) 30,503 பயனாளிகளுக்கு ரூ.14.68 கோடி மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் (எஸ்.ஜி.எஸ்.ஒய்.)

1999–2000ஆம் ஆண்டில் புதியதாக துவங்கப்பட்டுள்ள இத்திட்டம் ஐ.ஆர்.டி.பி., டிரைசம், டோக்ரா, ஸிட்ரா, கோடிக் கிணறுகள் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து துவக்கப்பட்டதாகும். இத்திட்டத்தின்கீழ் 1999–2000ஆம் ஆண்டில் 5,373 பயனாளிகளுக்கு ரூ.4.87 கோடி மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 2000–2001ல் ரூ.5.18 கோடி மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப் பட்டுள்ளது.

## சேலம் மாவட்ட ஊராட்சி

கடந்த நான்கு ஆண்டுகளில் மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் மொத்தம் 387 பணிகள் ரூ.438 இலட்சம் செலவில் எடுக்கப்பட்டதில் 383 வேலைகள் முடிக்கப்பட்டது. 4 வேலைகள் நடைபெற்று வருகிறது. நடப்பு ஆண்டிற்கு மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.125 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## சேலம் மாநகராட்சி

கடந்த நான்கு ஆண்டுகளில் மாநகர மக்களின் பல்வேறு அடிப்படைத் தேவைகளுக்காக 8,244 பணிகள் ரூ.45.70 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளன.

## நெடுஞ்சாலைத்துறை

திட்டம் சாரா பணிகளில் கடந்த 4 ஆண்டுகளில் 465.64 கி.மீ. சாலைப் பணிகள் ரூ.14.95 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளன. திட்டப் பணிகளின் கீழ் மாநில சாலைகள், பிற மாவட்ட சாலைகள், நபார்டு சாலைகள் போன்ற பணிகள் ரூ.92.95 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

இத்துறையின் மூலம் 1996ஆம் ஆண்டு முதல் ஊரகப் பகுதிகளில் ரூ.15.31 கோடி மதிப்பீட்டில் 335 குடியிருப்புகளுக்கு கிராம குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்றுள்ளன. மின்விசை புனரமைப்புத் திட்டத்தின் மூலம் 173 குடியிருப்புகளுக்கு குடிநீர் திட்டங்கள் ரூ.238.49 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 16 குடியிருப்புகளுக்கு ரூ.24.75 இலட்சம் செலவில் குடிநீர் திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. ரூ.61 இலட்சம் செலவில் 45 குடியிருப்புகளுக்கு மேம்படுத்தப்பட்ட குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 8 பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சி விரிவாக்கப் பகுதிகள் ஆகியவை பயன்பெறும் வகையில் மூன்று கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ரூ.16.90 கோடி செலவில் துவக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. சென்ற ஆண்டு 405 குடியிருப்புகளுக்கு ரூ.14 கோடி செலவில் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சின்ன சீரகாப்பாடி சமத்துவபுரத்தில் ரூ.7.60 இலட்சம் மதிப் பீட்டிலும், நடுவலூர் சமத்துவபுரத்திற்கு ரூ.6.60 இலட்சம் மதிப்பீட்டிலும் குடிநீர் திட்டம் அனுமதிக்கப் பட்டுள்ளது.

## வருவாய்த்துறை

### இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் நிலப் பட்டாக்கள் வழங்குதல்

கடந்த நான்கு ஆண்டுகளில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 58,747 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நிலப்பட்டாக்கள் 783 நபர்களுக்கு 538.53 ஏக்கர் நிலத்திலும், நடப்பாண்டில் வீட்டுமனைப் பட்டாக்கள் இதுவரை 992 நபர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

## பொது விநியோகத் திட்டம்

சேலம் மாவட்டத்தில் 1,173 நியாயவிலைக் கடைகள் செயல்படுகின்றன. இவற்றில் முழுநேர நியாயவிலைக் கடைகள் 1,028, பகுதிநேர நியாயவிலைக் கடைகள் 138, மகளிரால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் 7–ம் செயல்பட்டு வருகிறது. இந்த நியாயவிலைக் கடைகள் மூலம் மொத்தம் 7,80,404 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து வருகின்றனர். குடும்ப அட்டைதாரர்களுக்குச் சரியான அளவில் மண்ணெண்ணெய் கிடைக்கவேண்டும் என்கிற நோக்கத்தில் சேலம் மாவட்டத்தில் 20 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு, இவற்றில் 14 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் துவங்கப்பட்டு செயல் படுகின்றன. மேலும், ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் ஆத்தூர் நகரில் துவக்க கட்டுமானப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. 30,000 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு நீக்கப்பட்டுள்ளன.

## கூட்டுறவுத்துறை

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 2000–2001ஆம் ஆண்டில் நியாயவிலைக் கடைகளுக்கு இலவச கட்டடங்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்க தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 21 முழுநேர நியாயவிலைக்கடைகள், 8 பகுதிநேரக் கடைகள் உள்ளன. இதில் 12 முழுநேர நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் உள்ளது. மீதமுள்ள 9 நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன.



### விடுதி மாணவ மாணவியர்களுக்கு உண்டி உறைவுக் கட்டணம்

கடந்த நான்கு ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட 7,340 மாணவ மாணவியர்களுக்கு இலவச உணவு, உறைவிடம் அளித்த வகையில் ரூ.2.80 கோடி செலவிடப் பட்டுள்ளது.

### இலவச தொழில் கருவிகள்

கடந்த நான்கு ஆண்டுகளில் 769 சலவைத் தொழிலாளர்களுக்கு ரூ.8.97 இலட்சம் மதிப்புள்ள சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. 689 போயர் இனத்தவர்களுக்கு ரூ.2.88 இலட்சம் மதிப்புள்ள கல்லுடைக்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. 231 நாவிதர்களுக்கு ரூ.47,000 மதிப்புள்ள சவரக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது.

## பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

### இலவச வீட்டுமனைப்பட்டா

சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் 3,914 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1.36 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### கல்வி உதவித்தொகை

கடந்த நான்கு ஆண்டுகளில் 1,61,012 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.3.63 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### இலவச சீருடைகள்

கடந்த நான்கு ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 5,850 மாணவ மாணவியருக்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.18.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 1,350 மாணவ மாணவியர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

### இலவச பாட புத்தகங்கள்

கடந்த நான்கு ஆண்டுகளில் 97,664 பிற்படுத்தப் பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு இலவச பாட புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளது. இதற்காக ரூ.52.87 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 24,067 மாணவ மாணவியர்களுக்கு இலவச பாட புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளது.

### சிறந்த மாணவ/மாணவியர்களுக்கான பரிசு

கடந்த நான்கு ஆண்டுகளில் 90 மாணவ மாணவியர்களுக்கு ரூ.2.29 இலட்சம், தந்தை பெரியார் நினைவு பரிசு மற்றும் அறிஞர் அண்ணா நினைவு பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

### தோட்டக்கலைத் துறை

கடந்த நான்கு ஆண்டுகளில் தோட்டக்கலைத் துறை மூலம் பல்வேறு திட்டங்கள் ரூ.4.59 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இத்திட்டங்கள் ரூ.1.65 கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் டான்ஹோப் திட்டம் மூலம் 5 சில்லறை விற்பனை அங்காடிகள் ரூ.5.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் கொள்முதல் மையம் மற்றும் 7 சில்லறை விற்பனை அங்காடிகள் அமைக்க ரூ.24.50 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### நகராட்சி நிருவாகம்

சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர், மேட்டூர் மற்றும் எடப்பாடி ஆகிய 3 நகராட்சிகளிலும் 1996–97 ஆம் ஆண்டு முதல் 1998–99 முடிய பல்வேறு திட்டப் பணிகளின்கீழ் 1,763 பணிகள் ரூ.8.13 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1999–2000 ஆம் ஆண்டில் 461 பணிகள் ரூ.3.05 கோடி செலவில் பல்வேறு திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டதில், 425 பணிகள் முடிக்கப்பட்டு 36 பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. 2000–2001ஆம் ஆண்டில் சிறப்பு சாலை திட்டப்பணிகளின்கீழ் 72 பணிகள் ரூ.160 கோடி செலவிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதர பல்வேறு பணி

களுக்காக நடப்பாண்டிற்கு மூன்று நகராட்சிகளுக்கு ரூ.0.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**பொது சுகாதாரத்துறை**

1996–2000ஆம் ஆண்டு முடிய 35 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.2.34 கோடியில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது.

வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 13–10–2000 தேதி முடிய 294 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இந்த முகாம்களில் 2,80,764 நபர்களைப் பரிசோதித்து சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது. இவர்களில் 12,616 நபர்கள் மேல் சிகிச்சைக்காக பல்வேறு அரசு மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்கள். 3,832 நபர்கள் மேல் சிகிச்சைப் பெற்று பயனடைந்துள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் வாழ்வொளி திட்டத்தின்கீழ் முதல் சுற்று மருத்துவ முகாம் நடைபெற்று வருகின்றது. இத்திட்டம் மிகவும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**உழவர் சந்தை**

சேலம் மாவட்டத்தில் 21–12–99 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சூரமங்கலம், அம்மாப்பேட்டை காமராசர் காலனி மற்றும் ஆத்தூர் ஆகிய 3 இடங்களில் உழவர் சந்தைகள் துவக்கி வைக்கப்பட்டன. தாதகாப்பட்டியில் 4வது உழவர் சந்தை 19–5–2000 அன்று தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. 5ஆவது உழவர் சந்தை 11–7–2000 அன்று மேட்டூர் நகரில் ஆரம்பிக்கப்பட்டது. ஆட்டையாம்பட்டி பேரூராட்சியில் 6ஆவது உழவர் சந்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கால்நடை பராமரிப்புத் துறை**

சேலம் மாவட்டத்தில் 1996ஆம் ஆண்டு முதல் 177 கறவை மாடுகள், 283 செம்மறி ஆட்டுப்பட்டிகள் ரூ.43.82 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பரவி வாழும் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 1997–99ஆம் ஆண்டில் 100 யூனிட்டுகள் ரூ.5,00,000 மதிப்பிலும் மற்றும் 1998–99 ஆம் ஆண்டில் 40 யூனிட்டுகள் ரூ.3,60,000 மதிப்பிலும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 1996ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

1. வீரபாண்டி 2. ஏற்காடு 3. ஓமலூர்

அதேபோல் கீழ்க்கண்ட இடங்களில் புதிய கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

1. ஆட்டையாம்பட்டி 2. உத்தமசோழபுரம் 3. பாலிக் கடை 4. வெள்ளாளகுண்டம் 5. வெள்ளாளபுரம்

சேலம் மாவட்டத்தில் தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டம் 28.1.2000 அன்று சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டியில் துவக்கப்பட்டு தற்போது பிப்ரவரி 2000 மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு கிராமத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

1. இதுவரை நடத்தப்பட்ட முகாம்களின் எண்ணிக்கை ....... 168
2. பயனடைந்த கால்நடைகள் எண்ணிக்கை ....... 4,19,230
3. தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை ....... 4,177
4. தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்ட கால்நடைகளில் சிகிச்சைக்கு வந்த கால்நடைகள் எண்ணிக்கை ....... 845

**முதியோர் ஓய்வூதியம்**

கடந்த நான்கு ஆண்டுகளில் முதியோர் ஓய்வூதியம் 26,978 நபர்களுக்கும், விதவை ஓய்வூதிய திட்டத்தின்கீழ் 22,718 நபர்களுக்கும், ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டத்தின்கீழ் 1,863 நபர்களுக்கும், விவசாய தொழிலாளர் ஓய்வூதியம் 3,609 நபர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட 3,061 நபர்களுக்கும், ஆக மொத்தம் 58,229 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 6,552 நபர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற குடும்பத்தில் பொருளீட்டுபவர் இறந்தால் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 13,637 நபர்களுக்கு ரூ.918.16 இலட்சமும், தொழிலாளர் விபத்து நிவாரண திட்டத்தின்கீழ் 424 நபர்களுக்கு ரூ.56.75 இலட்சமும், சாலை விபத்தில் இறந்த 1,003 நபர்களின் குடும்பத்திற்காக ரூ.21.64 இலட்சமும் நிதி வழங்கப்பட்டுள்ளது.

## பேரூராட்சிகள்

சேலம் மாவட்டத்தில் மொத்தம் 34 பேரூராட்சிகள் உள்ளன. இவற்றில் 824.83 கி.மீ. தார்சாலை, 211.43 கி.மீ. மெட்டல் சாலை, 217.16 கி.மீ சிமெண்ட் சாலை, 109.22 கி.மீ. மண்சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சி பகுதிகளில் 1,122 ஆழ்துளைக் கைப்பம்புகள், 231 பவர்பம்புகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 7,549 பணிகள் ரூ.2,234.17 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

மார்ச் 2001–க்குள் 3,100 சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ஜூன் 2000 வரை 1,451 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. 25,623 உறுப்பினர்களில் 6,532 ஆதிதிராவிடர்கள். 265 மலைவாழ் மக்கள். மகளிர் சேமிப்பு ரூ.293.33 இலட்சங்களாகும், தனிநபர் சேமிப்பு மாதம் ஒன்றிற்குச் சராசரியாக ரூ.41.52. சங்க கடன் வழங்கியது ரூ.424.41 இலட்சம். ஒரு நபருக்குச் சராசரி கடன் ரூ.1,242. கடன் வசூல் 95 சதவிகிதம். 151 மகளிர் குழுக்களுக்கு ரூ.30.03 இலட்சங்கள் வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது. திரும்ப செலுத்தியது 100 சதவிகிதம். பொன்விழா கிராம சுய உழைப்பாளிகள் திட்டத்தின் மூலம் 224 குழுக்களுக்கு, சுழற்சி நிதியாக குழு ஒன்றிற்கு ரூ.10,000 வீதம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வழங்கியுள்ளது.

## மாவட்ட தொழில் மையம்

மாவட்டத்தொழில் மையம் மூலம் தொழில் நிறுவனங்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் முதலீட்டு மானியமாக ரூ.137.42 இலட்சமும், ஜெனரேட்டர் மானியமாக ரூ.6.21 இலட்சமும், மின்மானியமாக ரூ.93.23 இலட்சமும், விற்பனைவரி தள்ளுபடி/தள்ளிவைப்பு ரூ.250.75 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. பிரதமர் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 2,243 இளைஞர்களுக்கு ரூ.13.86 கோடி கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. 2000–2001 ஆண்டில் 680 இளைஞர்களுக்குக் கடனுதவி வழங்கப்பட உள்ளன.

## பெரியார் பல்கலைக்கழகம்

தந்தை பெரியார் பெயரில் ''பெரியார் பல்கலைக் கழகம்'' 17.9.97 அன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. பல்கலைக்கழகத்திற்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.21 கோடி அனுமதிக்கப்பட்டு முதல் கட்டமாக ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. 12 புதிய துறைகள் துவங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. பல்கலைக்கழகத்தை மேம்படுத்தும் வகையில் இன்டர்நெட்வர்க் வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

## சமூகநலத்துறை

கடந்த நான்கு ஆண்டுகளில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 8,433 பெண்களுக்கு ரூ.8,43,30,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தில் 174 பெண்களுக்கு ரூ.7,26,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.


அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 19 பெண்களுக்கு ரூ.78,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 26 பேர்களுக்கு ரூ.1,82,000 வழங்கப்பட்டுள்ளது.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 146 நபர்களுக்கு ரூ.18,70,000 வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் 34,060 பெண்களுக்கு ரூ.17,82,25,000 வழங்கப்பட்டுள்ளது.





**விளையாட்டு உடற்பயிற்சி மையங்கள் மற்றும் இளைஞர் மன்றங்கள்**

சேலம் மாவட்டத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில் 141 மையங்களும், 3 நகராட்சிகளில் 7 மையங்களும், 34 பேரூராட்சிகளில் 55 மையங்களும், மொத்தம் 203 மையங்கள் துவங்கப்பட்டு இளைஞர்கள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும் 101 மையங்கள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இளைஞர் மன்றங்கள் துவங்கப்பட்டு அவற்றின் செயல்பாட்டிற்கான பயிலரங்கம் விரைவில் நடைபெறவுள்ளது.

**அய்யன் திருவள்ளுவர் நூலகம்**

திருவள்ளுவர் தினமான 16.1.2000 அன்று சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து (385) ஊராட்சிகளிலும் அய்யன் திருவள்ளுவர் நூலகம்/படிப்பகம் அமைக்கப்பட்டது.

ஒவ்வொரு ஊராட்சியிலும் அனுமதிக்கப்பட்ட ரூ.5,000 மானியத்தில், ரூ.3,000 செலவில் தளவாட சாமான்கள் வாங்கப்பட்டும், ரூ.2000 செலவில் புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**மருத்துவத் துறை**

கடந்த 4 ஆண்டுகளில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு கோடி ரூபாய் செலவில் சி.டி. ஸ்கேன் கருவி இம்மருத்துவமனையில் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் சேலம் மற்றும் அண்டைய மாவட்டங்களிலிருந்து வரும் 16,634 நோயாளிகள் பயனடைந்திருக்கிறார்கள். மேலும் ரூ.3 கோடி செலவில் சிறப்பு மருத்துவ கருவிகள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் வீடியோ எண்டாஸ்கோப் என்னும் குடல் உள்நோக்கு கருவி மூலம் சுமார் 1200 நோயாளிகள் பயனடைந்திருக்கிறார்கள். ரூ.5 இலட்சம் செலவில் தேசிய கண்ணொளி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.4 கோடி செலவில் நவீன மருத்துவமனை நான்கு அடுக்கு மாடி கட்டப்பட்டு வருகிறது. இதில் பொதுமக்கள் பங்களிப்பு ரூ.1 கோடியாகும்..

**வேளாண்மைத் துறை**

ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தில் நான்கு ஆண்டுகளில் மொத்தம் ரூ.115.08 இலட்சமும், தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தில் ரூ.63.40 இலட்சமும் தேசிய பயறுவகை பெருக்கு திட்டத்தில் ரூ.29.78 இலட்சமும், எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தில் ரூ.122.97 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு சார்புத் திட்டத்தில் மொத்தம் ரூ.391.689 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**கல்வித் துறை**

கடந்த நான்கு ஆண்டுகளில், 2,470 இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி மற்றும் ஓவிய ஆசிரியர்கள் பணிமூப்பு அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். 42 துவக்கப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. 23 துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 10 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 உயர்நிலைப் பள்ளிகளை மகளிர் பள்ளிகளாக பிரித்தும், 24 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு செயல்படுகின்றன.

1996–97ஆம் ஆண்டு முதல் 103 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகளும், 67 பள்ளிகளில் கழிவறைகளும், 35 பள்ளிகளில் அறிவியல் ஆய்வகமும் அமைக்கப்பட்டுள்ளன. உத்தமசோழபுரத்தில் புதியதாக அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று துவக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 68 மேனிலைப் பள்ளிகளில் கணினி பாடப்பிரிவு துவக்கப்பட்டுள்ளது.

1999–2000ஆம் கல்வியாண்டில் சேலம் மாவட்டத்தில் மார்ச் 2000 பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் ஒருவருக்கும், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் ஒருவருக்கும், தனியார் நிதி உதவி பெறும் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் ஒருவருக்கும், ஆக மொத்தம் மூன்று மாணவர்கள் 29.7.2000 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் அவர்களால் பாராட்டப்பட்டுள்ளனர். அதுசமயம் மாணவர்களுக்கு உயர் கல்வியில் பயிலும் செலவினத்திற்கான உதவித் தொகை முன்பணம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.

அதுபோன்று ஏப்ரல் 2000–த்தில் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று அதிக மதிப்பெண்கள் பெற்ற ஏழு மாணவ/மாணவியர்களுக்கு உயர் கல்வி செலவினத்திற்கு முன்பணமும் பாராட்டு சான்றிதழும் முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

### கண்ணொளி வழங்கும் திட்டம்

கடந்த நான்கு ஆண்டுகளில் 2,774 நபர்களுக்குக் கண்புரை நீக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இவைகளுக்கென கடந்த இரண்டு ஆண்டுகளாக 1,888 அறுவை சிகிச்சைகளும் மற்றும் இவற்றில் 1,425 நபர்களுக்கு கண்ணில் உள்ளாடி (லென்ஸ்) பொருத்தப் பட்டுள்ளது.

### கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தைச் சார்ந்துள்ள 562 சங்கங்களிடமிருந்து நாள் ஒன்றுக்கு 2,02,393 லிட்டர் பால் சேகரிப்புக்குழு மூலம் சேகரிப்பு செய்து, பால் நுகர்வோர்களின் நலன் கருதி சுமார் 70,000 லிட்டர் பால் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. ஆதிதிராவிடர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்தில் ஆதிதிராவிடர் நல வாழ்வுத் திட்டம், தாட்கோ மற்றும் தாட்கோ கன்று வளர்ப்பு திட்டம் மூலம் கீழ்க்கண்டவாறு மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

| வருடம் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மானியம் (ரூ.) |
|---|---|---|
| 1996–97 | 360 | 18,48,000 |
| 1997–98 | 119 | 6,33,480 |
| 1998–99 | 95 | 5,84,520 |
| 1999–2000 | 40 | 3,20,000 |

சேலம் மாவட்டத்திலுள்ள பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பயனாளிகளுக்கு 7 சதவிகிதம் வட்டியில் கறவை மாடுகள் வாங்க தாப்செட்கோ அலுவலகம் மூலம் கீழ்க்கண்டவாறு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

| வருடம் | பயனாளிகள் எண்ணிக்கை | மொத்தம் கடன் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1998–99 | 60 | 14,40,000 |
| 1999–2000 | 122 | 36,60,000 |

19 சங்கங்களுக்கு 50 சதவீதம் மானியத்தில் பால் பரிசோதனைக்கென மில்கோ டெஸ்டர் மைனர் வாங்க ரூ.2,56,500 ஊரக வளர்ச்சி முகமை மூலமும், பகுதி–2 திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மானியத்தில் இரண்டு பால் பரிசோதனைக் கருவி மில்கோ டெஸ்டர் மைனர் வாங்க ரூ.21,000ம் வழங்கப்பட்டுள்ளது.



### தமிழ்நாடு மின்சார வாரியம்

கடந்த 4 ஆண்டுகளில் 44 உயர் அழுத்த தொழில் மின் இணைப்புகள் ரூ.74 இலட்சம் செலவிலும், 4,745 விவசாய மின் இணைப்புகள் ரூ.1,494.20 இலட்சத்திலும், 4,971 குடிசை வீடுகளுக்கு ரூ.41.39 இலட்சத்திலும், 10891 LT சர்வீஸ் ரூ.4,356 இலட்சத்திலும், 615 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு ரூ.246 இலட்சத்திலும், 76,232 வீட்டு மின் இணைப்புகள் ரூ.1,924.84 இலட்சத்திலும், 4,930 தெருவிளக்குகளுக்கு ரூ.179.03 இலட்சத்திலும், 893 புதிய மின் மாற்றி ரூ.1,582.50 இலட்சத்திலும் வழங்கப்பட்டுள்ளது.

### சேகோசர்வ்

ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியில் முன்னோடியாக விளங்கும் இம்மாவட்டத்தில், இக்கூட்டுறவு நிறுவனம் 1996–97ஆம் ஆண்டில் 21.24 இலட்சம் மூட்டைகளை விற்று ரூ.189.95 கோடி வணிகமும், 1997–98ஆம் ஆண்டில் 20.15 இலட்சம் மூட்டைகளை விற்று ரூ.192.07 கோடிக்கு வணிகமும், 1998–99ஆம் ஆண்டு 23.54 மூட்டைகளை விற்று ரூ.110.24 இலட்சம் இலாபமும், 1999–2000ல் 20.67 இலட்சம் மூட்டைகளை விற்று ரூ.37.30 இலட்சம் இலாபமாக பெற்றுள்ளது.

### வனத்துறை

கடந்த மூன்று ஆண்டுகளில் சேலம் வன மண்டலத்தில் 16,120 எக்டேர் பரப்பளவில் மிகவும் நலிவுற்றுள்ள காப்புக்காடுகளில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1,393.62 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வனத்துறை சார்பில் குரும்பப் பட்டியில் வன உயிரியல் பூங்கா மேம்படுத்தும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மண் அரிப்பைத் தவிர்க்கும் பொருட்டு தோட்டங்கள் மற்றும் ஈடுசெய் தோட்டங்களும் எழுப்பப்படுகிறது. சிறு வன பொருட்கள் ஏலம் மூலம் அரசுக்குக் கணிசமான வருமானம் கிடைக்கப் பெறுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 1,158.70 மெ.டன். கடத்தப்பட்ட சந்தனக் கட்டைகள் பிடிக்கப்பட்டு 438 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு 2,283 நபர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 1,586.03 மெ.டன். அளவுள்ள சந்தனக் கட்டைகள் ஏலம் விடப்பட்டதன் மூலம் அரசுக்கு ரூ.369.55 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

## இந்துசமய அறநிலையத் துறை

### சமத்துவபுரம்

சேலம் இணை ஆணையர் மண்டலத்தில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 14.26 எக்டேர் நிலங்கள் அரசு சமத்துவபுரம் அமைக்கும் திட்டத்தின் கீழ் சட்டப்பிரிவு 34ன்படி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### இலவசத் திருமணம்

திருக்கோயில்கள் சார்பாக 247 இணைகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது.

### ஒருகால பூசைத் திட்டம்

ஒருகால பூசைகூட செய்ய இயலாத 155 திருக்கோயில்களுக்கு ரூ.25,000 நிலை வைப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் கிடைக்கப்பெறும் வட்டியினைக் கொண்டு ஒரு கால பூசைகள் செய்ய நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### கிராமப்புறத் திருப்பணித் திட்டம்

இத்துறையின் ஆளுகையின்கீழ் உள்ள மற்றும் நலிவடைந்த கிராமப்புறத் திருக்கோயில்கள் நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.25,000 வீதம் 11 திருக்கோயில்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றது.

அரிசன காலனி மற்றும் பழங்குடி வகுப்பினர் காலனியில் உள்ள அரசு ஆளுகையின்கீழ் இல்லாத கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி திட்டத்தின் கீழ் 18 கோயில்களுக்கு ரூ.25,000 அளிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் அர்ச்சனை

அனைத்து திருக்கோயில்களிலும் தமிழ் அர்ச்சனை புத்தகங்கள் விநியோகம் செய்யப்பட்டு, தமிழில் அர்ச்சனை நடைபெற்று வருகிறது.

### புத்தொளிப் பயிற்சிப் பள்ளி, பயிற்சி வகுப்புகள்

சேலம் மாவட்டத்தில் இரண்டு திருக்கோயில்களில் புத்தொளிப் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு ஓதுவார்கள், அர்ச்சகர்கள் ஆகியோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அர்ச்சகர்கள், ஓதுவார்கள், எழுத்தர்கள், ஆய்வாளர்கள் மற்றும் செயல் அலுவலர்களுக்கு சைவ, வைணவ சமய நெறிமுறை அறிந்துகொள்ளும் வகையில் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளது.

கோடைக்கால பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு பொதுமக்களும் சைவ, வைணவ நெறிமுறைகளை அறிந்துகொள்ளும் வகையில் 7 நாட்கள் நடத்தப்பட்டது.

## ஓய்வூதியம்

பதவியிலிருந்து ஓய்வு பெற்ற 19 அர்ச்சகர் களுக்கும், வேதபாராயணம் ஒருவருக்கும் தலா ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

## திருக்குறள் வகுப்புகள்

சேலம் மாவட்டத்தில் உள்ள 4 திருக்கோயில் களில் பொது மக்களுக்குத் திருக்குறளைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளும் வகையில் வாரம் ஒருநாள் திருக்குறள் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

## வழிபடுவோர் தங்கும் விடுதிகள் கட்டுதல்

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகளின் வசதிக்காக 5 திருக்கோயில்களில் வழிபடுவோர் தங்கும் விடுதிகள் கட்ட நடவடிக்ளை எடுக்கப்பட்டு வருகிறது.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.2.08 கோடி செலவில் 7,403 ஏழை ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களும், ரூ.3.30 கோடி செலவில் 86,516 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையும், ரூ.1.50 இலட்சம் செலவில் பட்ட/பட்டயதாரிகளுக்கு குடும்ப கல்வித் திட்டத்தின்கீழ் 10 பேர்களுக்கு சுய வேலை வாய்ப்பும், ரூ.22.97 இலட்சம் செலவில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் தீருதவியும் வழங்கப்பட்டுள்ளது.

மலைவாழ் பழங்குடியினர் மக்களுக்கு ரூ.41.38 இலட்சம் செலவில் 127 நபர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிகொடுத்தும், ரூ.12.20 இலட்சம் செலவில் 180 நபர்களுக்கு இலவசமாக ஆடுகளும் வழங்கப் பட்டுள்ளது.



கடந்த நான்கு ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் முன்னேற்றத்திற்காக விவசாயம் சார்ந்த தொழில் செய்வதற்கும், சிறு தொழில்கள் செய்வதற்கும் தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தொழில் செய்யவும், பெண் குழந்தைகள் தொடர்ந்து, கல்வி கற்பதற்கு ஊக்குவிப்பதற்காகவும், படித்த மாணவ, மாணவியர்கள் சுய தொழில் வேலை வாய்ப்பு பயிற்சிகள் மூலம் சுய தொழில் செய்வதற்காகவும் தாட்கோ மூலம் 35,056 பயனாளிகளுக்கு ரூ.5.63 கோடி மானியம் கொடுக்கப் பட்டுள்ளது. 13 ஆதிதிராவிட விவசாயிகளுக்கு டிராக்டர்கள் ரூ.48.50 இலட்சம் கடனில் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது துப்புரவு பணியாளர்கள் பொருளாதார மேம்பாட்டிற்காக சானிடரி மார்ட் என்ற புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்தச் சிறப்புத் திட்டத்தின் கீழ் 22 பெண்களுக்கு ஆட்டோ ஓட்டும் பயிற்சி அளிக்கப்பட்டு, உரிமம் பெற்றுள்ள மகளிருக்கு ஆட்டோக்கள் வழங்க சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மலைவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மினி பஸ் மற்றும் ஜீப்புகள் வழங்க சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. 70 பட்டதாரி ஆதிதிராவிட மாணவர்களுக்கு மாதம் தலா ரூ.400 உதவித் தொகையுடன் கணினி பயிற்சி அளிக்கப்படுகிறது.

## தமிழ் புலவர் நியமனம்

சேலம் மாவட்டத்தில் உள்ள 5 திருக்கோயில் களில் தமிழ் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

## கருணை இல்லம்

சேலம் நகரில், அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயிலில் கருணை இல்லம் துவங்கப்பட்டு 24 மாணவர்கள் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

## ஓதுவார் நியமனம்

சேலம் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்களில் புதியதாக ஓதுவார் நியமனம் செய்ய முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளது.

**குழந்தை தொழிலாளர் மீட்பு மற்றும் மறுவாழ்வளித்தல் இயக்கம்**

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் (ஸ்மைல்) சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் அபாயகரமான தொழில்களில் இருந்து மீட்கப்பட்ட 2000 குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க 42 குழந்தைத் தொழிலாளர் மையங்கள் ஏற்படுத்தப் பட்டு, அக்குழந்தைகளை, அம்மையங்களில் சேர்த்து அவர்களுக்கு இலவச மதிய உணவு, வாழ்வொளித் திட்டத்தின் கீழ் மருத்துவ பரிசோதனை, மாதாந்திர உதவித் தொகை தலா ரூ.100, இலவச பாட புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டு, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை சிறப்பான கல்வி அளிக்கப்பட்டு வரப்படுகிறது.

**தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்**

கடந்த நான்கு ஆண்டுகளில் ஆண்டிப்பட்டி ஏரியில் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு ரூ.763.35 இலட்சத்தில் 588 மாடி குடியிருப்புகளும், சேலத்தாம்பட்டியில் 840 மாடி குடியிருப்புகள் ரூ.834 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற குடிசைப் பகுதிகளின் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 73.85 இலட்சம் செலவில் 4,105 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பணிகளும், இந்த ஆண்டு ரூ.31 இலட்சம் செலவில் 1,600 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பணிகளும் நடைபெற்று வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் தீப்பிடிக்காத கல்நார் தகடு கூரை வீடுகள் 1,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.127 இலட்சம் செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு 1,100 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.162 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாவட்ட மறுவாழ்வு மையம்**

கடந்த நான்கு ஆண்டுகளில் இம்மையத்தின் மூலம் 6,628 பயனாளிகளுக்கு ரூ.49,00,518 செலவில் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்–1) படிப்படியாக வளர்ச்சியடைந்து 949 பேருந்துகளை 20 பணிமனைகள் மூலமாக இயக்கி வருகிறது. இப்பேருந்துகளைத் தினந்தோறும் சுமார் 3.95 இலட்சம் கி.மீ. தூரம் இயக்குவதன் மூலம் சுமார் 11.46 இலட்சம் பயணிகளுக்குப் பேருந்து வசதி வழங்கப்படுகிறது. மேலும், இக்கழகத்தில் 6,674 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 1 முதல் பிளஸ் 2 வரை பயிலும் 1,12,354 மாணவ, மாணவியர்களுக்கு இலவச பயண அனுமதிச் சீட்டுகளும், 50 சதவீதம் சலுகை கட்டணத்தில் 48,659 மாணவ, மாணவியர்களும், (வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டில் 4,694 பேர்) பயனடைந்துள்ளனர்.

சேலம், நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 9 உழவர் சந்தைகளுக்குத் தினசரி 101 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதன்மூலம் தினசரி 450 விவசாயிகள் பயனடை கின்றனர். இந்த பேருந்துகள் மூலம் தினசரி 28,992 கிலோ காய்கறிகள் உழவர் சந்தைகளுக்குக் கொண்டுவரப்படுகின்றன.

**சுற்றுலாத் துறை**

கடந்த நான்கு ஆண்டுகளில் இத்துறையின் மூலம் ஏற்காட்டில் ரூ.33.03 இலட்சம் செலவில் புதிய குடில்கள் கட்டப்பட்டு முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏற்காட்டில் தற்போதுள்ள தொலைநோக்கி கருவி மிகவும் பழமை வாய்ந்ததாகும். எனவே, ரூ.3 இலட்சம் செலவில் புதிய தொலைநோக்கி கருவி ஜெர்மனி யிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு ஏற்காடு லேடீஸ் சீட் தொலைநோக்கி இல்லத்தில் விரைவில் பொருத்தப்படவுள்ளது.

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் ரூ.35.55 இலட்சத்தில் தங்கும் விடுதி/உணவகம் மற்றும் மேட்டூர் அணைப்பூங்கா அழகுபடுத்தும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. தங்கும் விடுதி/உணவகம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

**மினிப் பேருந்துகள்**

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் போக்குவரத்து வசதியில்லாத கிராமங்களுக்குப் பயன்படும் வகையில் மினி பேருந்துத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இது தொடர்பாக தடையாய் இருந்த வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் தீர்க்கப்பட்டு தற்போது அனுமதி வழங்கப்பட்டு வருகின்றன. இதில் அரசு நிர்ணயித்த முழு இலக்கான 250 பேருந்து களுக்கு மாவட்ட ஆட்சியரால் செயல்முறை ஆணை வழங்கப்பட்டுவிட்டது. அவற்றில் 110 வாகனங்களுக்கான பதிவுருக்கள் வரப்பெற்று அனுமதி வழங்கி வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றது. மீதி உள்ள செயல்முறை ஆணைகளுக்குரிய வாகனங்கள் கொண்டு வரும்போது உரிய மினி பேருந்து அனுமதி உடனுக்குடன் வழங்கப்படுகிறது. இவ்விலக்கு முழுமை பெற்றவுடன் அனைத்து கிராமங்களும் பேருந்து வசதி பெறும்.

❑ மு. நா. கிருட்டிணசாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.

★ ★ ★

# 100–வது உழவர் சந்தை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்லவபுரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற 100வது உழவர் சந்தை திறப்பு விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு ஆயிரக்கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். 100வது உழவர் சந்தை என்ற காரணத்தினால் பல்லவபுரமே இன்றைய தினம் எழில் குலுங்க காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் 14–ஆம் நாள் நேரு பிறந்த நாளில் முதல் உழவர் சந்தை மதுரை மாநகரத்தில் தொடங்கப்பட்டது. ஓராண்டுக்குப் பிறகு இன்றைக்கு அதே நேரு பிறந்த நாளில் 100வது உழவர் சந்தையும் திறக்கப்பட்டுள்ளது. நாம் எந்தவொரு காரியத்தைச் சொன்னாலும், அது சொன்னபடி நடக்கும் என்பதற்கு அடையாளமாகத்தான் மதுரையிலே முதல் உழவர் சந்தையைத் திறந்து வைக்கும் போதே சொன்னேன். அடுத்த ஆண்டிற்குள் 100 உழவர் சந்தைகள் தமிழகத்திலே திறக்கப்படுமென்று குறிப்பிட்டேன். சொன்னதைச் செய்வோம் என்பதற்கேற்ப இன்றைக்கு இந்த 100–வது உழவர் சந்தை திறக்கப்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக நேரு பிறந்த நாள், இந்தியத் திருநாட்டிலே ஒரு முக்கியமான நாள், குழந்தைகள் நாளாகக் கொண்டாடப்படுகின்ற நாள். குழந்தைகள் நாள் என்று சொல்லும்போது எனக்கு நினைவிற்கு வந்தது. இந்த உழவர் சந்தை பற்றி தம்பி வைரமுத்து எழுதிய பாடலில் இந்தக் காய்கறிகள், கனிகள் எல்லாம் கடைகளிலே குவிந்திருப்பது, குழந்தைகள் படுத்திருப்பதைப் போல் இருக்கிறது என்று குறிப்பிட்டார். எனவே குழந்தைகள் நாளாகக் கொண்டாடப்படுகின்ற பண்டித நேருவின் பிறந்த நாளில் 100வது உழவர் சந்தை திறக்கப்படுவது எல்லா வகையிலும் பொருத்தம் என்று நான் கருதுகிறேன்.

1999–2000–ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை சட்டப் பேரவையில் 17.3.1999 அன்று நான் அளித்து உரையாற்றிய போது :

"காய்கறிகள், பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கும், அப்பொருள்களை நகர்ப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று நியாயமான விலையில் விற்பதற்கும், தனியார் மற்றும் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் பங்கேற்கும் திட்டமொன்று வரும் நிதியாண்டிலிருந்து துவங்கப்படும்'' என்று அறிவித்திருந்தேன்.

அந்த அறிவிப்பினைச் செயலாக்கும் வகையில், 25.10.1999 அன்று பின்வருமாறு குறிப்பிட்டேன்.

''காய்கறிகள், பழங்கள் முதலான வேளாண் விளைப்பொருட்களை இடைத்தரகர்கள், வணிகர்கள், குறுக்கீடு ஏதுமின்றி உழவர்கள் நுகர்வோருக்கு நேரிடையாக விற்பனை செய்ய ஏதுவாக, மாநிலத்தில் நகர்ப்புறங்களில், 100 இடங்களில் உழவர் சந்தைகள் நிறுவப்படும்" என்று அறிவித்தேன்.

அதற்கேற்பத்தான் இந்த 100 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டிருகின்றன. எங்கெங்கே இவைகள் இந்த ஓராண்டு காலத்திலே திறக்கப்பட்டன என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அப்படி நினைவூட்டுவது திறக்கப்பட்ட உழவர் சந்தைகளைச் சுட்டிக்காட்டுவதற்காக அல்ல. இன்னும் திறக்கப்படாத இடங்கள் எவையெவை என்பதை அந்தந்த மாவட்டங்களிலே உள்ள ஆட்சித்தலைவர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்து அவைகளையும் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நினைவூட்டுகிறேன்.

மதுரை மாவட்டத்தில் 6 உழவர் சந்தைகள், திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், திருவாரூர் மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 4, சேலம் மாவட்டத்தில் 6 உழவர் சந்தைகள்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், தேனி மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், நெல்லை மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், விழுப்புரம் மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், தருமபுரி மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், வேலூர் மாவட்டத்தில் 7 உழவர் சந்தைகள், நாமக்கல் மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், சிவகங்கை



மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், விருதுநகர் மாவட்டத்தில் 5 உழவர் சந்தைகள், கோவை மாவட்டத்தில் 8 உழவர் சந்தைகள், தூத்துக்குடி மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், கரூர் மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், கடலூர் மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், திருவள்ளூர் மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், குமரி மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், நாகை மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், பெரம்பலூர் மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், ஈரோடு மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், நீலகிரி மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள் என மொத்தம் 99 உழவர் சந்தைகள் இதுவரையிலே அமைக்கப்பட்டுள்ளன. இது 100–வது உழவர் சந்தை.

**100 உழவர் சந்தைகளுக்குக் கட்டுமானப் பணிகளுக்கு ஆன செலவு ரூ.11 கோடி**

இந்த 99 உழவர் சந்தைகளில் கடந்த ஓராண்டில் இதுவரை 16 கோடியே 93 இலட்சத்து 36 ஆயிரத்து 963 கிலோ எடையுள்ள காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த 99 உழவர் சந்தைகளிலும் விற்பனை செய்யப்பட்டுள்ள காய்கறிகளின் மதிப்பு 112 கோடியே 85 இலட்சத்து 35 ஆயிரத்து 326 ரூபாய். இதிலே ஒன்றை உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

இந்த 100 சந்தைகளை நாம் அமைத்திருக்கிறோம் என்றால் ஒன்றும் ஏராளமாக செலவு செய்து அமைத்திடவில்லை. 100 சந்தைகளுக்கும் இதன் கட்டுமானப் பணிகளுக்காக ஆகியிருக்கின்ற செலவு ஏறத்தாழ 11 கோடி ரூபாய்தான் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதனால் ஏற்படுகின்ற இலாபம் யார் யாருக்கு ? நுகர்வோருக்கும் இதனால் இலாபம், அதைப் போல விவசாயிகளுக்கும் இதனால் இலாபம் முன்பெல்லாம் நம்முடைய வீடுகளிலே உள்ள தாய்மார்கள் காய்கறி கடைக்குச் சென்று காய்கறிகளை வாங்குவது என்றால் அங்கே பேரம்பேசி முடிவெடுக்க அரைமணி நேரம் ஆகும். இவ்வளவு நேரமா காய்கறி வாங்க என்று கணவர்கள் கோபித்துக் கொள்கிற நிலைமை கூட ஏற்படும். இப்போது அந்தக் கஷ்டமெல்லாம் கிடையாது. தாய்மார்கள் உழவர் சந்தைக்குச் சென்று காய்கறி வாங்கினால் கறார் விலை, குறைந்த விலை. ஒவ்வொரு காய்கறியும் என்ன விலை என்று ஏற்கனவே தீர்மானித்து அவர்களே எழுதிப்போட்டுவிடுவார்கள். அதனால் போனவுடன் அதற்குரிய பணத்தைக் கொடுத்து அந்தக் காய்கறியை தாய்மார்கள் வீட்டிற்கு உடனடியாக வாங்கி வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் இன்னொரு இலாபம். வீட்டிலே ஏன் இவ்வளவு தாமதமென்று கணவன் கேட்க, நீங்கள் போய் வாங்கிப் பார்த்தா தெரியும் என்று அம்மையார் கோபிக்க அந்தச் சண்டை வராது. அதுவே பெரிய இலாபம் குடும்பங்களிலே என்பதை நீங்கள் ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும்.

உழவர் சந்தையிலே வந்து வியாபாரம் செய்த அந்த உழவர்கள் இந்த ஓராண்டு காலத்தில் 112 கோடி ரூபாய்

மதிப்புள்ள காய்கறிகளை விற்றிருக்கிறார்கள் என்று ஏற்கனவே சொன்னேன். அதிலே அவர்களுக்கு எவ்வளவு இலாபம் கிடைத்திருக்கிறதென்றால் அவர்களுக்கு ஏற்கனவே கிடைத்துக் கொண்டிருந்த இலாபத்தைவிட கூடுதலாக அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற இலாபம் ரூ.22 கோடியே 72 இலட்சம் ரூபாய். அதைப் போலவே வாங்கிச் சாப்பிடுகின்ற நுகர்வோர், பொதுமக்களுக்கு இந்த உழவர் சந்தை ஆரம்பிப்பதற்கு முன்பு அவர்கள் அதிக விலை கொடுத்துத்தான் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த அதிக விலை அகற்றப்பட்டு உழவர் சந்தை மூலமாக அவர்கள் வாங்கியதால் அவர்களுக்குக் கிடைத்த இலாபம் 34 கோடி ரூபாய் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எனவே நியாயமான விலை, இடைத்தரகர்கள் யாரும் இல்லாமல் இந்த வியாபாரம் இன்றைக்கு நடைபெறுகிறது. இடைத்தரகர்கள் என்றால் அது யாரோ வியாபாரிகள் என்று தவறாகக் கருதிக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் இந்த அரசு வியாபாரிகளுக்கும் நண்பனாக இருக்கக் கூடிய அரசுதான். வர்த்தகர்களுக்கு இதுவரையில் எந்த அரசும் செய்யாத நன்மைகளைச் செய்த ஒரே அரசு இந்த அரசு தான். இப்போது வர்த்தகர்கள் எங்களையெல்லாம் மாநாடு கூட்டி அழைக்கிறார்கள் என்றால் கோரிக்கை வைக்க அழைப்பதில்லை. நன்றி கூறுவதற்காக – எங்களைப் பாராட்டுவதற்காக அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே தான் இன்றைக்கு 100–வது உழவர் சந்தை திறக்கப்பட்டுள்ளது.

## என்னுடைய "செஞ்சுரிக் கனவு" நிச்சயம் நிறைவேறும் என்று நம்புகிறேன்

இந்த 100வது உழவர் சந்தையைத் திறக்க வேண்டுமென்று நான் அமைச்சர் தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திடம் எடுத்துச் சொன்னபோது அதற்கான வேலைகளை மும்முரமாகத் தொடங்கி இன்றைக்கு 100–வது உழவர் சந்தையை என் கண்ணிலே காட்டியதற்கு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அதைப் போலவே இன்றைக்கு தமிழ்நாட்டில் சமத்துவபுரங்கள் 100 ஏற்பட வேண்டுமென்பது என்னுடைய குறிக்கோள், என்னுடைய ஆசை. இதுவரையிலே உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி கோ.சி.மணி அவர்களின் அரிய பணியின் காரணமாக 81 பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 19 சமத்துவபுரங்களும் டிசம்பர் திங்களுக்குள்ளாகத் திறக்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. எனவே இதுவும் 100 அதுவும் 100 என்கிற என்னுடைய "செஞ்சுரிக் கனவு" நிச்சயமாக நிறைவேறும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

காய்கறிகளின் விலை மாத்திரமல்ல, குறிப்பாக இன்றைக்கு விலைவாசி ஓரளவு தமிழகத்தைப் பொறுத்தவரை மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது குறைந்தே இருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. துவரம் பருப்பு கடந்த கால ஆட்சியிலே விலை ஒரு கிலோ ரூபாய் 30.76. இன்றைக்கு விலை ரூ.25.13. கடலை எண்ணெய் விலை ஒரு கிலோ ரூ.41.30. இப்போது விலை 37.89. நல்லெண்ணெய் விலை கடந்த ஆட்சியிலே ஒரு கிலோ ரூ.42.22. இன்றைய விலை ரூ.37.41. தேங்காய் எண்ணெய் விலை கடந்த ஆட்சியிலே ஒரு கிலோ ரூ48.71. இன்றைக்கு விலை ரூ.41.20. காய்ந்த மிளகாய் விலை கடந்த ஆட்சியிலே ஒரு கிலோ ரூ44.65. இன்றைக்கு ரூ.28.89. பெரிய வெங்காயம் கடந்த கால ஆட்சியிலே ரூ.7.70. இன்றைக்கு ரூ.6.78. இந்த அத்தியாவசிய பொருள்களுடைய மாநில சராசரி விலைகளை ஒப்பிடும்போது பருப்பு, சமையல் எண்ணெய், மிளகாய், வெங்காயம் ஆகியவற்றின் விலை ஒரு பெரும் கட்டுப்பாட்டுக்குள் இன்றைக்கு வந்திருக்கின்ற உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். விலைவாசி ஏறியிருக்கின்ற மேலும் சிலபொருட்களின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் குறைக்க முடியாவிட்டால் என் என்பதற்கான விளக்கங்களையும் உங்களுக்கு நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம் என்ற உண்மையை எடுத்துச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

## வருமுன் காப்போம் திட்டத்தில் 76 இலட்சம் ஏழை எளியோர் பயன் பெற்றிருக்கிறார்கள்

இஃதன்னியல் இந்த அரசினுடைய நற்பணிகள், சாதனைகள் கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் செய்யப்பட்டுள்ள காரியங்கள் என்னென்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல சாதி மதச் சண்டைகளை நிறுத்துவதற்கு ஒரு சமரச உறவை ஏற்படுத்தவதற்கு மனித நேயத்தோடு அனைவரும் வாழ வேண்டும் என்ற ஒரு நிலையை உருவாக்குவதற்கு பெரியார் நினைவு சமத்துவபுரங்களை அமைத்து, அவைகளை ஆங்காங்கு இன்றைக்கு திறந்து வைத்திருக்கிறோம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 692 கோடி ரூபாய் செலவில் 74,810 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நமக்குநாமே திட்டத்தின் கீழ் 147 கோடியே 74 இலட்ச ரூபாய் செலவில் 18,590 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதில் மக்கள் பங்கு 51 கோடியே 42 இலட்ச ரூபாய். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 414 கோடியே 94 இலட்ச ரூபாய் செலவில் 30,505 பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் இதுவரை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்களின் பெருமுயற்சியோடு 7,680 மருத்துவ முகாம்கள் தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டு ஏறத்தாழ 76 இலட்சம் ஏழை எளியோர் பயன்பெற்றுள்ளார்கள். கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 3,389 மருத்துவ முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டு, 84 இலட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் பயன்பெற்றுள்ளன.

இவ்வளவுக்கும் பிறகு ஏதாவது குறை சொல்லவேண்டுமென்று சொல்கின்றவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். என்ன குறை? கரும்புக்கு ஆயிரம் ரூபாய் எங்கே, அன்றைக்குச் சொன்னாயே ஏன்

கொடுக்கவில்லை என்கிறார்கள். கரும்புக்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் எந்த இடத்திலும் குறிப்பிட வில்லை. தேர்தல் அறிக்கையிலே கூறாவிட்டாலும் கூட ஆயிரம் ரூபாய் வரையிலே கொடுக்க நாங்கள் முயற்சிப்போம் என்று தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலே நாங்கள் சொன்னது உண்மைதான். நான் இல்லை என்று மறுக்கவில்லை.



இப்பொழுது கொடுக்க முன் வந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பத்து சதவிகித 'ரிக்கவரி' கரும்புக்கு பிழிதிறன் இருக்குமேயானால் அந்தக் கரும்புக்கெல்லாம் ஆயிரம் ரூபாய்.

நேற்றைக்கு முன்தினம் சட்டப் பேரவையிலே வேளாண்மைத்துறை அமைச்சர் பேசுகிற போது ஒவ்வொரு ஆலைக்குத் தகுந்தாற்போல் பத்து சதவிகிதம் என்றால் ஆயிரம், பத்து சதவிகிதத்திற்கு மேல் ஒரு புள்ளி அதிகமாக இருந்தால் இருபது ரூபாய், முப்பது ரூபாய் விலை அதிகமாகக் கொடுத்து வருகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் சிலபேர் அது என்ன பத்து சதவிகித பிழிதிறனுக்கு ஆயிரம் ரூபாய், எட்டு சதவிகிதம் பிழிதிறன் இருந்தாலும் ஆயிரம் ரூபாய் கொடு என்கிறார்கள். நீங்களே நியாயமா என்று எண்ணிப் பாருங்கள். பத்து சதவிகிதத்திற்கு ஆயிரம் ரூபாய், எட்டு சதவிகிதம் பிழிதிறன் இருந்தாலும் ஆயிரம் ரூபாய் என்பது நியாயமாக இருக்க முடியுமா? எட்டு சதவிகிதத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தால் பத்து சதவிகித பிழிதிறன் கொண்ட கரும்பு வைத்திருப்பவர் எனக்கு 1200 ரூபாய் வீதம் கொடு என்று கேட்பாரா கேட்கமாட்டாரா?

காஞ்சிபுரம் மாவட்டத்திலே உள்ளவர்களுக்கு நூலைப் பற்றி நன்றாகத் தெரியும். பட்டு நூலைப் பற்றியும் தெரியும். சாதாரண நூலைப் பற்றியும் தெரியும். 40–ஆம் நம்பர் நூலுக்கும் ஒரே விலை, 80–ஆம் நம்பர் நூலுக்கும் ஒரே விலை என்றால் அவர்களை புத்திசாலி என்று யாராவது சொல்வார்களா? என்பதை தயவுசெய்து நீங்கள் தான் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே தான் 10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று இதிலும் சொன்னதைச் செய்கிறோம் என்பதை எடுத்துக்காட்டி இப்படி சொன்னதைச் செய்கிற, செய்வதைச் சொல்கின்ற இந்த அரசுக்கு உங்களுடைய அன்பான ஆதரவு என்றென்றும் இருக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

- **காஞ்சிபுரம் மாவட்டம் பல்லவபுரத்தில் 14–11–2000 அன்று 100–வது உழவர் சந்தை திறப்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.**


சென்ற இதழ் தொடர்ச்சி

# 'மக்கள் சாசனம்'

**ஆவினம் மற்றும் எருமையின இனப் பெருக்கம் :**

ஆவின மற்றும் எருமையின தனி உற்பத்தித் திறனைப் பெருக்கும் நோக்குடன் உயிரினமான பால் வளமிக்க ஜெர்ஸி, பிரீஸியன் மற்றும் முர்ரா இனப் பொலிகாளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்யப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, தீவிர கலப்பின இனவிருத்திக்காக உறைவிந்து தொழில்நுட்பம் மூலமாக மேற்கூறிய பொலிகாளைகளை விந்தின் மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கீழ்க்கண்ட நான்கு இடங்களில் உறைவிந்து குச்சிகள் தயாரிப்பதற்காக உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.



1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
2. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)
3. ஒசூர் (தருமபுரி மாவட்டம்)
4. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

**கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் :**

கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் மாதத்திற்கு ஒன்று என்ற அளவில் ஆண்டு முழுவதும் நடைபெறுகிறது. இம் முகாம்களுக்கு மருந்துகள், விளம்பரம் ஆகிய செலவினங்களுக்கு ஒரு முகாமிற்கு ரூ.5,000 வீதம் செலவிடப்படுகிறது.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :**

1976–ஆம் ஆண்டு முதல் சேலம், நாமக்கல், தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் நலன் கருதி "ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்" மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு கறவை மாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் ஆகியவற்றை வாங்க நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. விழுப்புரம் மாவட்ட கல்ராயன் மலைப்பகுதி மக்களுக்கு மட்டும் 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது.

**சிறப்பு மத்திய உதவித் திட்டம் :**

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஆதிதிராவிடர் சமூகத்தினரின் பொருளாதார மேன்மைக்கு 1983–ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய உதவித் திட்டம் என்ற திட்டம் அவர்களின் நலனுக்காகவே பிரத்யேகமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஆதிதிராவிடர்களுக்கு கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வாங்கி வளர்க்க நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**தீவிர செம்மறி ஆடு பாதுகாப்பு :**

சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக பிற மாவட்டங்களில், தீவிர செம்மறியாடு பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை பராமரிப்பில் வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டம் :**

இத்துறை உலக வங்கி நிதிஉதவியுடன் வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.366.29 இலட்சம் மதிப்பில் 1995–96–ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு கால அளவில் செயல்படுத்தி வருகிறது.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் :**

1. பணியிலுள்ள பணியாளர்களுக்கு, பயிற்சி அளிப்பதற்குத் தேவையான உள்ளிருப்பு வசதிகளை பலப்படுத்துவதும், பெருக்குவதுமாகும்.
2. பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியினை அதிகரிப்பதற்காக கால்நடை, இனப்பெருக்கம், நோய் கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் பசுந்தீவன வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு தற்கால நவீன அறிவியல் முறைகளில் பயிற்சி அளித்தல்.

**டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் :**

டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் 1.8.90 முதல் புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல், குன்னாண்டார்கோவில் மற்றும் விராலிமலை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.5.46 கோடி செலவில் முதல் கட்டமாக 6 வருட கால அளவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வெற்றிகரமான முதல் கட்ட செயலாக்கத்தின் பலனைப் பாராட்டி, டேனிடா இரண்டாவது கட்டப் பணியாக 1.2.97 முதல் 46 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 7 ஆண்டு காலத்திற்கு ரூ.27.50 கோடி செலவில் இரண்டாயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலும் மற்றும் 20 இலட்சம் வேளாண்குடி மக்களை ஈடுபடுத்தி பயன்பெறும் பொருட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இளம் தம்பதிகள் இணைப்பு தொடர் தம்பதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு கால்நடை பராமரிப்பு நடைமுறைகள், தீவன வளர்ச்சி, விரிவாக்க தொழில்நுட்பம் ஆகியவைகளில் பயிற்றுவிக்கப்பட்டனர். இவர்கள் இத்திட்டத்தின் முன்னோடிகள் ஆவர். மற்றவர்கள் இத்திட்டத்தினை செயல்பாட்டின் குறியீட்டினை பின்பற்றக் கூடிய விவசாயிகள், விவசாயிகள் சங்கம் மூலமாகவும், அரசு சாரா நிறுவனங்கள் மூலமாகவும் கால்நடை நிலையங்கள் மூலமாகவும் தேர்வு செய்யப்படுகின்றனர். பயிற்சி பெற்ற இணைப்பு



தொடர் முறைகளாக இருக்குமே தவிர பெரிய அளவிலான உள்ளீடுகளைக் கொண்டதாக இராது.

இதுவரை 188 தொடர் பணியாளர் தம்பதிகளும், 4,146 விவசாயிகளும் கால்நடை பராமரிப்பின் பல்வேறு பணிகள் குறித்து பயிற்சி பெற்றுள்ளனர்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்கள்**

1. தென் மாவட்டங்களில் வாழும் விவசாயிகளுக்கு, நாட்டின் செம்மறி ஆடுகளின் தரத்தை உயர்த்தும் பொருட்டு 6 மாத வயதுடைய செம்மறி கம்பளி இன 'சௌக்லா' கிடாக்குட்டிகளை இராஜஸ்தான் மாநிலத்திலிருந்து வாங்கி மூன்றில் ஒன்று பங்கு மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. இதற்காக திருநெல்வேலி, அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் இவற்றைப் பராமரிக்க ரூ.13.25 இலட்சம் அரசு செலவிடுகிறது. இத்திட்டம் ஐந்து ஆண்டுகளுக்கு நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டம் மூலம் முதல் ஆண்டு 660 பயனாளிகளும், இரண்டாம் ஆண்டு முதல் 160 பயனாளிகளும் பயனடைவார்கள்.
2. திண்டுக்கல், மதுரை, தேனி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய தென் மாவட்டங்களில் உள்ள கிராமப்புற விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பதில் நவீன தொழில்நுட்ப முறையில் திருநெல்வேலி, அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் 15 நாட்களுக்குப் பயிற்சியளித்து, பயிற்சி முடிவில் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு கிடா மற்றும் 4 பெட்டை ஆடுகளை மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 300 விவசாயிகள் நடப்பாண்டில் பயன்பெறுவர். இதற்காக அரசு ரூ.22.94 இலட்சம் செலவிடுகிறது.
3. ஆடுகளைத் தாக்கிய நீலநாக்கு நோய் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள மத்திய ஆய்வுக் கூடத்தில் நீலநாக்கு நோய் பற்றி ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டும், நோய்ப் பரப்பிகளைக் கட்டுப்படுத்தத் தேவையான பூச்சிக்கொல்லி, பூச்சி எதிர்ப்பு மற்றும் வேதியப் பொருட்களை வாங்கவும் ரூ.16.00 இலட்சம் செலவில் ஒரு நவீன ஆய்வுக் கூடம் அமைக்கப்படவுள்ளது.
4. கன்னியாகுமரி, தேனி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய தென் மாவட்டங்களில் கோழியின பராமரிப்பு இல்லாத பகுதிகளில் கோழியின வளர்ச்சியினை ஏற்படுத்தவும், கிராம மக்களுக்கு புரதச் சத்து மிக்க உணவு கிடைக்கும் பொருட்டும், இருவகையில் பயன்தரக்கூடிய கிரிராஜா ஒரு நாள் கோழிக்குஞ்சுகளை வாங்கி திருநெல்வேலி, அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் 12 வார காலம் வரை வளர்த்து மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் ஒவ்வொரு விவசாயிக்கும் 10 குஞ்சுகள் வீதம் ஒரு மாதத்திற்கு 200 பயனாளிகள் வீதம் வருடத்திற்கு 2,400 பயனாளிகள் பயனடைவர். இத்திட்டத்தினால் அரசிற்கு ரூ.30,65,000 செலவினம் ஏற்படும்.

★ ★ ★

நலத் திட்டத்தின் பெயர் :

1. ஆதிதிராவிடர் நலத்திட்டம்

தகுதி :

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர் ஆக உள்ள ஆதிதிராவிடர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர்கள் கறவை மாடு வாங்க மானியத்துடன் கடன்உதவி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கடன் பெறாதவர்களாக இருத்தல் வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்திட்டத்திற்கான கறவை மாடு ஒன்றின் விலை ரூ.12,000 வீதம் இரண்டு கறவை மாடுகள் வழங்கப்படுகிறது. இதில் ரூ.4,000 மானியமாகவும், ரூ.8,000 வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.

அணுக வேண்டிய முகவரி :

நிர்வாக இயக்குநர், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்

2. தாட்கோ நலத்திட்டம் இந்து ஆதிதிராவிட உறுப்பினர்கள் மத்திய உதவித் திட்டம்

தகுதி :

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர் ஆக உள்ள ஆதிதிராவிடர் கறவை மாடு வாங்க மானியத்துடன் கடன்உதவி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கடன் பெறாதவர்களாக இருத்தல் வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்திட்டத்திற்கான கறவை மாடு ஒன்றின் விலை ரூ.12,000 வீதம் இரண்டு கறவை மாடுகள் வழங்கப்படுகிறது. இதில் ரூ.4,000 மானியமாகவும், ரூ.8,000 வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.

அணுக வேண்டிய முகவரி :

நிர்வாக இயக்குநர், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்.

3. உள் கட்டமைப்பு மற்றும் உள்ளீடு வசதிகள் கறவை மாடுகளுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் சத்துள்ள தீவனம் வழங்குதல்

தகுதி :

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர் ஆக உள்ள ஆதிதிராவிடர்களது கறவை மாடுகளுக்கு சிகிச்சை, செயற்கை முறை கருவூட்டல், கால்நடைத் தீவனம் வழங்குதல், புல் வளர்ப்பு, அம்மைத் தடுப்பு போன்ற மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளுதல்.


அணுக வேண்டிய முகவரி :

நிர்வாக இயக்குநர், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்.

4. கன்று வளர்ப்புத் திட்டம் / தாட்கோ

தகுதி :

மேற்குறிப்பிட்டுள்ள ஆதிதிராவிடர் நலத்திட்டம் மற்றும் தாட்கோ திட்டங்களின் மூலம் வழங்கப்படும்



கறவை மாடுகள் ஈனும் கிடாய் கன்றுகளுக்கு (நான்கு மாத வயது முதல் 32 மாத வயது வரை) இலவச கன்றுத் தீவனம், காப்பீடு மற்றும் மருத்துவ சிகிச்சை 29 மாதங்களுக்கு கன்று ஒன்றுக்கு ரூ.10,680 வரை வழங்கப்படும.

அணுக வேண்டிய முகவரி :

நிர்வாக இயக்குநர், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்

★ ★ ★

நலத் திட்டத்தின் பெயர் :

**1. பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டம்**

அ. உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.12,000 வரை வழங்கப்படுகிறது.

**தகுதிகள் :**

பாரம்பரிய மீனவர்கள் மற்றும் மீனவக் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

ஆ. வெளிப்பொருத்தும் இயந்திரம் ஒன்றுக்கு 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.10,000 வரை வழங்கப்படுகிறது

**தகுதிகள் :**

பாரம்பரிய மீனவர்கள் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

**2. வலைகள் வாங்கிக்கொள்ள நபர் ஒன்றுக்கு மானியம் அதிகபட்சமாக ரூ.6,000 வரை வழங்கப்படுகிறது.**

**தகுதிகள் :**

பாரம்பரிய மீனவர்கள் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

**3. இத்திட்டத்தின் கீழ் 500 உள்நாட்டு மீனவருக்கு மீன்பிடி வலைகள் வாங்குவதற்கென ஒரு மீனவருக்கு 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2,500 வரை மானியம் வழங்கப்படுகிறது**

**தகுதிகள் :**

உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாடு)

**4. மிதிவண்டி வாங்கிட 25 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.450 மானியமாக வழங்கப்படுகிறது**

**தகுதிகள் :**

உள்நாட்டு மீனவர்களுக்கு மட்டும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாடு)

**5. அலுமினியப் பாத்திரங்கள் வாங்க 500 மீனவ மகளிருக்கு 50 விழுக்காடு மானியம் ரூ.150 வழங்கப்படுகிறது**

**தகுதிகள் :**

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)



**6. மீனவர்களுக்கு நிவாரணத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் இலங்கை கடல் எல்லைப் பகுதிக்குச் சென்று வீடுகளுக்குத் திரும்பாத மீனவர்களின் குடும்பத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.50 வீதம் மானியமாக வழங்கப்படுகிறது.**

**தகுதிகள் :**

இலங்கை பகுதி எல்லை தாண்டி மீன்பிடிக்கச் சென்ற மீனவ குடும்பம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

**7. மீனவர் அங்காடித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் நவீன வசதிகளுடன் கூடிய 10 மீனவர் அங்காடிகள் அமைத்தல்.

**8. சிங்காரவேலர் நினைவு வீடுகட்டும் வசதித் திட்டம். இத்திட்டத்தின் கீழ் கடல் மீனவர்களுக்கு ஒரு வீட்டிற்கு ரூ.37,000 மதிப்புள்ள வீட்டுவசதி செய்து தரப்படுகிறது.**

**தகுதிகள் :**

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கடல் மீனவர்களாகவும் மற்றும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாகவும் இருத்தல் வேண்டும். 3 சென்ட் சொந்த நிலம் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

**9. மீனவர் இலவசக் குழு காப்புறுதித் திட்டம்**

மீனவருக்கு முழு நிரந்தர ஊனம் மற்றும் மரணம் நேர்ந்தால் ரூ.50,000 அவர்கள் குடும்பத்திற்கு காப்புறுதி நிவாரணமாக வழங்கப்படுகிறது.

**தகுதிகள் :**

மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கடல்வள மற்றும் உள்நாட்டு மீன்துறை உதவி இயக்குநர்கள்.

**10. பகுதி நிரந்தர ஊனமடையும் மீனவருக்கு ரூ.17,500 காப்புறுதி நிவாரணமாக வழங்கப்படுகிறது**

**தகுதிகள் :**

மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கடல்வள மற்றும் உள்நாட்டு மீன்துறை உதவி இயக்குநர்கள்.

**11. மீனவர் விபத்துக்குழு காப்புறுதித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் மீனவருக்கு முழு நிரந்தர ஊனம் மற்றும் மரணம் நேர்ந்தால் ரூ.15,000–மும், பகுதி நிரந்தர ஊனம் அடைந்திருப்பின் ரூ.7,500–மும் கூடுதல் நிவாரணமாக வழங்கப்படுகிறது.



**தகுதிகள் :**

மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கடல்வள மற்றும் உள்நாட்டு மீன்துறை உதவி இயக்குநர்கள்.

**12. எரிபொருள் மானியம். இத்திட்டத்தின் கீழ் 20 மீட்டர் நீளத்திற்கு குறையாமல் உள்ள விசைப்படகுகள் பயன்பெறும் வகையில் டீசல் வாங்குவதற்கு ஒரு லிட்டருக்கு 45 காசு வீதம் மானியமாக வழங்கப்படுகிறது**

**தகுதிகள் :**

மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருக்க வேண்டும்

மீன்பிடி கலன்கள் துறையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்

மீனவர்கள் முழுநேர மீன்பிடி தொழிலைக் கொண்டிருக்க வேண்டும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

**13. மீனவர் பயிற்சி. இத்திட்டத்தின் கீழ் மீனவ மாணவர்களுக்கு நவீன மீன்பிடி முறைகள், மீன்பிடி விசைப்படகுகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் 10 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.200 உதவித்தொகை வழங்கப்படுகிறது.**

**தகுதிகள் :**

மீனவ சமுதாய இளைஞர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) ★

### 1. தள்ளுபடி மானியம் :

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வோருக்கு ஆண்டு முழுவதும் 20% தள்ளுபடி வழங்குகிறது. இத்தள்ளுபடி தொகையை அரசு சங்கத்திற்குத் திருப்பி வழங்குகிறது.


**அணுக வேண்டிய இடம் :**

கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விற்பனை நிலையங்கள்

### 2. நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் :

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தில் சேர நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து ஓராண்டு காலம் முடிவடைந்திருக்க வேண்டும். பங்குத் தொகை ரூ.100–க்குக் குறையாமல் இருக்க வேண்டும். வயது 18 முதல் 60–க்குள் இருக்க வேண்டும். கொடிய வியாதிகளால் பாதிக்கப்பட்டு



இருக்கக்கூடாது. உறுப்பினர் சந்தா 8%, அரசு பங்கு 8% மற்றும் வட்டி 7%. உறுப்பினர் 60 வயதிற்குள் இறக்க நேரிட்டால் ரூ.50,000 காப்பீட்டுத் தொகை வாரிசுகளுக்கு வழங்கப்படும். இதுதவிர, கோ–ஆப்டெக்ஸ் கருணைத் தொகையாக ரூ.10,000 வழங்குகிறது. மேலும் உறுப்பினர் கணக்கில் உள்ள திட்டத் தொகையும் திரும்ப வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

### 3. நெசவாளர் தொழிற்கூடத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டம் :

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தில் தனித்தனி வீடுகளும், தொகுப்பு வீடுகளும் நெசவாளர் கூட்டுறவுச் சங்க



உறுப்பினர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகிறது. பயன்பெறும் உறுப்பினர் சங்கத்தில் தொடர்ந்து நெய்பவராக இருக்க வேண்டும். சொந்த வீடு இருக்கக் கூடாது. ஹட்கோ கடன் ரூ.40,000, அரசு மானியம் கிராமப்புறத்திற்கு ரூ.25,000, நகர்ப்புறத்திற்கு ரூ.27,000–ம் வழங்கப்படுகிறது.

கடன் தொகை 14 ஆண்டு தவணைகளில் வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 4. நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தில் சேர நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் 2 ஆண்டுகள் தொடர்ந்து நெசவு செய்து வரவேண்டும். 60 வயது முடியாதவராக இருத்தல் கூடாது. இத்திட்ட உறுப்பினர் 60 வயதுக்குள்ளாக இறக்க நேரிடின் அவரது வாரிசுகளுக்கு அவர் இறந்த தேதியிலிருந்து பிரதி மாதம் ரூ.250 வீதம் 10 ஆண்டுகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.


**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 5. தொழிற்கூடம் கட்டும் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

ஏற்கெனவே வீடு உள்ள நெசவாளர்களுக்குத் தொழிற்கூடம் கட்ட கிராமப்புறத்திற்கு ரூ.7,000–ம், நகர்ப்புறத்திற்கு ரூ.10,000–ம் மானியமாக வழங்கப்படுகிறது. பயன்பெறும் உறுப்பினர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தொடர்ந்து நெய்பவராக இருத்தல் வேண்டும். மேலும் உறுப்பினர் பெயரில் சொந்தமாக வீடும், காலி மனையும் இருத்தல் வேண்டும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 6. டாக்டர் எம்.ஜி.ஆர். நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் உயர் கல்வி பயில நிதி உதவி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் தலா 2 மாணவ மாணவியர்க்கு வழங்கப்படும். பட்ட மேற்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மற்றும் மருத்துவம், பொறியியல், கால்நடை, சி.ஏ.,



பயிலும் மாணவ மாணவிகளுக்கு ரூ.3,000, பி.எஸ்.சி.(வி.வ), பி.பார்ம் பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.2,500, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., வங்கி அலுவலர் படிப்புக்கு ரூ.2,000.

பட்டப்படிப்பு மற்றும் பாலிடெக்னிக் பயிலும் மாணவ–மாணவியருக்கு ரூ.2,000, மேல்நிலைப் படிப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு ரூ.2,000, பத்தாவது வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு ரூ.1,500.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 7. தொகுப்பு செறிவுத் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் புதிய ரகம் உற்பத்தி செய்யப் பயிற்சி வழங்கப்பட்டு, புதிய தறிகள் மற்றும் தறி உபகரணங்கள் வாங்க நிதி உதவி அளிக்கப்படுகின்றது. சொந்தமாக இடம் இருப்பின் தறிக்கூடம் அமைத்துக் கொள்ளவும் மின் இணைப்பு வழங்கவும் நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 8.சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

புதிய வடிவமைப்பை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தொடர்ந்து நெசவு செய்யும் உறுப்பினர் உற்பத்தி செய்யும் துணி ரகம் சிறந்த வடிவமைப்பு, நெசவு மற்றும் வண்ணம் கொண்டதாக இருந்தால், ஒரு தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்படும் மூன்று ரகங்களுக்கு முதல் பரிசு ரூ.5,000, இரண்டாம் பரிசு ரூ.3,000, மூன்றாம் பரிசு ரூ.2,000 வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**


சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 9. நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்து, ஓராண்டு முடிந்த உறுப்பினர்களுக்கு பின்வருமாறு உதவிகள் வழங்கப்படுகின்றன.

**கண் சிகிச்சை :** கண் பரிசோதனைக்கு ரூ.40. கண் கண்ணாடி வாங்க ரூ.150. மருத்துவச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். கண்ணாடி வாங்கிய இரசீது கொடுக்கப்பட வேண்டும்.





## 10. முதியோர் ஓய்வூதியத் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் 1-4-1997 முதல் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் தொடர்ந்து இருந்து 60 வயது முடிந்த நெசவாளர்களுக்கு மாதம் ரூ.200 வீதம் ஓய்வூதியமாக வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

**காசநோய் மற்றும் ஆஸ்துமா :** காசநோய் மற்றும் ஆஸ்துமா சிகிச்சை ரூ.1,500, மருத்துவச் சான்றிதழ் மற்றும் மருந்து வாங்கிய ரசீது இணைக்கப்பட வேண்டும்.


**மகப்பேறு உதவி :** மகப்பேற்றிற்காக நெசவாளர் கூட்டுறவுச் சங்க பெண் உறுப்பினர்களுக்கு மற்றும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு முதல் 2 குழந்தைகளுக்கு மட்டும் ரூ.500 வழங்கப்படுகிறது.

**குடும்பக்கட்டுப்பாடு :** குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள ரூ.100 உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**ஆரம்ப சுகாதார நிலையம் :** ரூ.1.00 இலட்சம் மானியமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்படுகிறது. சங்கத்திற்குச் சொந்தமாக இடம் இருக்க வேண்டும். மருத்துவர் இதர பணியாளர் செலவினங்களை இச்சங்கமே மேற்கொள்ளும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை



**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 11. ஐ.ஐ.எச்.ட்டி – பட்டயப்படிப்பிற்கான உதவித்தொகை

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

சேலத்தில் இயங்கி வரும் இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலக (ஐ.ஐ.எச்.ட்டி)–த்தால் நடத்தப்படும் 3 ஆண்டு கைத்தறி தொழில்நுட்பப் பட்டயப் படிப்பிற்கு நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்/மாணவிகளுக்கு சேர்க்கையில்



முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு சேரும் நெசவாளர் குடும்ப மாணவ மாணவிகளுக்கு மாதந்தோறும் முதலாம் ஆண்டுக்கு ரூ.400, இரண்டாம் ஆண்டுக்கு ரூ.450, மூன்றாம் ஆண்டுக்கு ரூ.500 மற்றும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் புத்தகப்படியாக ரூ.60 என உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும், இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவியர்க்கு மட்டும் சுற்றுலாப்படியாக (அவ்வாண்டுக்கு மட்டும்) ரூ.200 வழங்கப்பட்டு வருகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 12. தேசிய வடிவமைப்பு மையத்தின் மூலம் தொழில்நுட்பக் கல்வி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

புதிய பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ற வகையிலும், நுகர்வோரின் மாறிவரும் இரசனைக்கு ஏற்பவும், நவீன இரகங்களை உற்பத்தி செய்தல், கணினியை அதிக அளவில் பயன்படுத்தி நவீன வடிவமைப்புகளை அமைத்தல், தையற்கலை போன்ற உடனடி வேலைவாய்ப்பைத் தரக்கூடிய பல்வேறு தொழில்நுட்பப் பட்டயப்படிப்பிற்கான வகுப்புகளை சென்னை, தேசிய வடிவமைப்பு மையம் (என்.ஐ.எப்.ட்டி) நடத்துகிறது. இவ்வகுப்புகளில் இந்த ஆண்டு முதல் ஆண்டு ஒன்றுக்கு 360 நெசவாளர்களின் குழந்தைகளுக்கு பயிற்சி கட்டணம் ஏதுமின்றி தொழில்நுட்பக் கல்வி அளிக்கப்பட்டு வருகின்றது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

★ ★ ★

**தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம் உதவி குறிப்பீடு :**

**குறிக்கோள்கள் :**

1. வேலைவாய்ப்புகள் அளித்தலை சமூக நோக்கமாகக் கொள்ளுதல்
2. விற்பனையாகக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்தலை பொருளாதார நோக்கமாகக் கருதுதல், மற்றும்
3. வலிமையான கிராமப்புற சமுதாய சக்தியினைத் தோற்றுவித்தல், மக்களிடையே தன்னம்பிக்கை மற்றும் விழிப்புணர்ச்சியை உருவாக்குதல்

**செயல்கள் :**

கிராமிய நூற்பு நிலையங்கள் மற்றும் கதர் உற்பத்தி நிலையங்கள் மூலமாக கிராமப்பகுதியில் வாழுகின்ற நலிவுற்ற நூற்போர் மற்றும் நெய்வோர், அதிலும் குறிப்பாக மகளிர்க்கு அவர்தம் வீட்டிற்கு அருகாமையிலேயே வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல்.

உள்ளூரில் கிடைக்கின்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தியும், கிராமப்புறத் தொழில்கள் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பளித்தல்

கதர் அல்லது கிராமத் தொழில் அல்லது கைவினைப் பொருட்கள் விற்பனையை அதிகரிக்கும் வகையில், அவைகளுக்கான சந்தை மற்றும் தேவைப்படும் விற்பனை முகவர்களை ஏற்படுத்தி வாரியம் இணைப்புப் பாலமாக செயல்படுதல்.

இன்றியமையாத தொழில்நுட்ப மற்றும் பயிற்சி வசதிகள் எங்கெங்கு தேவைப்படுகிறதோ அவ்வப்போது தேவைக்கேற்ப கைவினைஞர்களுக்குத் தருதல்.

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் சுருக்கமான விவரங்கள் பட்டியலிடப்பட்டு உங்கள் உபயோகத்திற்காக கீழே தரப்பட்டுள்ளன :


**திட்டத்தின் பெயர் :**

**கதர் நூற்பு மற்றும் நெசவு :**

**தமிழ்நாட்டில் பரவலாக இத்தொழிலுக்காக 358 கிராமிய நூற்பு நிலையங்களும், 86 உற்பத்தி நிலையங்களும் செயல்படுகின்றன.**

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆர்வமுடைய கைவினைஞர்கள் அவர்கள் தாம் வசிக்கும் பகுதியிலேயே வேலைவாய்ப்பினைப் பெற்றிட அந்தந்த மாவட்டத்தில் உள்ள உதவி இயக்குநரைத் தொடர்பு கொள்ளவேண்டும். மேலும் திருப்பூர், வேலூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் உள்ள மண்டலத் துணை இயக்குநர்களையும் (கதர் கிராமத் தொழில்கள்) அணுகலாம்.



**வழங்கப்படும் உதவி :**

வாரியம், நூற்போருக்கு பஞ்சு மற்றும் இராட்டை வழங்கி சிட்டங்களைப் பெற்று கூலி வழங்குகிறது. அது போன்று நூற்பாளர்களுக்குச் சிட்டங்கள் வழங்கி துணியாகப் பெற்றுக் கூலியினை வழங்கி வருகிறது.

## பட்டு நெய்தல்

**தமிழ்நாடு முழுவதும் 34 பட்டு உற்பத்தி நிலையங்கள் செயல்படுகின்றன.**

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆர்வமுடைய கைவினைஞர்கள் அவர்கள் தாம் வசிக்கும் பகுதியிலேயே வேலைவாய்ப்பினைப் பெற்றிட கும்பகோணம், காஞ்சிபுரம் மற்றும் சேலம் உதவி இயக்குநர்கள் (பட்டு) மற்றும் இணை இயக்குநர்கள் (பட்டு), கும்பகோணம் ஆகியவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

**வழங்கப்படும் உதவி :**


வாரியம், பட்டு நூல் மற்றும் சரிகையை நெய்வோருக்கு வழங்கி, நெய்யப்பட்ட பட்டு வகைகளைத் திரும்பப் பெற்று அதற்கான கூலியை வழங்குகிறது.

## கதர் அங்காடிகள்

**தமிழ்நாடு முழுவதும் கதர் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனைக்காக 234 கதர் அங்காடிகள் மற்றும் 16 கிராமிய விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.**

**அணுக வேண்டிய அலுவலர் :**

கதர் கிராமத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள் அந்தந்த மாவட்டத்தில் இயங்கும் உதவி இயக்குநர்களைத் தொடர்பு கொள்ளலாம்.



**வழங்கப்படும் உதவி :**

தேனீ வளர்ப்போரிடம் சேகரிக்கப்படும் தேன், கிராமத் தொழில் கைவினைஞர்கள் தயாரிக்கும் டெரகோட்டா மற்றும் மெருகு மட்பாண்டங்கள், பொம்மைகள் மற்றும் கைவினைப் பொருட்கள், தச்சு மற்றும் கருமார் தொழில் பொருட்கள் யாவும் கதர் அங்காடிகள் மற்றும் கிராமிய விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

### ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

உதவி இயக்குநர்கள் (கதர் கிராமத் தொழில்கள்), திருவண்ணாமலை, சேலம் மற்றும் தருமபுரி

**வழங்கப்படும் உதவி :**

தேன் பெட்டிகள் மற்றும் அதற்கான உபகருவிகள் தேனீ வளர்ப்போருக்கு வழங்கப்படுகின்றன.

### மேற்குத் தொடர்ச்சி மலைமேம்பாட்டுத் திட்டம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

உதவி இயக்குநர்கள் (கதர் கிராமத் தொழில்கள்), நாகர்கோவில், ஈரோடு, திண்டுக்கல், கோயம்புத்தூர், மதுரை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி

**வழங்கப்படும் உதவி :**

தேன் பெட்டிகள் மற்றும் அதற்கான உபகருவிகள் தேனீ வளர்ப்போருக்கு வழங்கப்படுகின்றன.

**விளிம்புத் தொகைத் திட்டம்**

**திட்டம் நிறைவேற்றப்பட உள்ள இடம் :**

அனைத்து மாவட்டங்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள உதவி இயக்குநர்கள் (கதர் கிராமத் தொழில்கள்) மண்டலத் துணை இயக்குநர்கள் (கதர் கிராமத் தொழில்கள்) வேலூர், திருச்சி, மதுரை மற்றும் திருப்பூர்.


**வழங்கப்படும் உதவி :**

தனி நபர் தொழில் திட்டங்களுக்கு ரூ.10 இலட்சம் வரை வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் வங்கிகளிடமிருந்து நிதி உதவி பெறலாம். கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவால் திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு வழங்கப்படும். பயனாளிகளின் பங்கு 10 விழுக்காடு ஆகும். ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மகளிர் முனைவர்களுக்கு 30 விழுக்காடு விளிம்புத் தொகை ஒதுக்கப்படும். 5 விழுக்காடு மட்டுமே அவர்களின் பங்காக அமையும்.

**பயனாளிகளின் எண்ணிக்கை :**

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் பொறுப்பாட்சிகள்/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.25 இலட்சம் வரையிலான திட்டங்களுக்கு விளிம்புத்தொகை வழங்கப்படும்.

ரூ.10 இலட்சம் வரையிலான திட்டத் தொகையில் 25 விழுக்காடு கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் உதவித் தொகையாக (விளிம்புத் தொகை) வழங்கப்படும் மற்றும் ரூ.25 இலட்சம் வரையிலான தொகையில் ரூ.10 இலட்சத்தில்



25 விழுக்காடும் மீதமுள்ள திட்டத் தொகையில் 10 விழுக்காடும் விளிம்புத் தொகையாக வழங்கப்படும்.

**தள்ளுபடி விற்பனை**

ஆண்டு முழுவதும் ஒரே சீராக கதர் பருத்தி பாலியஸ்டர் துணி ரகங்களுக்கு 30% தள்ளுபடியும் கதர் பட்டு ரகங்களுக்கு 20% தள்ளுபடியும் மத்திய மற்றும் மாநில அரசால் இணைந்து வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கதராங்காடிகள் மற்றும் கிராமிய விற்பனை நிலையங்கள்

★ ★ ★

**குறிக்கோள்கள்**

1. பனைப் பொருட்கள் தொழிலின் கீழ் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு வேலை அளித்தல் மூலம் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்.
2. உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப்பொருட்கள் மற்றும் இதர வசதிகளைப் பயன்படுத்தி விற்பனையாகக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்ய வழிவகுத்தல்.
3. பனை மரத்தில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு நலிவுற்ற ஏழை பனைத் தொழிலாளர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு அளித்து, அவர்களது பொருளாதார நிலையினை மேம்படுத்திட உதவுதல்.
4. அமெரிக்கா, இங்கிலாந்து, பெல்ஜியம் போன்ற அயல்நாடுகளுக்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்தல்.

தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் சுருக்கமான விவரங்கள் பட்டியலிடப்பட்டு உங்கள் உபயோகத்திற்காக கீழே தரப்பட்டுள்ளன.

**திட்டத்தின் பெயர் :**

**1. பதநீர் இறக்க உரிமம் வழங்குதல்**

**தொடர்பு கொள்ள வேண்டிய இடம் மற்றும் அலுவலர் விவரம் :**

அந்தந்த மாவட்ட சம்மேளன மேலாண்மை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட சம்மேளனங்கள் இல்லாத மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட கதர் மற்றும் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர்கள்.

**வழங்கப்படும் உதவி :**

பருவ காலங்களில் உரிமம் வழங்கப்படும்.

**2. பனந்தும்பு தயாரித்தல், பனை ஓலைப் பொருட்கள் செய்தல், நார் பொருட்கள் தயாரித்தல், பதநீர் பதப்படுத்துதல் முதலியவற்றில் பயிற்சி**

**தொடர்பு கொள்ள வேண்டிய இடம் மற்றும் அலுவலர் விவரம் :**

முதல்வர், மண்டல பனைப் பொருட்கள் பயிற்சி மையம், 1–டி, கடற்கரை சாலை, கடலூர் 607 001, கடலூர் மாவட்டம்.

**வழங்கப்படும் உதவி :**

மூன்று மாத கால பயிற்சி, மாதந்தோறும் பயிற்சி கால உதவித் தொகை ரூ.350 வழங்கப்படும்.

**3. பனைப் பொருட்களின் விற்பனைக்காக மாநில மற்றும் மாவட்ட சம்மேளனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பனைப் பொருள் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.**

**தொடர்பு கொள்ள வேண்டிய இடம் மற்றும் அலுவலர் விவரம் :**

பனைப் பொருள் அங்காடி தொடர்பாக அந்தந்த மாவட்ட சம்மேளன மேலாண்மை இயக்குநர்களையும், கதர் அங்காடி தொடர்பாக அந்தந்த மாவட்ட கதர் கிராமத் தொழில் உதவி இயக்குநர்களையும் தொடர்பு கொள்ளலாம்.



**வழங்கப்படும் உதவி :**

பருவ காலங்களில் பதநீரையும், பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு மற்றும் பனை ஓலைப் பொருட்கள், பனை நார் பொருட்களைப் பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களிடமிருந்து சேகரித்து மாநில மற்றும் மாவட்ட சம்மேளனங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

★ ★ ★

**திட்டத்தின் பெயர் :**

## 1. விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்இணைப்பு

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

சாதாரண முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் உரிய படிவத்தில் விண்ணப்பித்தால் மாவட்ட இலக்கீட்டிற்கு ஏற்பப் பதிவு மூப்பு அடிப்படையில் இவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும்.

ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த விவசாயிகளின் கிணறுகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து சான்றுப் பெற்று விண்ணப்பித்தால் உடனடியாக சிறப்பு முன்னுரிமையில் ஆண்டு ஒன்றுக்கு 1,249 நபர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும். மேற்படி திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத இனத்தைச் சார்ந்த விவசாயிகள் ஆண்டு ஒன்றுக்கு 751 நபர்கள் மின் இணைப்புப் பெற இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பம் பதிவு செய்து ஒரு வருடம் ஆன பின்னர் விதவை, உடல் ஊனமுற்றோர், முன்னாள் இராணுவத்தினர் ஆகியோர் உரிய படிவத்தில் விண்ணபித்தால் ஒரு வருடத்திற்கு 100 பேருக்கு சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் இலவச மின்சாரம் வழங்கப்படும்.

பயனாளிகள் பெயரில் பூமிதான இடத்தில் அமைக்கப்படும் கிணறுகளுக்கு மாவட்ட ஆட்சியர் பரிந்துரையின் பேரில் சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. சுயநிதித் திட்டத்தின் கீழ் விரிவாக்கம் செய்ய ஆகும் செலவுத் தொகை ரூ.50,000க்கு உட்பட்டு இருப்பின் ரூ.10,000 அல்லது ரூ.25,000 செலுத்தப்பட்டாலோ மின் விரிவாக்கம் செய்ய ஆகும் செலவுத் தொகை ரூ.50,000க்கு மேற்பட்டால் அந்த முழுத்தொகை செலுத்தப்பட்டாலோ உடன் மின்சாரம் பெற்றுக்கொள்ளலாம். இவ்வகை மின் இணைப்புகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு குதிரைத் திறன் ஒன்றிற்கு ரூ.250 வீதம் மின் கட்டணமாகச் செலுத்திட வேண்டும்.


**அணுக வேண்டிய அலுவலர் :**


செயற்பொறியாளர் (இயக்குதலும், காத்தலும்)
தமிழ்நாடு மின்சார வாரியம்

## 2. ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் குடிசைகளுக்கு இலவச மின்இணைப்பு

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

கிராமப் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்ட இடத்தில் கூரை வேயப்பட்ட மண் சுவர்களால் 200 சதுர அடிக்கு மிகாமல் கட்டப்பட்ட குடிசைகளுக்கும் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்





பரிந்துரையின் பேரில் மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

செயற்பொறியாளர் (இயக்குதலும், காத்தலும்) தமிழ்நாடு மின்சார வாரியம்.

### 3. கதர் மற்றும் குடிசைத் தொழிற்சாலைகளுக்கும், செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிற் சாலைகளுக்கும், சிறுதொழிற்சாலைகளுக்கும் 10 குதிரைத் திறன் மின்பளு வரையில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

தொடர்புடைய துறையினரிடமிருந்து சான்றுப் பெற்று விண்ணப்பிக்க வேண்டும். (ஸ்டீல் தொழிற் – சாலைகள் தவிர)

**அணுக வேண்டிய அலுவலர் :**

செயற்பொறியாளர் (இயக்குதலும், காத்தலும்) தமிழ்நாடு மின்சார வாரியம்.

### 4. வீட்டு உபயோகத்திற்கு மின் இணைப்பு

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

மின் கம்பித் தொடர் அமைந்துள்ள பகுதிகளில் பணி விரிவாக்கம் தேவைப்படாத வீட்டு உபயோக இணைப்புகளுக்கு பணம் செலுத்தியவுடன் ஒரே நாளில் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தொடர்புடைய பிரிவு அலுவலர் (இயக்குதலும், காத்தலும்) தமிழ்நாடு மின்சார வாரியம்.

### 5. தாழ் மின் அழுத்த தொழிற்சாலை மின் இணைப்பு

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

மின் கம்பித் தொடர் நீட்டிப்பு தேவையில்லாமல் இருந்தால் 5 குதிரைத் திறனுக்கும் குறைவாக இருக்கும் மின் இணைப்புகளுக்கு உரிய கட்டணம் செலுத்திய பின் உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும்.

மின் கம்பித் தொடர் நீட்டிப்பு தேவையெனில் 15 நாட்களுக்குள் இணைப்பு வழங்கப்படும்.

5 குதிரைத் திறனுக்கு மேற்பட்ட இணைப்புகள் மின் கம்பித் தொடர் நீட்டிப்பு தேவையில்லையெனில் கட்டணம் செலுத்திய 15 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

மின் கம்பித் தொடர்பு நீட்டிப்பு தேவையெனில் 30 நாட்களுக்குள் மின்இணைப்பு வழங்கப்படும்.

புதிதாக மின்மாற்றி அமைத்திடத் தேவையெனில் 90 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

ஏற்கெனவே உள்ள குறைந்த அழுத்த தொழிற்சாலைகளுக்குக் கூடுதல் பளு விண்ணப்பங்களுக்கும் இது பொருந்தும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

பிரிவு அலுவலர் (இயக்குதலும், காத்தலும்) தமிழ்நாடு மின்சார வாரியம்.

★ ★ ★

ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற தமிழக அரசின் குறிக்கோளை நிறைவுச் செய்யும் வண்ணம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், ஊரக வீட்டுவசதிக் கழகம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகியவை பல்வேறு வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்தி வருகின்றன.

**1. பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டுவசதித் திட்டம்**


தற்சமயம் இத்திட்டத்தின்படி புதிய வீடு கட்ட ஒரு வீட்டிற்கு ரூ.2,000 அரசு மானியத்துடன் சமவெளிப் பகுதியில் ரூ.10,000-ம், மலைப்பகுதிகளில் ரூ.12,000-ம் ஹட்கோ நிறுவன நிதியுதவி மூலம் கடன் வழங்கப்படுகிறது. மேலும் பயனீட்டாளர் ஒவ்வொருவரும் தனது சொந்த பங்களிப்பாக ரூ.2,000 முதலீடு செய்யவும் இத்திட்டம் வகை செய்கிறது.

**2. கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்**

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட வழங்கப்பட்டு வந்த கடனுதவி, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.80,000-லிருந்து, ரூ.1,00,000 ஆகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.1,20,000-லிருந்து ரூ.2,00,000 ஆகவும், 1999-2000 ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**3. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்**

சாதி, மதபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் சமத்துவபுரம் திட்டத்திற்கு, வீட்டின் கட்டுமானச் செலவு, அரசு உதவித்தொகையான ரூ.35,000த்தைக் காட்டிலும் அதிகரிக்கின்ற நேர்வுகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தொடக்க நிலை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கடனுதவி அளித்து வருகிறது.



**4. தமிழ்நாடு ஊரக வீட்டுவசதிக் கழகம்**

பல்வேறு மாவட்டங்களில் உள்ள பீடித் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 3,000 வீடுகள் கட்டப்பட உள்ளன. ரூ.40,000 திட்ட மதிப்பீட்டில் வீட்டின் மாதிரி அமைப்பு மாற்றியமைக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. இம்மதிப்பீட்டில் ரூ.20,000 மைய அரசு மானியமாகவும், மீதமுள்ள ரூ.20,000 ஹட்கோ கடனுதவியும் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் பெற்று இக்கழகத்தின் மூலம் கட்டப்பட உள்ளது.

★ ★ ★

**1. மாணவர்களுக்கான பயணச் சலுகை**

ஒன்று முதல் 12ஆம் வகுப்பு வரை, அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள், வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று திரும்புவதற்கான இலவசப் பயணச் சீட்டுக்களைப் பெற தகுதி படைத்தவர்கள். 12ஆம் வகுப்பிற்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு 50 விழுக்காடு பயணச் சலுகை அளிக்கப்படுகிறது.




**2. சலுகை பயணச் சீட்டுக்கள் பெற நடைமுறையில் உள்ள வழிமுறைகள்**

அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள், அரசின் அங்கீகார உத்தரவின் நகலுடன் அரசு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநருக்கு விண்ணப்பித்தால், அந்தப் பள்ளியின் பெயர் அரசு போக்குவரத்துக் கழகங்களால் பராமரிக்கப்பட்டுவரும் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளின் பட்டியலில், மாணவர்களுக்கான சலுகைப் பயணச் சீட்டுகள் வழங்குவதற்காக சேர்க்கப்படும். அதற்கான உத்தரவு அந்தப் பள்ளிக்கு அனுப்பப்படும்.

முந்தைய ஆண்டில் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் படித்த மாணவர்களின் பெயர் பட்டியல் கணினி மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்களால் தயார் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். சம்பந்தப்பட்ட பள்ளி அந்த மாணவர்களின் பெயர் பட்டியலை ஆய்வுச் செய்து தலைமை ஆசிரியரின் சான்றிதழுடனும், மாணவர்களின் பெயர்களுக்கு எதிரே உள்ள இடத்தில் சம்பந்தப்பட்ட மாணவரின் புகைப்படத்தை ஒட்டி திரும்ப அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும். இந்த கணினி பெயர் பட்டியலுடன் மாணவர்களின் மற்றொரு புகைப்படமும் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

கணினி பெயர் பட்டியல் அரசு போக்குவரத்துக் கழகத்தில் பெறப்பட்டவுடன் பேருந்து சலுகை பயண அட்டைகளை தயார் செய்து சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு, மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு அனுப்பிவைக்கப்படும். சம்பந்தப்பட்ட பள்ளிகள் சலுகை பயண அட்டைகளை மாணவர்களுக்கு வழங்கும். புதியதாக சேர்ந்த மாணவர்களைப் பொறுத்தவரை, ஒரு புதிய பெயர் பட்டியலை சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமை ஆசிரியர், அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு மாணவர்களின் இரண்டு புகைப்படங்களுடன் அனுப்பி வைக்கவேண்டும். அரசு போக்குவரத்துக் கழகம் கணினி மூலம் சலுகை பேருந்து அட்டைகளைத் தயாரித்து குறிப்பிட்ட பள்ளிகளுக்கு மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு அனுப்பிவைக்கும்.

**3. ஊனமுற்றவர்களுக்கு இலவச பயண அட்டை வழங்கப்படுகிறது**


ஊனத்தின் அளவு 40 விழுக்காடு அல்லது அதற்கு மேல் உள்ள உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் ரூ.1,000-க்கும் மிகாமல் மாத வருமானம் பெறும் அனைத்து ஊனமுற்றோர்களும் வயது வரம்பின்றி இலவச பயண அட்டை பெறத் தகுதி பெற்றவர்கள்.

### 4. மனவளர்ச்சிக் குன்றியோருக்கு இலவச பயண அட்டை வழங்கப்படுகிறது

மாவட்ட மறுவாழ்வு அலுவலர் அவர்களின் பரிந்துரையின் பேரில் 40 மற்றும் 40க்கு மேற்பட்ட விழுக்காடு அளவு மனவளர்ச்சிக் குன்றி மாத வருமானம் ரூ.1,000–க்கும் குறைவாக பெறும் அனைவரும் வயது வரம்பின்றி இச்சலுகையைப் பெற தகுதியுடையவர் ஆவர். இப்பயண அட்டை பெறும் நபருடன் பாதுகாவலர் ஒருவரும் உடன் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 5. பார்வையற்றோருக்கான இலவச பயண அட்டை

பார்வையின் ஊனத்தின் தன்மையைக் குறிக்கும் மருத்துவச் சான்றிதழுடன் இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் இவற்றுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட மறுவாழ்வு அலுவலர் அவர்களை அணுகி ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை பெற்று அந்த அட்டையினை இரண்டு நகல்கள் எடுத்து மீண்டும் மாவட்ட மறுவாழ்வு அலுவலரின் பரிந்துரை



பெற்று போக்குவரத்துக் கழக மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களை அணுகி சமர்ப்பித்தால் இலவச பயண அட்டை பெற்றுக் கொள்ளலாம். இத்தகைய பயண அட்டை வருடம் ஒருமுறை புதுப்பிக்கப்படுகிறது. மாவட்டத்தின் அனைத்து இடங்களுக்கும் செல்ல இலவச பேருந்துப் பயணச் சலுகை அளிக்கப்படுகிறது. பார்வையற்றோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் அரசு விரைவுப் பேருந்துகளில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசமாக பயணம் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

1. விரைவுப் பேருந்துகளில் பயணம் செய்ய விரும்பும் பார்வையற்றோர் மற்றும் கால் முடமானோர் பயணம் செய்யும் இடம், பேருந்து, நாள் முதலிய விவரங்களை உரிய படிவத்தில் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட மறுவாழ்வு அலுவலர் வழங்கும் அனுமதிச் சீட்டின் அடிப்படையில் இவர்கள் பயணம் செய்யலாம்.

2. இச்சலுகையானது அதிகபட்சம் ஆண்டிற்கொருமுறை இருவழி பயணம் மேற்கொள்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.

3. இப்பேருந்து பயணச்சலுகை, அந்தந்த மாவட்ட மறுவாழ்வு அலுவலர்களால் மட்டுமே வழங்கப்படும். இதற்காகும் செலவினத்தை நடைமுறையில் உள்ளவாறு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை ஈடுசெய்யும்.

4. இச்சலுகையானது இம்மாநிலத்திற்குள் பயணம் செய்வதற்கு மட்டுமே பொருந்தும்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்கள் போக்குவரத்துக்கழக எல்லைக்குள் வசிக்கும் அனைவருக்கும் இலவச பயண அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

புற்று நோயாளிகள் மருத்துவமனையிலிருந்து சான்றிதழ் பெற்று நான்கில் ஒரு பங்கு கட்டணம் செலுத்தி பேருந்தில் பயணம் செய்யலாம். புற்று நோயாளியும் தன்னுடன் உதவிக்காக மற்றொருவரை அழைத்துக் கொண்டு பேருந்துகளில் இருவருக்கும் சேர்த்து ஒரு முழுக்கட்டணம் செலுத்தி பயணத்தூரத்திற்கான பயணச் சீட்டினைப் பெற்று பயணம் செய்யலாம். ★

**நலத் திட்டத்தின் பெயர் :**

## சட்டப்பணிகள் ஆணைக்குழு

**தெரிந்து கொள்ள வேண்டிய சட்ட விதிகள் :**

தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக்குழு 1.11.1997 அன்று துவக்கப்பட்டது. சட்ட உதவி தேவைப்படும் மக்களுக்கு சேவை செய்வதே இதன் முக்கிய குறிக்கோள்.

**குறிக்கோள்கள் :**

**தமிழ்நாடு சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் நோக்கங்களாவன :**

1. சமூகத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு தகுதி வாய்ந்த இலவச சட்ட உதவி அளிக்க வகை செய்தல்.
2. பொருளாதார மற்றும் இதர இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி பெறும் வாய்ப்பு மறுக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்தல்.
3. நீதிமன்ற வழக்குகளுக்கு மாற்று அமைப்பாக சட்ட அங்கீகாரமுடைய மக்கள் நீதிமன்றங்களை நடத்துதல்.
4. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சமுதாயத்தில் வறிய பிரிவினர் ஆகியோருக்கு அவர்களின் உரிமைகள் பற்றி அறிவுறுத்துதல்.
5. மேலும் சமுதாய நலன் கருதி பிறப்பிக்கப்பட்ட பல தரப்பட்ட சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகள் அளிக்கும் சிறப்புரிமைகள் மற்றும் பலன்களைப் பெற உதவி அளித்தல்.

**சட்ட உதவி பெறத் தகுதிகள் :**

ஒரு வழக்கைத் தொடுக்கவும் எதிர் வழக்காடவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவிற்குள் வரும் ஒவ்வொரு நபரும் சட்ட உதவி பெறத் தகுதி உடையவராகிறார்.

1. பட்டியல் சாதியினர் (அல்லது) பட்டியல் பழங்குடியினர்
2. அரசியலமைப்பு சட்டப்பிரிவு 23ன்படி மனிதர்களை விற்பது மற்றும் வாங்குவதாலும் அல்லது வற்புறுத்தி வேலை வாங்குவதாலும் பாதிக்கப்பட்ட நபர்.
3. மகளிர் அல்லது குழந்தைகள்
4. ஊனமுற்றோர்
5. பேரழிவு, இன வன்முறை, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில அதிர்ச்சி, தொழிற்சாலை விபத்துக்கள் ஆகியவைகளால் பாதிக்கப்பட்டவர்கள்



6. தொழிற்சாலை தொழிலாளர்கள்

7. சிறைக்காவலில் இருப்போர், பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம், மனநல மருத்துவமனை, மனநோய் மருத்துவமனை மற்றும் இல்லம் இவைகளில் உள்ளவர்கள்

8. உச்சநீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் ரூ.12,000க்குள் பிற நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் ரூ.9,000க்குள் குறைவான வருட வருமானம் உள்ளவர்கள்

**உதவிக்கு அணுகும் முறை :**

சட்ட உதவி கோருபவர்கள் அணுகவேண்டிய குழு/மையம் :

1. மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு

2. மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

3. வட்ட சட்டப்பணிகள் குழு

4. உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழு

5. சமரச மையங்கள், மற்றும்

6. மகளிர் மையங்கள்

இதற்காக தனியாக கட்டணமோ, நீதிமன்ற முத்திரை ஒட்டிய மனுக்களோ தேவையில்லை. குறிப்பிட்ட படிவத்தில் எழுத்து மூலமாக இவர்கள் மனு செய்யலாம். தற்போது உபயோகத்தில் உள்ள இரு படிவங்களின் மாதிரிகள் இணைக்கப்பட்டுள்ளன. எழுத்தறிவற்றோர் வாய்மொழி வாயிலாக தமது அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மகளிர் மையங்கள் :**

பெண்கள் தம் திருமண வாழ்வு குறித்த சிக்கல்கள் மற்றும் பிற பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வு காண மாநிலம் முழுவதும் உள்ள மகளிர் மையங்கள் முனைப்புடன் உதவி புரிகின்றன. தற்போது தமிழ்நாட்டில் 45 மகளிர் மையங்கள் செயல்படுகின்றன.

**குற்ற வழக்குகளில் உதவி :**

குற்ற வழக்குகளில் ஒரு நபருக்கு அவர் கைது செய்யப்படும் நேரத்திலிருந்து வழக்கு விசாரணை மற்றும் மேல் முறையீடு நடவடிக்கைகள் வரையில் இலவச சட்ட உதவி அளிக்கப்படும்.




**மக்கள் நீதிமன்றங்கள்**

சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டப்படி மக்கள் நீதிமன்றம் சட்டப்படியான அங்கீகாரம் பெற்றது. மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள் மற்றும் வட்ட சட்டப்பணி குழுக்கள் ஆகியவை மக்கள் நீதிமன்றங்களை நடத்த அதிகாரம் பெற்றவை. வழக்குகளில் உள்ள நபர்களுக்கு வழக்கில் சமரசம் அல்லது இழப்பீடு குறித்து முடிவு செய்ய மக்கள் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

★ ★ ★

காவல்துறையினர் தம் அடிப்படைக் கடமைகளான குற்ற நிகழ்வுகளைத் தடுத்து, பொது அமைதி, ஒழுங்கைப் பாதுகாத்தால்தான் பொதுமக்கள் தங்கள் பணிகளை அமைதியான முறையில் செய்ய இயலும். காவல் துறையினர் பின்வரும் கடமைகளையும் செயல்களையும் புரியக் கடமைப்பட்டவர்கள் :

அ. பொது ஒழுங்கைப் பராமரித்து அதனைப் பாதுகாத்தல்

ஆ. குற்றங்களைப் புலன் விசாரணை செய்தும், குற்றவாளிகளைக் கைது செய்து பின்னர் நீதிமன்ற விசாரணையில் பங்கேற்றல்

இ. குற்ற நிகழ்வுகள் ஏற்பட வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் கண்டறிதல்

ஈ. முன்னெச்சரிக்கையாக ரோந்து சென்றும், தங்கள் இதர நடவடிக்கைகள் மூலமும் குற்றம் நடைபெறுவதற்கான வாய்ப்புகளைக் குறைத்தல்

உ. குற்றங்கள் நிகழ்வதைத் தடுப்பதில் ஈடுபட்டுள்ள மற்ற அமைப்புகளுக்குத் தக்க உதவிகள் செய்து ஒத்துழைப்பு அளித்தல்

ஊ. தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்கிற நிலையிலுள்ள தனி நபர்களுக்குப் .பாதுகாப்பு அளித்தல்

எ. சமூகத்தில் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தி, அதனைப் பேணுதல்

ஏ. மக்களும் வாகனங்களும் சரியான முறையில் இயங்க உதவுதல்


ஐ. சச்சரவுகளைத் தீர்த்து அமைதி நிலவச் செய்தல்

ஒ. இன்னல்கள் ஏற்படும் காலங்களில் நிவாரணப் பணியில் ஈடுபடுதல், நிவாரணங்கள் பெற்றுத் தருதல்

ஓ. பொது அமைதி, சமூகம், பொருளாதாரக் குற்றங்கள், தேசப்பாதுகாப்பு, ஒற்றுமை ஆகியவற்றை சீர்குலைத்தல் குறித்த முன் தகவல்களைச் சேகரித்தல்

ஔ. சட்டத்தில் விதிக்கப்பட்ட மற்ற பணிகளைச் செய்தல்

2. பொதுமக்கள், குற்றம் நிகழ்ந்திருந்தாலும் அல்லது குற்றம் நடைபெறக்கூடும் என்ற அச்சம் இருந்தாலும் அதைப்பற்றி காவல் துறையினரிடம் புகார் அளிக்கலாம். காவல் துறையினர், அவர்களைக் கனிவுடன் நடத்தி, குற்றம் நடைபெற்றிருந்தால் வழக்குப் பதிவு செய்து அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) நகலை அளிக்க வேண்டும். குற்றம் தமது எல்லைக்குள் நடவாதிருப்பினும், காவல் நிலையத்தில் புகாரைப் பெற்றுப் பதிவு செய்து தொடர் நடவடிக்கை பற்றிய விவரத்தைப் புகார் கொடுத்தவருக்குத் தெரிவிக்க வேண்டும். வழக்கின் தன்மையையும் வழக்கின் முன்னேற்றத்தையும் அறிய வழக்கை விசாரிக்கும் எந்த அதிகாரியை அணுக வேண்டும் என்ற விவரத்தையும் புகார்தாரருக்குத் தெரிவிக்க வேண்டும்.



3. திருட்டுப்போன சொத்து கண்டுபிடிக்கப்பட்டால், நீதிமன்றத்தின் மூலம் அச்சொத்தை விரைவில் அதன் சொந்தக்காரருக்குத் திரும்பத் தர ஏற்பாடு செய்ய வேண்டும். தாமதம் ஏதும் ஏற்பட்டால், அதற்கான காரணம், எப்பொழுது அவரது சொத்தைத் திருப்பி அளிக்க இயலும் என்பதைப் பாதிக்கப்பட்டவருக்கு விளக்க வேண்டும். மக்கள் விரும்பினால், பிற்காலத்தில் குற்றங்கள் நிகழாவண்ணம் தடுக்க காவல் துறையினரை அணுகி அதற்கான அறிவுரைகளைப் பெறலாம். காவல்துறையினர் அத்தகையோருக்குத் தக்க உதவி அளிக்க வேண்டும். காவல்துறையினர், ஒவ்வொரு பகுதியிலும் குற்ற நிகழ்வுகளைத் தடுக்கும் பணியில் பொதுமக்களை ஈடுபடுத்தியும், பாதுகாப்பு அளிக்கும் பணியில் மக்கள் பங்காற்றவும் வழிவகை செய்ய வேண்டும்.

4. வன் குற்றங்களான வழிப்பறி, கூட்டுக் கொள்ளை, சங்கிலிப் பறிப்பு, தனி நபர் தாக்கப்படுதல் ஆகிய குற்றங்களில் பாதிக்கப்பட்டவருக்குக் காவல் துறையினர் உடனடி மருத்துவ உதவி அளிக்க ஏற்பாடு செய்து அவரது துன்பத்தைக் குறைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காவல் துறையினர் பாதிக்கப்பட்டவரை விசாரித்து, அவர் யாரால் தாக்கப்பட்டார் என்பதை அறிந்து, உடனடி நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும்.




5. மகளிருக்கெதிரான குற்றம் – மாவட்டங்களிலும், பெருநகரங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்காவல் நிலையங்களில் மகளிருக்கு எதிரான குற்றங்கள் சம்பந்தமாக புகார்கள் அளிக்கலாம். மகளிருக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்களான தாக்கப்படுதல், இளம் பெண்களைக் கேலி செய்தல், மானபங்கம், கற்பழிப்பு, வரதட்சணைக் கொடுமை போன்ற நிகழ்வுகளில் காவல் துறையினர் மனித நேயத்தோடு அணுகி தக்க முறையில் விசாரணை செய்ய வேண்டும்.

6. திருமணமான ஒரு பெண் திருமணமான 7 வருடங்களுக்குள் இறந்திருந்தால் வரதட்சணை இறப்பு எனக் கருதி வருவாய்க் கோட்டாட்சியரால் விசாரணையும் காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவியிலுள்ள ஒருவரால் புலன் விசாரணையும் செய்யப்பட வேண்டும். பிணப் பரிசோதனை இரு மருத்துவ அலுவலர்களால் செய்யப்பட வேண்டும்.

7. நலிந்த பிரிவினருக்கு எதிரான குற்றம் – குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் ஆகியவை சம்பந்தப்பட்ட புகார்கள் மிக முக்கியமானவையாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இம்மாதிரி குற்றங்களில் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், பழங்குடியினர், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி நிவாரணம் பெறத் தகுதியுடையவர் ஆவர். பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் பெற்றுத் தருவதில் காவல் துறையினர் அதிகபட்ச உதவி செய்வதுடன் நடுநிலையாக இருந்து நியாயமான முறையில் நடவடிக்கை எடுத்து பொது அமைதியை நிலைநாட்ட வேண்டும்.

8. பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் சிறப்புக் குற்றங்கள் – ஏமாற்றுதல், பணத்தைக் கையாடல் செய்தல், நம்பிக்கைத் துரோகம் ஆகிய குற்றங்களை விசாரிக்க தலைமையிடம்



மற்றும் மாவட்டங்களில் பொருளாதாரக் குற்றத்தடுப்புப் பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன இடங்களிலும் இது சம்பந்தமான புகாரைக் கொடுக்கலாம். காவல் துறையினர் வழக்கை விசாரித்து பாதிக்கப்பட்டவருக்கு அவர் கேட்கும் போது வழக்கின் முன்னேற்றத்தைப் பற்றித் தெரிவிப்பார்.

9. கைது – ஒருவர் கைது செய்யப்பட்டால் அவருக்கு அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணங்களைத் தெரிவித்து அவரை ஜாமீனில் வெளியில் விடவோ, கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றப் பாதுகாப்பிற்கு அனுப்பவோ ஏற்பாடு செய்வது காவல்துறையின் கடமையாகும். மருத்துவர் சோதனைக்கு வசதி செய்தல், தன் நண்பரையோ, உறவினரையோ தொடர்பு கொள்ளுதல், தனக்கு ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்து கொள்ளுதல் மற்றும் தன்னைக் கைது செய்த காவல்துறை அலுவலர் பெயரையும் பதவியையும் அறிந்து கொள்ளுதல் ஆகியவற்றுக்கு கைது செய்யப்பட்டவருக்கு உரிமை உண்டு. கைது செய்யப்பட்ட நேரத்தைக் குறிப்பிட்டு ஒரு குறிப்பாணையினைத் தயார் செய்து அதனைக் காவல் துறையினர் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். மேலும், இது பற்றிய விவரத்தினைக் காவல் கட்டுப்பாட்டறையில் வைக்க வேண்டும்.

10. பெண் சாட்சிகள் அவர்களுடைய இருப்பிடங்களிலேயே விசாரிக்கப்படுவர். பெண்கள் கைது செய்யப்பட்டால் வெகு விரைவில் வழக்கின் தன்மையைப் பொறுத்து ஜாமீனில் விடப்படுவர்.

11. முறைப்படுத்தும் பணிகள் – காவல் சட்டத்தில் கூறியுள்ளபடி பொது அமைதியை நிலைநாட்ட வேண்டி ஊர்வலம் மற்றும் கூட்டங்கள் ஆகியவற்றை நடத்த அனுமதி கோரி அனுமதி அளித்தோ அல்லது மறுத்தோ முடிவு செய்வர். இதில் ஏதேனும் குறை இருந்தால் உயர் அலுவலரது கவனத்திற்குக் கொண்டு செல்லலாம்.

12. போதைப் பொருள் கடத்தல், வீடியோ திருட்டு, தயாரிப்பாளரின் பதிப்பு உரிமைச் சட்ட மீறல் போன்ற குற்றங்களை விசாரிக்க குற்றப் புலனாய்வுத் துறை (கு.பு.து) போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு ஆகியன ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குற்றங்கள் தொடர்பாக மேற்சொன்ன பிரிவுகளில் புகார் மனு அளிக்கலாம்.

13. **தபால் மூலம் புகார் அளித்தல் :**

பாதிக்கப்பட்டவர் காவல் துறையினரை நேரடியாகவும் அணுகலாம் மற்றும் தபால், மின்னஞ்சல் மூலமாகவும் புகார் கொடுக்கலாம். காவல் துறையினரின் நடவடிக்கையில் அதிருப்தி ஏற்பட்டால் அவர்கள் துறையின் மேல்நிலை அலுவலர்களையோ அரசையோ அணுகி புகார் கொடுக்கலாம்.

15. **கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) :**

**வேலைவாய்ப்பு** போன்றவற்றைச் சரிபார்க்கும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட அலுவலர், மனு வரப்பெற்ற நாளிலிருந்து 15 தினங்களுக்குள் காவல் விசாரணை செய்து அறிக்கை தரவேண்டும்.

## பாதிக்கப்பட்டோர் நிவாரண நிதி

பாதிக்கப்பட்டோர் நிவாரண நிதியிலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறிப்பாக பெண்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கீழ்க்கண்ட விகிதத்தில் நிதிஉதவி வழங்கப்படுகிறது.

| வ. எண். | குற்ற இனம் | வழங்கப்படும் நிவாரணத் தொகை | யாருக்கு வழங்கப்படும் | நிவாரணத் தொகை பெற அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | கொலை | ரூ.10,000 | வாரிசுதாரருக்கு | குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்ட காவல் நிலையம் எந்த மாவட்டத்தில் அல்லது மாநகரத்தில் உள்ளதோ, அந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அல்லது காவல் ஆணையாளர் அவர்களிடம் நிதிஉதவி கோரி மனு அளிக்கப்படவேண்டும். |
| 2. | கடுமையான காயம் | ரூ.5,000 | பாதிக்கபட்டவருக்கு | ” |
| 3. | கற்பழிப்பு | ரூ.5,000 | பாதிக்கப்பட்டவருக்கு | ” |
| 4. | கடத்தப்பட்டு பாதிப்புக்குள்ளான பெண்களுக்கு | ரூ.5,000 | பாதிக்கப்பட்டவருக்கு | ” |
| 5. | வரதட்சணை காரணமாக தீக்காயமடைந்தால், | ரூ.5,000 | பாதிக்கப்பட்டவருக்கு | ” |
| 6. | வரதட்சணை காரணமாக உயிருடன் எரிக்க முயற்சித்தாலோ அல்லது வேறு வகையில் கொலை செய்ய முயற்சித்தாலோ பாதிக்கப்பட்ட பெண் மரணமடைந்தால் | ரூ.10,000 | வாரிசுதாரருக்கு | ” |
| 7. | வரதட்சணைக் கொடுமையினால் தற்கொலை செய்து கொண்ட பெண்களின் குழந்தைகளுக்கு | ரூ.10,000 | வாரிசுதாரருக்கு | ” |
| 8. | கொடுமையினால் பாதிக்கப்பட்டு நிரந்தரமாக ஊனமுற்ற பெண்களுக்கு | ரூ.5,000 | பாதிக்கப்பட்டவருக்கு | ” |

தமிழக அரசு, 54 தொழில்களில் ஈடுபட்டுவரும் கீழே அட்டவணையில் கண்டுள்ள அமைப்புச் சாராத் தொழிலாளர்களின் நலன் பேணும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலவாரியத்தை உருவாக்கியுள்ளது. இத்தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தையும் உருவாக்கியுள்ளது. இவ்வாரியத்தில் பதிவு செய்து, உடலுழைப்புத் தொழிலாளர்கள் திட்டத்தின் பலன்களைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தற்போது அரசு 20-7-2000 தேதியில் ஆட்டோ மற்றும் ஊர்தி ஓட்டுநர், சலவை, முடிதிருத்துவோர் மற்றும் தையல் தொழிலில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கென தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் ஊர்தி ஓட்டுநர் நலவாரியம், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நலவாரியம், தமிழ்நாடு முடித்திருத்துவோர் நலவாரியம் மற்றும் தமிழ்நாடு தையல் தொழிலாளர் நலவாரியம் என வாரியங்கள் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

### என்னென்ன நலத்திட்டங்கள் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்?

1. உடலுழைப்புத் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கும்போது விபத்து நேரிட்டு இறக்க நேர்ந்தால் அல்லது இரண்டு கைகளை அல்லது 2 கால்களை அல்லது 2 கண்களை இழந்தாலோ, ரூபாய் ஒரு இலட்சம் தன் விபத்து நிவாரணத்திட்டத்தின்படி வழங்கப்படும். அவ்வாறே உடல் ஊனம் ஏற்பட்டாலும் உரிய நட்டஈடு வழங்கப்படும்.

2. வாரியத்தில் பதிவு செய்த பெண் தொழிலாளர்களுக்குப் பிரசவத்திற்காக (இரண்டு குழந்தைகள் வரையில் மட்டும்) ரூ.1,000 வழங்கப்படும். கருச்சிதைவு ஏற்பட்டால் (இரண்டு முறைகளுக்கு மட்டும்) ரூ.500 மகப்பேறு நலத்திட்டத்தின்படி வழங்கப்படும்.

3. திட்டத்தின்படி தொழிலாளர்கள் மாதாமாதம் வங்கியின் மூலம் கட்டும் ரூ.20 மாதச் சந்தாத்தொகையை, அவர் 3 வருடத்திற்குக் குறையாமல் உறுப்பினராக இருந்தால் அவர் கட்டிய தொகையுடன் 12% கூட்டுவட்டியோடு, கட்டிய தொகைக்கு 25% பணிக்கொடையாக பணிமுடிப்பு நலத்திட்டத்தின்படி வழங்கப்படும். 3 வருடத்திற்குக் குறைவாக உறுப்பினராக இருந்தால் கட்டிய பணத்தை கூட்டு வட்டியோடு திருப்பித் தரப்படும்.




### திட்டத்தில் யார், யார் பதிவு செய்யலாம்?

தையல் தொழில், ஆட்டோ ஓட்டுநர் மற்றும் சலவைத் தொழில் போன்ற 54 தொழில் செய்யும் தொழிலாளர்கள் இதில் பயன்பெறத் தகுதியுள்ளவர்கள். (அட்டவணை பார்க்க) மேற்படி திட்டத்தில் பதிவு செய்யும் தொழிலாளர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 60 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

### எங்கு பதிவு செய்து கொள்ளவேண்டும்?

ஒவ்வொரு மாவட்டத்திலும் சம்பந்தப்பட்ட தொழிலாளர் துணை ஆய்வர்கள் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

### பதிவு செய்ய வரும் தொழிலாளர்கள் கொண்டு வர வேண்டியவை என்ன?

1. கீழே வெளியிடப்பட்டுள்ள எஸ்.எஸ்.டபிள்யு. மனுக்களை I & III-ல் அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து கொண்டு வரவேண்டும்.

2. குறிப்பாக தொழிலாளர்கள் 3 நிழற்படங்களையும், பிறந்த வயதிற்கான சான்றிதழினையும், தொழிலில் அவர் வேலை செய்வதற்கான தொழில் சான்றையும் பெற்று வரவேண்டும்.

3. வயதுச் சான்றைப் பொறுத்தவரை, வருவாய்த் துறையிலிருந்தோ, கல்வி சான்றிதழிலிருந்தோ அல்லது பதிவு செய்யப்பட்ட மருத்துவரிட மிருந்தோ பெற்று வரலாம். மாநில தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டையும் கொண்டு வரலாம். தொழிலைப் பொறுத்தவரை அதற்கான

சான்றினை சம்பந்தப்பட்ட வேலையளிப்பவரிட மிருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட தொழில் சார்ந்த தொழிற்சங்கத் தலைவர் அல்லது பொதுச்செயலாளரிடமிருந்தோ அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற தொழிற்சங்க நிர்வாகிகள் அல்லது தொழிலாளர் துறை அல்லது தொழிற்சாலைகள் துறை ஆய்வாளரிடமிருந்தோ பெற்று வரவேண்டும்.

4. பதிவுத் தொகையாக ரூ.20 கொண்டு வரவேண்டும்.

**பதிவு செய்தபின் உங்களுக்கு என்னென்ன வழங்கப்படும்?**

1. பதிவுத் தொகை ரூ.20 செலுத்தியதற்கான பண இரசீது.
2. திட்டத்தில் அவர்களை அனுமதித்தற்கான உத்தரவு.
3. அடையாள அட்டை.
4. மாதாமாதம் வங்கி மூலம் தொகை செலுத்துவதற்கான பாஸ் புத்தகம்.

**பதிவுத் தொகை செலுத்திய பின்பு தாங்கள் என்ன செய்ய வேண்டும்?**


சட்டம் மற்றும் திட்டத்தின்படி, தாங்கள் மாதாமாதம் செலுத்த வேண்டிய ரூ.20 எந்த வங்கியில், எந்த இடத்தில் செலுத்த வேண்டும் என்று தங்களுக்கு வழங்கப்பட்ட உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த வங்கிக்குச் சென்று மாதாமாதம் (பாஸ் புத்தகங்களுடன்) ரூ.20 செலுத்த வேண்டும்.

மேலும் இச்சந்தாவை காலாண்டு சந்தாவாகவோ அல்லது அரையாண்டு சந்தாவாகவோ அல்லது ஆண்டு சந்தாவாகவோ முன்னதாகவே கூட செலுத்தலாம். இவ்வாறு செலுத்தினால் ஒவ்வொரு மாதமும் வங்கிக்குச் சென்று செலுத்த வேண்டிய சிரமமும் குறையும், நேரமும் மிஞ்சும்.

வங்கி ஒவ்வொரு மாதமும் 11 முதல் 20ஆம் தேதி வரைதான் இந்தப்பணத்தை வசூலிக்கும். ஆகையால், தாங்கள் சம்பந்தப்பட்ட வங்கிக்கு ஒவ்வொரு மாதமும் 11ஆம் தேதியிலிருந்து 20ஆம் தேதிக்குள் சென்று மாத சந்தாவைச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு தொழிலாளியும் நேரடியாகச் சென்று செலுத்த வேண்டும் என்றில்லை. பல தொழிலாளர்களின் சார்பில் ஒருவர் சென்று செலுத்தலாம். இந்நேர்வில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தனித் தனி படிவம் பூர்த்தி செய்ய வேண்டியதில்லை. அனைத்து தொழிலாளர்களுக்கும் ஒரே படிவத்தைப் பூர்த்தி செய்து அத்துடன் பணம் செலுத்தும் வ.எண். தொழிலாளியின் பெயர், பதிவு எண் மற்றும் செலுத்தும் தொகை அடங்கிய ஒரு அறிக்கை தயாரித்து இணைக்க வேண்டும். இந்த அறிக்கையின் மூன்று நகல்களை இணைக்க வேண்டும்.

**அட்டவணை :**

1. கடைகள், டிப்போக்கள், தொழிற்சாலைகள், சேமிப்புக் கிடங்குகள், துறைமுகங்கள், இரயில்வே குட்ஸ் ஷெட்டுகள், யார்டுகள், சந்தைகள், விவசாய மார்க்கெட்டுகள் ஆகிய இடங்களில் எடைபோடுதல், அளவிடுதல், மூட்டை கட்டுதல், பேக்கிங் செய்தல், சுமை ஏற்றுதல், இறக்குதல், அடுக்குதல், குவித்தல் மற்றும் அது தொடர்பான ஆயத்த மற்றும் இடைப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள உடல் உழைப்பு வேலையில் ஈடுபட்டிருத்தல்.
2. பொதுத்துறை போக்குவரத்து வாகனங்களில் சுமை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் அது தொடர்பான் வேலைகளில் ஈடுபட்டிருத்தல்.
3. உணவு சேமிப்பு கிடங்குகளில் உணவுதானியங்களை ஏற்றுதல், மூட்டை கட்டுதல், மூட்டை தைத்தல் மற்றும் அது தொடர்பான மற்ற பணிகளில் ஈடுபட்டிருத்தல்.
4. உப்பளங்களில் வேலை செய்யும் தொழில்
5. மீன் பிடிக்கும் தொழில்
6. பட்டு தயாரிக்கும் தொழில்
7. மரம் அறுக்கும் தொழில்
8. கயிறு தயாரிக்கும் தொழில்



9. தோல் பதனிடுதல் மற்றும் தயாரித்தல்
10. தானியங்கி வாகனப் பணிமனைகளில் வேலை செய்தல்
11. அப்பளம் தயாரித்தல்
12. சாயப்பட்டறை தொழில்
13. மாட்டுவண்டி தொழில்
14. செங்கல் மற்றும் ஓடு தயாரித்தல்
15. பந்தல் கட்டும் தொழில்
16. சமையல் தொழில்
17. தேங்காய் உரிக்கும் தொழில்
18. வனப்பொருட்கள் சேகரிக்கும் தொழில்
19. உணவு நிறுவனங்களில் பணிபுரிதல்
20. முந்திரி தொழிற்சாலையில் பணிபுரிதல்
21. ஆட்டோ ரிக்ஷா, டாக்சி ஓட்டுதல்
22. சமையல் வாயு சிலிண்டர்கள் விநியோகித்தல்
23. சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் தொழில்
24. பொறியியல் தொழில்
25. பட்டாசு மற்றும் தீப்பெட்டி தயாரிக்கும் தொழில்
26. மடிக்கார் தொழில்
27. காலணிகள் மற்றும் தோல்பொருட்கள் தயாரித்தல்
28. சாக்கு தைக்கும் தொழில்
29. தங்க, வெள்ளி ஆபரணங்கள் பொருட்கள் தயாரித்தல்
30. கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழில்
31. அகர்பத்தி தயாரிக்கும் தொழில்
32. துணி துவைத்தல் மற்றும் சலவையிடுதல்
33. பதனீர் தயாரிக்கும் தொழில்
34. பேனா – எழுதுமுனை தயாரித்தல்
35. மாவு மில்கள், ஆயில் மில்கள், அரிசி மில்களில் பணிபுரியும் தொழில்
36. அச்சகங்களில் பணிபுரிதல்
37. விசைத்தறி தொழில்
38. தனியார் பாதுகாவல் பணி
39. பிளாஸ்டிக் தொழில்
40. மண்பாண்ட பொருட்கள் தயாரித்தல்
41. குப்பைகள், கழிவுப்பொருட்கள் சேகரித்தல்
42. முடிவெட்டுதல் மற்றும் அழகுநிலையங்களில் பணிபுரிதல்
43. தெருச்சுமை வியாபாரம்
44. ஜவ்வரிசி தயாரித்தல்
45. சிந்தெடிக் ஜெம் கட்டிங் தொழில்
46. பட்டுப்புழு வளர்த்தல்
47. கடைகள், நிறுவனங்களில் பணிபுரிதல்
48. தையல் வேலை செய்தல்
49. மரம் ஏறும் தொழில்
50. தகர அடைப்பான்கள் தயாரித்தல்
51. பாத்திரங்கள் தயாரித்தல்
52. மரவேலைகள் செய்தல்
53. சைக்கிள் பழுதுபார்க்கும் தொழில்
54. வீட்டு வேலை செய்யும் தொழில்

இவற்றில், கீழ்க்காணும் 7 தொழிலாளர்களுக்கு தனித்தனியாக வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்
2. தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம்
3. தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம்
4. தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்
5. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம்
6. தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம்
7. தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்
8. ஓவியர் நல வாரியம் அமைக்கப்படவுள்ளது.

**படிவம் எண். SSW - 1**

**பதிவிற்கான விண்ணப்பம்**

## தமிழ்நாடு 1999ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலத்திட்டம்

பதிவு எண்.................
(இவ்வலுவலகத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்)

1. தொழிலாளரின் பெயர் :
2. தந்தை / கணவர் பெயர் :
3. பிறந்த நாள் : நாள் மாதம் ஆண்டு
4. அங்க அடையாளங்கள்
   1.
   2.
5. திருமணமானவரா, திருமணமாகாதவரா? விதவையா, மனைவியை இழந்தவரா என்பது :
6. நிலையான முகவரி :
7. தற்போதைய முகவரி :
8. சொந்தத் தொழில் புரிபவரா அல்லது வேறிடத்தில் வேலை பார்க்கிறாரா? என்பதைக் குறிப்பிடவும் :
9. வேறிடத்தில் வேலை பார்ப்பவராக இருந்தால் அவர் வேலை பார்க்கும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி மேலும் தொழிலதிபர் ஒப்பந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றை அளிக்கவும் :
10. பணியின் தன்மை :
11. விண்ணப்பிக்கும் நாளன்றுள்ளபடி பணிபுரிந்து வரும் ஆண்டுகளின் எண்ணிக்கை :

உடலுழைப்பு பணியாளரின் கையொப்பம்
அல்லது இடதுகை பெருவிரல் ரேகை

**வேலை பார்ப்பது பற்றிய சான்றிதழ்**

பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பத்தில் இத்தொழிலாளர் அளித்துள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்தவரையிலும் நான் நம்புகின்ற வரையிலும் உண்மையே என்று சான்றளிக்கிறேன்.

இடம் :
நாள் :

சான்றிதழ் வழங்குபவரின்/
அதிகாரியின் கையொப்பம் மற்றும் பெயர்

★ அவசியமில்லாதவற்றை அடித்துவிடவும்

**படிவம் எண். SSW - III**

## தமிழ்நாடு 1999ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலத்திட்டம்

**நியமனப் படிவம்**

பதிவு எண் :

இந்நிதியிலிருந்து எனக்குச் சேர வேண்டிய தொகையை, நான் பெறுவதற்குரிய கால அளவிற்கு முன்னரே நான் இறந்துவிடும் நேர்வில், அத்தொகையை பெறுவதற்கு கீழ்க்காணும் நபரை / நபர்களை இதனால் நான் நியமிக்கிறேன்.

| நியமனதாரரின் நியமனதாரர்களின் பெயரும் முகவரியும் (1) | நியமனதாரர்களுக்குத் தொழிலாளருடன் உள்ள உறவு முறை (2) | நியமனதாரரின் வயது (3) | ஒவ்வொரு நியமனதாரருக்கும் வழங்கப்பட வேண்டிய பங்குத் தொகையின் அளவு (4) |
|---|---|---|---|
| | | | |

இடம் :
நாள் :

உடலுழைப்புத் தொழிலாளரின் கையொப்பம் அல்லது இடதுகை பெருவிரல் ரேகை.

## உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குக் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம், வருங்கால வைப்புநிதித் திட்டம், தொழிலாளர் மாநில காப்பீடுத் திட்டம், ஓய்வூதியம் மற்றும் குழந்தைகள் காப்பகங்கள் ஆகிய நலத்திட்டங்கள் அமல் செய்யப்பட வேண்டும்.

இந்நலத் திட்டங்களை அமல் செய்வதற்குத் தேவையான நிதிக்காக அரசு ஒரு நல நிதியை அமைத்துள்ளது. இந்நல நிதியின் பெயர் "தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் உடல் உழைப்புத் தொழிலாளர்கள் பொதுநலநிதி" ஆகும். 1982–ஆம் ஆண்டு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை சீரமைப்பு மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் பிரிவு 8–ஏ–ன்படி தமிழ்நாட்டின் எல்லைக்குள் கட்டுமானப் பணியினை மேற்கொள்ளும் எந்த ஒரு நபரும் அக்கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினை அந்நிதிக்குச் சந்தாவாகச் செலுத்த வேண்டும். 1.11.94 முதல் இந்த சதவிகிதம் கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டின் 0.1% ஆக இருந்தது. 1.7.97 முதல் இந்த சதவிகிதம் கட்டுமானப் பணியின் மதிப்பீட்டில் 0.3% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.


இத்திட்டத்தினை அமல் செய்வதற்காக அரசு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை உருவாக்கியுள்ளது. அவ்வாரியத்தின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 21. இவர்களில் 5 பேர் அரசு தரப்பு உறுப்பினர்கள். 8 பேர் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் 8 பேர் வேலை அளிப்பவர்களின் பிரதிநிதிகள். அரசு பிரதிநிதியான தொழிலாளர் ஆணையர் இவ்வாரியத்தின் தலைவர் ஆவார்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குத் தற்போது கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் அமல் செய்யப்பட்டு வருகின்றன.

- ☐ விபத்துக் காப்பீட்டுத் திட்டம்
- ☐ ஈமச்சடங்கு உதவித் திட்டம்
- ☐ இயற்கை மரணம் உதவித் திட்டம்
- ☐ கல்வி உதவித் தொகைத் திட்டம்
- ☐ திருமண உதவித் தொகைத் திட்டம்
- ☐ மகப்பேறு / கருச்சிதைவு உதவித் தொகைத் திட்டம்

### விபத்துக் காப்பீட்டுத் திட்டம்


வாரியத்தில் ரூ.25 செலுத்தி பதிவு செய்து கொண்ட அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வாறு காப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர்கள் விபத்தில் காயம் அடைந்தாலோ அல்லது உயிரிழந்தாலோ, காப்பீட்டு தொகை பெறுவார்கள். மாண்புமிகு தொழிலாளர்




நல அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி விபத்தில் உயிரிழந்தால் ரூ.1,00,000, 10.5.98 முதல் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு முன்னர் இக்காப்பீட்டுத் தொகை ரூ.50,000–ஆக இருந்தது. விபத்தில் காயம் அடைந்தால் அக்காயத்தால் தொழிலாளிக்கு ஏற்படும் நிரந்தர ஊனத்தின் தன்மையைப் பொறுத்து அவருக்குக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

### ஈமச்சடங்கு உதவித்தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இறந்தால் அவருடைய நியமனதாரருக்கு 28.2.99 முடிய உள்ள காலத்தில் ரூ.500 ஈமச்சடங்கு உதவித்தொகையாக வழங்கப்பட்டு வந்தது. 1.3.99 முதல் இத்தொகை ரூ.2,000–ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.



## இயற்கை மரணம் உதவித் தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இயற்கை மரணம் அடைந்தால் அவரது நியமனதாரருக்கு ரூ.5000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது

## கல்வி உதவித்தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் 10 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றால் ரூ.750–ம், 12ம் வகுப்புத் தேர்ச்சி பெற்றால் ரூ.1000–ம் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை இரு பிள்ளைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.




## திருமண உதவித்தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் திருமணத்திற்குத் திருமண உதவித்தொகையாக ரூ.1000 வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை இரு பிள்ளைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

## மகப்பேறு / கருக்கலைப்பு உதவித் தொகைத் திட்டம்

பதிவுபெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளிக்கு மகப்பேறு / கருக்கலைப்புக்கு உதவித்தொகையாக ரூ.2000 வழங்கப்படுகிறது.



## பதிவு செய்து கொள்ளவேண்டும்

மேற்காணும் சலுகைகளைப் போல தமிழ்நாட்டின் எல்லைக்குள் பணிபுரியும் எந்த ஒரு கட்டுமானத் தொழிலாளியும் ரூ.25/–ஐ செலுத்தி இவ்வாரியத்தில் பதிவு செய்து கொள்ளலாம். கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு சென்னை, கடலூர், வேலூர், திண்டுக்கல், குன்னூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நடைபெறுகிறது. பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு கட்டுமானத் தொழிலாளிக்கும் ஒரு அடையாள அட்டை வழங்கப்படுகின்றது.

★ ★ ★

வனங்கள், இயற்கை வளச்செல்வங்களை மீண்டும் புதுப்பித்தல் மற்றும் சுற்றுச்சூழலின் மாறாத்தன்மையை நிலைநிறுத்துதல் ஆகிய இரண்டு அம்சங்களை நிறைவேற்றும் ஒரு கூட்டு அமைப்பாகத் திகழ்கிறது. மத்திய, மாநில அரசுகள் மற்றும் பன்னாட்டு நிதியுதவி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும் பல்வேறு செயல் திட்டங்களின் வாயிலாக இத்தகைய வற்றாத விலைமதிப்பிட முடியாத இயற்கைச் செல்வங்களை அழியாமல் பேணிப் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கூட்டு வன நிர்வாகம்**

தமிழ்நாடு அரசு, உள்ளூர் மக்களைத் தரம் குன்றிய வனப்பகுதிகளில் மர உற்பத்தி மற்றும் பாதுகாப்பில் ஈடுபடுத்துவதிலும், அவ்வனங்களிலிருந்து தொடரும் பயன்களை பங்கீடு செய்து கொள்வதிலும் உறுதியாக உள்ளது. இந்த ஏற்பாடு 'கூட்டு வன நிர்வாகம்' எனப்படும்.

அவ்வமைப்பு திட்டமிட்டுப் பணி செய்தல், பாதுகாப்பு, அறுவடை மற்றும் பயன்களைப் பங்கீடு செய்து கொள்ளுதல் போன்ற பணிகளை முக்கியமாக தரம் குன்றிய காடுகளில் செயல்படுத்தும். சம்பந்தப்பட்ட வனச்சரகர், கிராம வனக்குழு அமைக்கும் செயற்முறைகளைத் துவங்குவர். கிராம வனக்குழு



தேவைப்படும் பொழுது, ஆனால் குறைந்த பட்சம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடும். ஒவ்வொரு கிராம வனக்குழுவும் ஒரு செயற்குழுவை தேர்ந்தெடுக்கும். குறைந்தது 5 உறுப்பினர்களும் அதிகபட்சம் 15 உறுப்பினர்களும் அச்செயல் குழுவில் இருப்பர். அதில் ஒரு குக்கிராமத்திற்குக் குறைந்தது இரண்டு உறுப்பினர்கள் வீதமும், அதில் ஒருவர் மகளிராகவும் தேர்வு செய்யப்படுவர்.

இருப்பினைப் பொறுத்து, கிராம வனக்குழு உறுப்பினர்களின் குடும்பத்திற்கு மரம் அல்லாத விளைபொருட்கள் (சிறுவிளை பொருள்) அனைத்தும் இலவசமாக வழங்கப்படும். மிகுதியாக இருப்பின், அவை செயல்குழுவால் விற்கப்படும். தொழிற்நுட்ப ரீதியாக மரம் அல்லாத வன விளைபொருட்கள் இருப்பு மாவட்ட / கோட்ட வன அலுவலரால் தீர்மானிக்கப்படும். வேறு விளைச்சல் பொருட்கள் மாவட்ட வன அலுவலரால் தீர்மானிக்கப்பட்டு, செயற்குழுவால் விற்கப்படும். இவ்வாறு பெறப்பட்ட விற்பனைத் தொகையில் 25 சதவீதத்தை கிராம வன வளர்ச்சி நிதியில் செலுத்திவிட்டு, மீதியை கிராம வனக்குழு உறுப்பினர்களிடையே செயற்குழு சமமாகப் பகிர்ந்தளிக்கும்.

கிராம வனக்குழுவின் தலைவரும் மற்றும் உறுப்பினர் செயலரும் சேர்ந்து கையொப்பமிட்டும் ஒரு கூட்டுக்கணக்கினை கிராம வனக்குழுவின் பேரில் கிராமத்திலுள்ள / கிராமத்திற்கு அருகிலுள்ள ஒரு வங்கியில் / தபால் நிலையத்தில் ஆரம்பித்து நிர்வகிப்பார்கள். கிராம வனக்குழுவிற்கு வரும் வருவாய் அனைத்தும் இந்த கணக்கில் வைக்கப்படும். கிராம வனக்குழுவின் தலைவரும், செயலர் உறுப்பினரும் சேர்ந்து இந்த நிதியினை கூட்டாகக் கையாள்வதோடு கிராம வனக்குழுவிற்கு நிதி நிர்வாகத்திற்கு கணக்கு ஒப்புவிக்க கடமைப்பட்டுள்ளவராவர்.

தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் 1949 மற்றும் தமிழ்நாடு மலைப்பகுதிச் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் 1955–இன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள மலைப் பகுதிகளில் எந்தவொரு மரத்தினையும் வெட்ட மாவட்ட ஆட்சித்தலைவரை தலைமையாகக் கொண்ட குழுவிடம் முன் அனுமதி பெற வேண்டும். இப்பகுதிகளில் மரங்களை வெட்டுவதற்கான மனுக்கள் மீது குழு முடிவு செய்யும். இக்குழு தேவைக்கேற்ப அவ்வப்போது அல்லது இரண்டு மாதங்களுக்கொரு முறை கூடும்.

தமிழ்நாட்டில் வனச்சட்டத்தில் பின்வரும் மர இனங்கள் அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன.

1. கருங்காலி
2. செம்மரம்
3. தோதகத்தி
4. சந்தனமரம்
5. தேக்குமரம்

தமிழ்நாட்டில் தடி மரங்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கும் வனத்துறையின் அனுமதிச் சீட்டு இன்றி நிலம், நீர், ஆகாயம் வழியாக கொண்டு செல்லுதல் கூடாது. சம்பந்தப்பட்ட பகுதியில் சரக அலுவலரிடம் விண்ணப்பித்து கீழ்க்கண்ட கட்டணம் செலுத்தி பெறப்படும் படிவம் – 2 அனுமதிச்சீட்டின் மூலம் தடிமரம், விறகு மற்றும் மூங்கில்களை தனியார் நிலங்களிலிருந்தோ, கடை அல்லது சந்தைகளிலிருந்தோ எடுத்துச் செல்லலாம்.

| | |
|---|---|
| ஒரு மாட்டு வண்டி பாரம் | : ரூ.10.00 |
| ஒரு லாரி பாரம் | : ரூ.50.00 |

சந்தனக் கட்டைகள் பொது ஏலத்தில் திருப்பத்தூர், சேலம் மற்றும் சத்தியமங்கலம் கிடங்குகளில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் விற்கப்படுகின்றன. இந்த ஏலங்களில் பங்குபெற விருப்பம் உள்ள நபர்கள்/நிறுவனம் தங்கள் பெயர்களை சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலரிடம் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

நியாயமான தேவைகளுக்காக, சில்லறை விலையில் சந்தனக்கட்டைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

சில்லறை விற்பனைக்கான விலை, வருடந்தோறும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலரால் நிர்ணயம் செய்து அறிவிக்கப்படுகிறது. அதனடிப்படையில் சில்லறை விற்பனை செய்யப்படும். ★

**நலத்திட்டத்தின் பெயர் :**


**1. மாதாந்திர நிதியுதவி**

**தகுதி :**

60 வயதுக்கு மேல் வறிய நிலையில் உள்ள முன்னாள் படைவீரர் / விதவைகள். (மாதம் ரூ.100 வீதம் ஓராண்டிற்கு)

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.



**2. மொத்த மானிய நிதிஉதவி**

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். முன்னாள் படைவீரர்கள்/ விதவைகள் சிறுதொழில் செய்து வருமானம் ஈட்டிட ரூ.5,000 வரை நிதியுதவி.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**3. திருமண நிதியுதவி**

**தகுதி :**

வழங்கப்படும் தொகை ரூ.3,000 (ஒரு மகளுக்கு மட்டும்) ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகாது இருத்தல் வேண்டும். முன்னாள் படை வீரர் பத்தாண்டுகள் இராணுவத்தில் சேவை செய்து இருத்தல் அல்லது இரண்டாம் உலகப் போரில்



பணிபுரிந்து இருத்தல் வேண்டும். மணமகள் குறைந்த அளவு கல்வித் தகுதி : ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மறைந்த முன்னாள் படைவீரரின் மகளின் திருமணத்திற்கு முன்னாள் படைவீரரின் பணிக் காலத்தைக் கணக்கில் கொள்ளத் தேவையில்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**4. ஈமச்சடங்கு நிதியுதவி**

**தகுதி :**

வழங்கப்படும் தொகை ரூ.2,000. முன்னாள் படைவீரரைச் சார்ந்தோர்கள் / விதவையர்க்கு வருமான வரம்பு ஏதுமில்லை (முன்னாள் படைவீரர் இறப்பிற்கு மட்டும்).

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**5. முதியோர் ஓய்வூதியம்**

**தகுதி :**

ஆதரவற்ற முன்னாள் படைவீரர்கள் / விதவைகள் மாதம் ரூ.300 வீதம் ஆயுட்காலம் வரை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.



6. புயல் வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் இடர்பாடு நிவாரண நிதியுதவி ரூ.300

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். வீடு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதற்கான சான்று தொடர்புடைய வட்டாட்சியரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். வருவாய்த் துறையிலிருந்து இதற்குண்டான நிதிஉதவி பெற்றிருத்தல் கூடாது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

7. முழுமையாக கண்பார்வை இழந்த முன்னாள் படைவீரர் / விதவைகளுக்கு ஆயுட்கால நிவாரண நிதியுதவி மாதம் ரூ.300

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். முழுமையாக கண்பார்வை அற்றவர் என்பதற்கான சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

8. புற்றுநோய், தொழுநோய் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்/விதவைகளுக்கு ஆயுட்கால நிவாரண நிதியுதவி

**தகுதி :**

வழங்கப்படும் தொகை புற்றுநோயாளிக்கு ரூ.500–ம், தொழுநோயாளிக்கு ரூ.300–ம், ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். புற்றுநோய் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதற்கான மருத்துவச் சான்றிதழ் பெற்று இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

9. செயற்கை பல்செட், மூக்குக் கண்ணாடி, காது கேட்கும் கருவி போன்ற செயற்கை உறுப்புகள் வாங்க மொத்த நிதியுதவி

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். தேவையான செயற்கை உறுப்பு அவசியம் பொருத்த வேண்டும் என்பதற்குரிய அரசு சிறப்பு மருத்துவரின் சான்றிதழ் பெற வேண்டும். செயற்கை உபகரணங்களில் 1 கருவியின் விலை ரூ.1,000 அல்லது கருவியின் விலை இதில் எது குறைவோ அத்தொகை. மூக்குக் கண்ணாடிக்கு அதிகபட்சம் ரூ.300 வரை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

10. காசநோய் சானிடோரியத்தில் தங்கி சிகிச்சை பெறும் முன்னாள் படைவீரர்களுக்குக் கைச்செலவு

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். காசநோயால் பாதிக்கப்பட்டு காசநோய் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் காலத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.10 வீதம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**11. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட படைவீரர்களுக்கு ஆயுட்கால நிவாரண நிதியுதவி**

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டதற்கான மருத்துவச் சான்றிதழ் பெற வேண்டும். மாதம் ரூ.300 வீதம்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**12. கல்விச் சலுகை**

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். புத்தகப் படி கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

**ஒரு கல்வி ஆண்டுக்கு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை | – | ரூ.100 |
| 2. | 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை | – | ரூ.200 |
| 3. | 9ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை | – | ரூ.200 |
| 4. | மேல்நிலைப் பள்ளிகள் | – | ரூ.300 |
| 5. | இளங்கலைப் பட்டம் | – | ரூ.400 |
| 6. | முதுகலைப் பட்டம் | – | ரூ.500 |

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**13. இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை ஆகிய பெரிய அறுவை சிகிச்சைகளுக்கான நிதியுதவி ரூ.20,000 வரை**

**தகுதி :**

முன்னாள் படைவீரருக்கு மட்டும். இராணுவ மருத்துவமனை / அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் இத்தகைய அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளுதல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.50,000 வரை இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.


**14. தொகுப்பு நிதி வருடாந்திர பராமரிப்பு மானியம்**

**தகுதி :**

போரில் மரணமுற்ற படைவீரரின் வாரிசுதாரர்/ ஊனமுற்ற முன்னாள் படைவீரராக இருத்தல் வேண்டும். ஆண்டுக்கு ரூ.2,000 வீதம் ஆயுட்காலம் முழுவதற்கும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.



### 15. உலகப் போர் நிதியுதவி

**தகுதி :**

முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த முன்னாள் படைவீரர் அவர்தம் விதவைகளாக இருத்தல் வேண்டும். மாத வருமானம் ரூ.500–க்குள் இருத்தல் வேண்டும். மாதம் ரூ.300 வீதம் ஆயுட்காலம் வரை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

### 16. பயிற்சி உதவித்தொகை கல்விச் சலுகை

**தகுதி :**

தொழிற்கல்வி, பட்டயப்படிப்பு மற்றும் கல்லூரிகளில் பயிலும் மேற்படிப்பு படிக்கும் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளாக இருத்தல் வேண்டும்.

படிப்புக் கட்டணம், தனிக் கட்டணம், தேர்வுக் கட்டணம், விடுதிக் கட்டணம், புத்தகப்படி மற்றும் பயிற்சி உதவித்தொகை – அரசு பயிலகங்களில் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மிகாமல்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

### 17. வீடுகட்டும் மானியம் ரூ.30,000

**தகுதி :**

போரில் இறந்த முன்னாள் படைவீரர்கள் விதவை மற்றும் ஊனமுற்ற படைவீரராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

### 18. வங்கிக் கடன் வட்டி மானியம்

**தகுதி :**

முன்னாள் படைவீரர்கள் / விதவைகள் ரூ.2,50,000 வரை வாங்கும் வங்கிக் கடனுக்கு வங்கி விதிக்கும் வட்டியில் 50% வட்டியை மானியமாகப் பெறலாம். முதலில் வங்கியை அணுகி வங்கியினர் கடன் தர இசைந்தால் முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை வட்டி மானியத்திற்காக அணுகலாம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை


### 19. முன்னுரிமையில் பம்ப் செட்டிற்கு மின்இணைப்பு வழங்குதல்

**தகுதி :**

முன்னாள் படைவீரர் / விதவைகள் மின்னிணைப்பு பெற மின்சார வாரியத்தில் பதிவு செய்து ஓராண்டிற்குப் பின் உரிய விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.



### 20. செம்பெக்ஸ்–I

**தகுதி :**

இத்திட்டத்தின் கீழ் 60 வயதுக்கு உட்பட்டுள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரது விதவையருக்கு வாகனங்கள் வாங்கவும், தொழிற்சாலைகளை நிறுவிடவும், இதர தொழிற்சாலைக்காகவும் ரூ.15 இலட்சங்களுக்கு மேற்படாத திட்டங்களுக்குக் கடனுதவிகள் பெறலாம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**21. செம்பெக்ஸ்–II**

**தகுதி :**

இத்திட்டத்திற்கு வயது வரம்பு கிடையாது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையருக்கு விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களுக்கு ரூ.10.00 இலட்சங்களுக்கு மேற்படாத திட்டங்களுக்குக் கடனுதவிகள் பெற்றுத் தரப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**22. செம்பெக்ஸ்–III**

**தகுதி :**

இத்திட்டத்திற்கு வயது வரம்பு கிடையாது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரது விதவையருக்கு கதர் மற்றும் கிராமத் தொழில்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. கடனைப் பெற விண்ணப்பதாரர்கள் சொந்த நிலம் பெற்றிருத்தல் வேண்டும். நிலம் சொந்தமாக இல்லாதவர் 1:10 என்ற விகிதத்தில் விளிம்புத் தொகை செலுத்திக் கடன் பெறலாம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

**23. இராணுவப் பணி ஊக்க மானியம்**

**தகுதி :**

தனது ஒரே மகன் அல்லது மகளை இராணுவப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு வருடந்தோறும் ரூ.450 வழங்குதல். உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**24. வீட்டுவரி செலுத்துவதில் இருந்து விலக்களித்தல் (மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் விதிக்கப்படும் தொகை)**

**தகுதி :**

சொந்தமாக வீடு உள்ள வீர விருது பெற்றுள்ள முன்னாள் படைவீரர் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் விதவைகளாக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**25. மருத்துவ சத்துணவு மானியம் (இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து பெறுதல்) : மாதம் ரூ.300 வீதம் 6 மாதத்திற்கு**

**தகுதி :**

காசநோய், தொழுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் படை வீரர்கள்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**26. ஓட்டுநர் உரிமம் இலவசமாக புதுப்பித்தல் சான்று வழங்கப்படுதல்**

**தகுதி :**

முன்னாள் படை வீரர்கள் ஓட்டுநர் உரிமம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

**27. வீட்டுவசதி வாரியத்தால் 7 விழுக்காடு ஒதுக்கீடு**

**தகுதி :**

முன்னாள் படைவீரர்கள் / படைப்பணியில் உள்ளவர்கள்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

## 28. தொழில்நுட்பக் கல்லூரிகளில் முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோருக்கு இடஒதுக்கீடு

**தகுதி :**

முன்னாள் படைவீரர்கள் / விதவைகள் / அவர்களைச் சார்ந்தோருக்கு இடஒதுக்கீட்டின் அடிப்படையில் இடஒதுக்கீடு பெற உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

## 29.சான்றிதழ் வழங்குதல்

**தகுதி :**




முன்னாள் படைவீரர்கள் / சார்ந்தோர்கள் கல்வி நிலையங்களில், வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறவும், இதர சலுகைகள் பெறவும், உண்மைச் சான்று பெறலாம். வேலைவாய்ப்பில் முன்னுரிமைச் சான்று ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

## 30.முன்னாள் படைவீரரின் அனாதை சிறார்களுக்கான கல்வி உதவித்தொகை

**தகுதி :**

பள்ளி / கல்லூரியால் வசூலிக்கப்படும் பயிற்சி / தனி தேர்வு / விடுதி / பேருந்து கட்டணங்கள், புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்களுக்கான செலவுத் தொகை வழங்கப்படும். ஆண்டுக்கு 2 செட் சீருடைகள், பள்ளியில் பயிலுவோருக்கு மாதம் ரூ.50–ம், கல்லூரி பயிலுவோருக்கு மாதம் ரூ.100 வீதம் கைச் செலவு பணம் வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

## 31.தையல் இயந்திரம் மானியம்

**தகுதி :**

முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் தையற் பயிற்சி, பள்ளியில் பயிற்சி பெற்ற ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகையாகாது உள்ள முன்னாள் படைவீரரின் மனைவியர் / மகளிருக்கு தையல் இயந்திரம் வாங்குவதற்கு ரூ.1,000 மானியம் வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

## 32.மனநலம் குன்றிய முன்னாள் படைவீரர் சிறாருக்கு பராமரிப்பு மானியம்

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகையாகாத முன்னாள் படைவீரரின் மனநலம் குன்றிய சிறாருக்கு பராமரிப்பு மானியமாக மாதம் ரூ.300–ம் மருத்துவச் செலவாக மாதம் ரூ.200–ம் மருத்துவமனையில் இருக்கும் காலத்திற்கு கைப்பணம் மாதம் ரூ.100 வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

## 33.தொழிற்கூட மானியம்

**தகுதி :**

ஆண்டு வருமானம் ஒரு இலட்சத்திற்கு மிகையாகாத தொழில் முனையும் முன்னாள்

படைவீரருக்கு தொழிற்கூடம் / மனையின் விலையில் 25% அல்லது ரூ.50,000–க்கு மிகாது வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

## 34.கருணைத் தொகை

**தகுதி :**

போர் மற்றும் போருக்கு நிகரான நடவடிக்கையில் உயிர் துறக்கும் படைவீரர் குடும்பத்தினருக்கு ரூ.30,000 தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

## 35.திருமண மானியம்

**தகுதி :**

போரில் உயிரிழந்தோர் மற்றும் ஊனமுற்றோர் மகளுக்கு ரூ.10,000 திருமண மானியம் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.



## 36.போரில் உயிரிழந்தவர்களின் குழந்தைகளுக்கு பள்ளிச் சீருடை மற்றும் புத்தகப்படி

**தகுதி :**

| | | |
|---|---|---|
| வகுப்பு 1 முதல் 5 வரை | – | ரூ.1,000 |
| 6 முதல் 8 வரை | – | ரூ.1,250 |
| 9 முதல் 12 வரை | – | ரூ.1,500 |

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

## 37.சிறுதொழில் செய்ய முதலீட்டு ஊக்குதவி மானியம்

ரூ.5,000 அல்லது கடன் தொகையில் 25% இதில் குறைவான தொகையினை மட்டும் வழங்கப்படும்.

**தகுதி :**

1. வங்கி மூலம் முன்னாள் படைவீரர் / விதவை கடன் பெற்ற பின்பு வழங்கப்படும்.
2. ஆண்டு வருமானம் ரூ.50,000 வரை.
3. இம்மானியம் பெறுவோர் மொத்த மானிய உதவித் தொகை பெறத் தகுதியற்றவர்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

★ ★ ★

# திருக்குறள் கீர்த்தனைகள் இசை நிகழ்ச்சி முழுவதும் பாடப்படும் நிலையை உருவாக்க வேண்டும்

– முதலமைச்சர் **கலைஞர்**

இன்று ''சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது'' என்பார்களே, அதைப் போன்ற ஒரு நிகழ்ச்சியில் நானும் நீங்களும் இதுவரை திளைத்திருந்தோம். நம்முடைய கலைப் புதையல்களை வெளிக்கொணர்ந்து அதனுடைய சிறப்பையும் ஒளிமிகு புகழையும் ஆற்றலையும் வெளிக்காட்டிய வித்தகர்கள் இந்த மேடையிலே அமர்ந்திருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்க் கடல் என்ற சொல்லலாம், கடலுக்குக்கூட எல்லையிருப்பதைப் போன்றதொரு தோற்றம் உண்டு. எனவே அந்த உவமையை விடுத்து நம்முடைய பெரியவர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்களை தமிழ் வானம் என்றழைப்பது பொருத்தமுடையதாக இருக்கும். அந்த வானத்தின் பெருமையை உணர்ந்த தமிழகம், இந்தத் தமிழகம்.

அவர் இங்கே ''இயல் செல்வம்'' என்ற விருதினை முத்தமிழ்ப் பேரவையின் சார்பிலே வழங்கியதைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். இந்த விழாவிற்குத் தலைமை ஏற்றுள்ள பெரியவர் செம்மங்குடி அவர்கள் தலைமையுரையாற்றும் போது, தனக்கு பத்மவிபூஷன் விருது கருணாநிதியின் சிபாரிசால்தான் கிடைத்தது என்று குறிப்பட்டார். நான் அவருக்கும் உங்களுக்கும் சொல்வேன் பத்மவிபூஷன் விருது ஒரு நாள் என் கனவிலே தோன்றி ''என்னை எப்படியாவது நீ செம்மங்குடியார் பெயரோடு சேர்த்து விடு'' என்று சிபாரிசு செய்து அப்படி செம்மங்குடி அவர்களுக்கு பத்மவிபூஷன் விருது பொருத்தப்பட்டிருக்கிறதே அல்லாமல், இதிலே என்னுடைய சிபாரிசு ஒன்றும் இல்லை.

அவருடைய வித்வத்திற்கு அவருடைய சங்கீத ஞானத்திற்கு, அவருடைய இசையாற்றலுக்கு பத்மவிபூஷனை விட இன்னும் பெரிய விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்பதை நான் மிக நன்றாக உணர்வேன்.

திரு ஏ.கே.சி.நடராஜன் ராஜரத்தினா விருதை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது, நாதஸ்வர சக்கரவர்த்தி திருவாவடுதுறை ராஜரத்தினம் அவர்களிடத்தில் எந்த அளவிற்கு அன்பும் அடக்க உணர்வும் கொண்டு இளமைக் காலத்திலே நான் பழகினேன் என்பதை இங்கே எடுத்துக் காட்டினார்கள். என்னுடைய கரங்களால் இந்த விருதைப் பெறக் காத்திருந்தேன் என்று அவர் சொன்னார். அவருடைய கழுத்திலே இந்த விருதினை அணிவிக்க நானும் காத்திருந்தேன் என்பதை அவருக்கு நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

''இசைச் செல்வம்'' விருதினை திருமதி சுதா ரகுநாதன் பெற்றிருக்கிறார். அவர் இந்தியத் திருநாட்டில் ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று போற்றப்படுகின்ற ஒரு சிலரில் ஒருவராகத் திகழ்பவர் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"நாட்டியச் செல்வம் விருது" திருமதி வைஜயந்திமாலா' அவர்களுக்கு வழங்கப்பட்டு அதன் காரணமாக இந்தப் பேரவை பெருமை கொள்கிறது.


அவர் இங்கே பேசும்போது, தான் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலுங்கூட, எந்தவொரு மேடையிலும் கலைஞரை நான் தாக்கிப் பேசியது கிடையாது என்றார். அவர் தாக்காதது மாத்திரமல்ல, என்னுடைய கருத்துக்களை அவர் தாங்கியதும் உண்டு.

ஒன்றை இந்த நேரத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவருடைய நாட்டியத்தைப் பற்றி, அவருடைய இசை மேன்மையைப் பற்றி, அவருடைய கலை ஞானத்தைப் பற்றியெல்லாம் நான் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அது கொல்லன் தெருவிலே ஊசி விற்கும் கதையாக ஆகிவிடும் என்பதை நான் அறிவேன்.

அப்படிப்பட்டவருக்கு 'நாட்டியச் செல்வம' அவருடைய கலையாற்றலுக்காக இங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

சிவபுரி பத்மநாபன் அவர்களுக்கு 'நாதஸ்வரச் செல்வம்' டி.ஆர் .சுப்பிரமணியம் அவர்களுக்கு ''தவில்





செல்வம்' அ.நடராஜன் அவர்களுக்கு "மிருதங்கச் செல்வம்", சோமு அவர்களுக்கு 'லயச் செல்வம் விருதுகள் இங்கே வழங்கப்பட்டுள்ளன. அவர்களையெல்லாம் நான் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன்.

அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் இங்கே உரையாற்றும் போதும் விழாத்தலைவர் செம்மங்குடியார் இங்கே பேசும்போதும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இசைப்பள்ளிகளைப் பற்றியும் இசைக்கல்லூரிகளைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள்.

என்னதான் வயதானாலும்கூட முதிர்ச்சி அடைந்தாலுங்கூட செம்மங்குடியார் போன்றவர்கள் இன்னமும் இந்தக் கலையிலே எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளார்கள் என்பதை நாம்மால் உணர முடிகின்றது.

அவர்கள் பேசும்போது திருக்குறளை கீர்த்தனைகளாகப் பாடுகின்ற ஒரு ஏற்பாட்டை ஒரு அரிய கண்டுபிடிப்பை மயிலாடுதுறை டி..ஆர்.விஸ்வநாத சாஸ்திரிகள் உருவாக்கியிருக்கிறார் என்பதை எடுத்துக்கூறி இரண்டு பெரிய புத்தகங்களை என்னிடத்திலே கொடுத்தார்கள். மேடையிலேயே அதைக் கொஞ்சம் படித்துப் பார்த்தேன். 'திருக்குறள் மதுர கீர்த்தனை' என்பது அந்தப் புத்தகங்களின் பெயர். அதிலே,'நன்றி மறப்பது நன்றன்று' என்ற வரியைக் கூட அவர்கள் இங்கே பாடிக் காட்டினார்கள். திருக்குறள் கீர்த்தனைகளாக இன்றைக்கு வந்திருக்கிறது என்பது வள்ளுவருக்கு திருக்குறளுக்கு தமிழுக்குக் கிடைத்துள்ள பெருமையாகும். அந்தக் கீர்த்தனை புத்தகங்களைப் பரப்ப வேண்டிய கடமை தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறைக்கு இருக்கிறது என்பதை இந்த மேடையிலே நான் அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உடனடியாக நாளைக்கே அதைப்பற்றி விசாரித்து எத்தனை புத்தகங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. எத்தனை நூல்கள் வெளியிலே சென்று பரப்பப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் உணர்ந்து மேலும் பல படிகள் அவை எடுக்கப்படவும் ,இன்றைக்கு நாம் நடத்தி வருகின்ற இசைப்பள்ளிகளில் இசைக் கல்லூரிகளில் இந்தத் திருக்குறள் கீர்த்தனைகள் பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்யவும் தமிழ்க்குடிமகன் அவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.


ஏனென்றால் தேவாரம், திருவாசகம் இவைகள் எல்லாம் இன்றைக்கு இசை மேடைகளிலே பாடப்படும் போது திருக்குறள் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக இரண்டு மூன்று குறள்கள் என்ற அளவிலே தான் கீர்த்தனைகளாகப் பாடப்படுகின்றன. திருக்குறள் இசை நிகழ்ச்சி கீர்த்தனைகள் முழுவதும் பாடப்படும் என்று ஒரு விளம்பரம் செய்து அதை பல்லாயிரக் கணக்கான மக்கள் கேட்கின்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். அதை எனக்கு இன்றைக்கு இந்த மேடையிலே உணர்த்தியவர் செம்மங்குடியார் என்பதை எண்ணும்போது நான் புளகாங்கிதம் அடைகிறேன். பூரிப்பு கொள்கிறேன்.

இந்த இனிய விழாவிலே அவருடைய உரையைக் கேட்கிற வாய்ப்பு கிடைத்தமைக்காகவும் ராஜரத்தினா பட்டம் பெற்ற ஏ.கே.சி. நடராஜன் அவர்கள் நன்றியுரை கூறும்போது சொன்ன அந்த நன்றி மிக்க வாசகங்களைக் கேட்கின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காகவும், "இயற்செல்வம்" விருது பெற்ற அ.ச.ஞா. அவர்கள் இங்கே உரையாற்றி நம்மைப் பெருமைப்படுத்தியமைக்காகவும் அவர்கள் எல்லாம் இன்னும் நீண்ட காலம் வாழ வேண்டும். வாழ்ந்து தமிழை வாழ வைக்க வேண்டும் என்கிற விருப்பம் உடையவர்கள் நாம். இன்று வயது முதிர்ந்த நிலையிலேகூட ஒருவருடைய துணையோடுதான் மேடைக்கு வரவேண்டும் என்ற நிலையிலே கூட வந்து அவர்கள் இந்த விருதைப் பெற்றிருக்கிறார்கள் என்றால், விருது பெறுவதற்காக வரவில்லை. தமிழை வாழ வைப்பதற்காக தங்களுடைய தமிழ்தொண்டு எந்த நிலையிலும் தொடரும் என்பதை விளக்குவதற்காக முதிர்ந்தால், இளைத்தால், களைத்தால் அதற்காக தமிழை மறந்துவிடக் கூடாது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அவர்கள் இந்த நிலையிலும் இந்த மேடைக்கு வந்து நம்மைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். அதைப் போல மற்ற விருதுகளைப் பெற்ற சுதாரகுநாதன், வைஜயந்திமாலா, சிவபுரி பத்மநாபன், சுப்ரமணியம், நடராஜன், சோமு ஆகிய அனைவருக்கும் முத்தமிழ்ப் பேரவையின் சார்பாக நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**18–11–2000 அன்று நடைபெற்ற முத்தமிழ்ப் பேரவையின் வெள்ளி விழாவில் விருதுகளை வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...**

# மாரடைப்பு

மாரடைப்பு நோய், இன்றைய அறிவியல் யுகத்தில் வெகுவாக காணப்படும் நோய். புற்று போல இதுவும் ஒரு ஆட்கொல்லிநோய். ஆரம்ப கட்டத்திலேயே இந்த நோயைக் கண்டுபிடிப்பது சற்று கடினம். சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்த நோய் ஒரு புதிராக இருந்தது. இன்று மருத்துவ அறிவியலார்களின் இடைவிடாத முயற்சி களினால் இந்தப் புதிர் விடுபட்டுவிட்டது. இருதய மின்னலை வரைபடம் இந்த நோயின் ஆரம்ப கட்டத்திலேயே இதைப் பற்றித் தெரிவித்துவிடும்.




இந்த நோக்கு என்று சில அறிகுறிகள் உள்ளன. அந்த அறிகுறிகள் ஏதேனும் தென்பட்டால், இருதய மின்னலை வரை படத்தின் உதவியுடன் இதைப்பற்றி தீர்மானம் செய்வார்கள். அல்லது வேறு ஏதேனும் நோய்க்கென்று டாக்டரை அணுகும்போது அவர் தேர்வாய்வுகள் செய்து பார்க்கும் போது தற்செயலாக இதைக் கண்டுபிடிப்பது முண்டு.இருதய நோய் இருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் சிலருக்கு இருக்காது. பேசிக் கொண்டே இருப்பார்கள். திடீரென்று 'என்னவோ பண்ணுகிறது தண்ணீர் கொண்டுவா' என்பார்கள். தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கும் முன் உயிர் பிரிந்திருக்கும். எனவே இதற்கு மௌன நோய் என்றும் "மௌனக் கொல்லி" என்றும் பெயர்கள் உண்டு.

மாரடைப்பு என்றால் என்ன ? ஏன் ஏற்படுகிறது ? என்றெல்லாம் கேள்விகள் எழலாம். நாம் உழைக்க உயிர்வாழ உணவும் காற்றும் (ஆக்ஸிஜனும்) தேவை. அதேபோல் இடைவிடாமல் உழைக்கும் இருதயத்திற்கும் உணவும் காற்றும் (ஆக்ஸிஜனும்) அவசியம். அதைத் தருவது இரத்தம். இருதயத்திற்கு ஊட்டமளிக்கத் தேவையான இரத்தம் கிடைக்காத போது அதன் செயல்முறைகளில் கோளாறுகள் ஏற்படுகின்றன. அறவே கிடைக்காத போது இருதயம் தன் வேலையை நிறுத்தி விடுகிறது. விளைவு மரணம் . எந்தவித சிகிச்சையும் அளிக்குமுன் திடீரென்று மரணம் ஏற்பட்டால் அதற்குக் காரணம் பெரும்பாலும் மாரடைப்பு நோயாகத்தான் இருக்கும்.

உடலின் எல்லா பகுதிகளுக்கும் ஊட்டச் சத்துக் களையும் ஆக்ஸிஜனையும் ஏந்திச் செல்வது இரத்தம். இது உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் சென் றடைய வழி செய்யும் பம்பு. இருதயம். அதேசமயம் தனது தசைகளுக்கும் இவ்வாறு இரத்தத்தை அனுப்பிக் கொள்ளுகிறது. இருதயத் தசைகளுக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் நாளங்களுக்கு இருதய தமனிகள் என்று பெயர். இவைகளில் ஒன்றிலோ அல்லது அதற்கு மேற்பட்டதிலோ அடைப்பு ஏற்பட்டால் இருதயத்திற்குத் தேவையான ஆக்ஸிஜனூட்டம் கிடைக்காது. இந்த அடைப்பு சாதாரணமாக இருந்தால் மார்புவலி ஏற்படும். ஆஞ்சினா பெக்டாரிஸ் என்று சொல்வது இந்த வலியைத்தான். மாரடைப்பு நோயின் அறிகுறிகளில் ஒன்று, அடைப்பு தீவிரமாக இருந்தால் இருதயத் தசையின் எப்பகுதிக்கு இரத்த ஊட்டம் கிடைக்கவில்லையோ அப்பகுதியிலுள்ள தசைத் திசுக்கள் இறந்து விடுகின்றன. நாளடைவில் அத்தசையின் பெரும் பகுதி திசுக்கள் இறந்து விட இருதயத்தின் சுருங்கலியக்கம் நின்று விடுகிறது. மரணம் ஏற்படுகிறது.

மேலும் மகாதமனி அர்த்த சந்திர வால்வுகளுக்கு மேலே உடனடியாக இரு கிளைகளாகப் பிரிகிறது. இந்தக்

கிளைகளாக இருதய தமனிகள் எனப்படுவது. இவைகள் வலது இருதய தமனி என்றும் இடது இருதய தமனி என்றும் குறிக்கப்படும். இடது இருதய தமனி சற்றுப் பெரியது. இது மேலும் இரு கிளைகளாகப் பிரிகிறது. இருதயத்தின் முன் பக்கத்திற்கும் இடது பக்கத்திற்கும் இரத்த ஊட்டம் அளிப்பது இது. வலது இருதய தமனி இருதயத்தின் பின்புறத்திற்கும் பக்கங்களுக்கும் இரத்த ஊட்டம் அளிக்கிறது. இருதயத்தில் இரத்த நாளப்பின்னல் அமைவு குறைவு. எனவே இருதயத் தமனியில் அடைப்பு ஏற்பட்டால் விளைவு விபரீதமாகிவிடுகிறது.

இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. த்ராம்போஸிஸ் என்பது ஒன்று. நாளத்தில் குருதி உறைவு ஏற்பட்டு இரத்த ஓட்டத்தை தடைப்படுத்துவது. எம்போலிஸம் என்பது மற்றொன்று. – பாக்டீரியா, துணுக்குகள், த்ராம்போஸிஸ் துணுக்குகள் (உறைக்கட்டியின் துணுக்குகள்) ஒன்று திரண்டு கட்டியாகி சிறிய இரத்த நாளங்களின் பாதையை அடைத்து விடுவது.

இரத்த நாளங்களில் இரத்தம் உறைவதற்கு இரத்த ஓட்டத்தின் வேகம் குறைதல், இரத்தத் தமனியின் உட்சுவரில் ஏற்படும் கரடு முரடான தன்மை, இரத்தம் விரைவில் திரிந்து விடுவது முதலானவை காரணங்கள். இரத்தத் தட்டணுக்களில் புரோத்ராம்பின் எனும் ஒரு கொதி உள்ளது. இது அதிகமாக இருந்தால் இரத்தம் உறைகிறது இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கை அதிகமாகும் போது இரத்தம் கெட்டியாகிறது. இதனாலும் இரத்தம் உறைய வாய்ப்பு ஏற்படுகிறது. இரத்த நாளங்களில் இரத்தம் உறை கட்டியாகி இரத்த ஓட்டத்தைத் தடை செய்வதற்குத் த்ராம்போஸிஸ் என்று பெயர்.

எம்போலிஸமும் இதைப் போலத்தான். ஆனால் சிறிய வேறுபாடு உள்ளது. பாக்டீரியா துணுக்குகள் இரத்த உறைகட்டியின் சிதறுகள் ஒன்று திரண்டு கட்டியாகி இரத்த ஓட்டத்தினால் அடித்துச் செல்லப்பட்டு சிறிய இரத்தக்குழலின் பாதையில் படிந்து அடைத்து விடுவதற்கு இப்பெயர். இடம் மாறி கட்டிகள் தரும் இடர் இது.

ஏதெரோமாவினால் குறுகலான நாளங்கள், ஏதெரோஸ்டக்ளேரோஸிஸினால் குறுகிய நாளங்கள் வழியாக இரத்தம் செல்லும் போது அதன் வேகம் குறைகிறது. சில சமயங்களில் தற்காலிகமாக நின்றுவிடுகிறது. அம்மாதிரி சமயங்களில் இரத்தம் உறைந்து கட்டியாகிறது. இந்தக் கட்டிகள் அந்த இடத்திலேயே நாளச் சுவரைப் பற்றிக் கொண்டு இரத்தத்தை வழிமறிப்பதுண்டு. இரத்தவோட்டத்திலேயே உருண்டு சென்று சிறுநாளங்களின் நுழை வாயில்களை அடைத்து விடுவதுமுண்டு. இருதய தமனிகளில் இம்மாதிரி அடைப்பு ஏற்படுவது மாரடைப்பிற்கு வழி வகுக்கிறது.

**மாரடைப்பின் தீவிரத்தன்மை**

1. இரத்த ஊட்டம் இல்லாததினால் பாதிக்கப்பட்ட பகுதியின் அளவும் பரப்பும்,
2. தடைப்பட்ட வழியை விட்டு மாற்று வழிகளில் இரத்தம் செல்லுவது,
3. இருதயத்துடிப்பை ஒழுங்குபடுத்தும் நரம்புகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா இல்லையா என்பதனைக் கொண்டு கணிக்கப்படுகிறது.

இருதய சுவர்கள் மூன்று உறைகளைக் கொண்டது. மத்திய உறை மற்ற இரண்டு உறைகளைவிடச் சற்று பருமனானது. இந்த உறைக்கு மையோகார்டியம் என்று பெயர். இருதயத் தசை என்று சொல்லுவதும் இதைத்தான். சுருங்கலியக்கம் இத்தசையின் மூலம் பரவிச் செல்லுகிறது. இதற்கு இரத்த ஊட்டம் அளிக்கும் தமனியில் ஏதேனும் ஒரு சிறு அடைப்பு ஏற்பட்டால் இந்த தசையின் ஒரு பகுதிக்கு இரத்தம் செல்வது நின்றுவிடுகிறது. இரத்த ஊட்டம் இல்லாததால் அப்பகுதியிலுள்ள தசைத்திசுக்கள் இறந்துவிடுகின்றன. எனவே அப்பகுதி சுருங்கலியக்கத்தில் பங்கு கொள்ள முடியாமல் போய்விடுகிறது. இந்த நிலைக்கு மையோகார்டியல் இன்ஃபார்க்ஷன் என்று பெயர்.

உயிர்ப்பிழந்த இந்தப் பகுதி வெளிரிய மஞ்சள் நிறத்தில் இருக்கும். மெல்ல மிருதுவாகி தழும்பு போலாகி விடும் இப்பகுதி. இதற்குள் இந்த புதிய நிலைக்கு அதாவது இதயதசையில் ஒரு சிறு பகுதி செயலற்றுப் போன நிலைக்கு இருதயம் பழக்கப்பட்டு விடுகிறது. நிலைமையையும் சமாளிக்கத் தயாராகி விடுகிறது. ஒரு சிறு பகுதியில் பாதிப்பு ஏற்பட்டால் அதனால் சுருங்கலியக்கத்தில் மாறுதல் எதுவும் ஏற்படுவதில்லை. ஆனால் இதே மாதிரி இருதயத் தசையின் மற்ற பகுதிகளிலும் திட்டு திட்டாக தழும்புகள் தோன்ற ஆரம்பித்தால் சுருங்கலியக்கம் பாதிக்கப்படுகிறது. எனினும் இருதயம் வேலை செய்து கொண்டு தானிருக்கும். இதற்கான அறிகுறிகள் தோன்றியதும், நல்ல ஓய்வு எடுத்துக் கொள்வது அவசியம் இல்லாவிடில் இருதயத்தின் வேலைச் சுமை மேலும் அதிகரிக்கும்.

கட்டுக் குலையாத உடல் வளம் கொண்ட சிலருக்கு மாரடைப்பு திடீரென்று ஏற்படுவதுண்டு. உண்மையில் ஒரே நாளில் திடீரென்று ஏற்படும் நோயல்ல இது. ஏற்கெனவே இருதயம் பல காரணங்களினால் பாதிக்கப்பட்டிருக்கலாம். அந்த பாதிப்பின் அறிகுறிகள் எதுவும் வெளிப்படையாகத் தெரியவந்திருக்காது. இரத்தமிகை அழுத்தம், நெஞ்சு வலி, நரம்புகோளாறு ஆகிய நோய்களுடன் ஏதொராஸ்க்ளோரோஸிலும் உண்டாகும்போது, இருதயச் தசையில் பாதிப்பு ஏற்படுகிறது.

மாரடைப்பு ஏற்பட பல்வேறு இடர்வரு காரணிகளும், சூழ்நிலைகளும் இருந்தாலும் அடிப்படை குறைபாடு இருதய தமனிகளில் இரத்த ஓட்டம் தடைப்படுவது தான். ஏதேரோஸ்க்ளோரோஸிஸ் எனும் தமனி நாளச் சுருக்க நோய் தான் இத்தமனிகளில் இரத்த ஓட்டத்தை தடைப்படுத்தும் குற்றவாளி. தமனி நாளச்சுவரில் கொலெஸ்ட்ராலும், கால்ஷியமும் இரத்த உறைகட்டிகளும் படிந்து குறுக்களவைக் குறைக்கிறது. இவ்வாறு சுருங்கி வருவதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியாது. எக்ஸ்ரே

எடுத்துப் பார்த்தாலும் சரி, மின்னலை வரைபடம் எடுத்தாலும் சரி, இக்கோளாறுகள் தெரியாது. காரணம் இருதயத் தசைக்குப் போதுமான இரத்த ஊட்டம் குறுகிய நாளத்தின் வழியாகத் தொடர்ந்து சென்று கொண்டிருப்பது தான். 70 சதவீதம் குறுகலாகும் வரை எவ்வித அறிகுறிகளும் தெரியாது. அதன்பின் அறிகுறிகளும் தெரியவரும். இருதய மின்னலை வரைபடமும் கோளாறுகளைக் கோடிட்டுக் காட்டும்.

20–25 வயதிலிருந்து நாளச்சுவரில் தேவையற்ற பொருள் படிய ஆரம்பிக்கும். எனினும் இது சிறிது நாட்களில் சரியாகிவிடும். ஆனால் தேவைக்கு அதிகமான கொலெஸ்டெரால் தொடர்ந்து சேர்ந்து கொண்டிருந்தால் தமனி நாளச் சுவர்களில் படிந்து அதன் பாதை குறுகலாக ஆரம்பிக்கும். இருபது முப்பது வருடங்களில் நாளச்சுவர்கள் பருமனாகி 70 சதவீதம் குறுகலாகிவிடும். 70 முதல் 90 சதவீதம் குறுகலடைய அல்லது தடைப்பட சில நிமிடங்கள் அல்லது சில மணி நேரங்கள் தான் ஆகும். மாரடைப்பிற்கு வழி வகுத்துவிடும்.

மாரடைப்பு ஏற்பட இதைத்தவிரவேறு பல காரணிகளும் உள்ளன. அவைகள் பின்வருவன:

1. மிகை இரத்த அழுத்தம் மாரடைப்பிற்கு வழிகாட்டும்.
2. புகை பிடிப்பவர்களின் உடன் பிறவா சகோதரன்
3. பரம்பரை நோயாக சந்ததிகளைப் பற்றுவதுமுண்டு.
4. உழைப்பை மறந்து உண்டு படுத்திருக்கும் உடலுடன் உறவாடித்துடிக்கும் இந்த நோய்.
5. இரத்தத்தில் கொழுப்புப் பொருள்கள், குறிப்பாக கொலெஸ்டேரால் அளவு அதிகமாக இருப்பதால் மாரடைப்பு நோய் உறவு முறை கொண்டாட ஆரம்பித்து விடும்.
6. எதற்கெடுத்தாலும் எளிதில் உணர்ச்சி வயப்படும் நிலை, தொடர்ந்து மனவெழுச்சியின் தாங்கறுதி (Stress) தரிப்பறுதி (Strain) எட்டியநிலை முதலியன மாரடைப்பிற்கு கட்டியங்கூறுபவை.
7. மிதமிஞ்சிய உணவு, இதற்கு நண்பன் தான்
8. நீரிழிவு நோயுடனும் இது கை கோர்த்துக் கொள்ளும்.
9. போதுமான உடற்பயிற்சி இல்லா விட்டாலும் இந்நோய் ஏற்படும்.


பொதுவாக இக்காரணிகளில் பல ஒன்று சேர்ந்து மாரடைப்பை உசுப்பி விடும்.

பொதுவாக மாரடைப்பு நோய் வசதி உள்ளவர்களுக்கு தான் ஏற்படும் என்ற தவறான கருத்தும் நிலவுகிறது. இந்த நோய் யாருக்கு ஏற்படும். வசதி உடையவர், வசதி இல்லாதவர்கள் என்ற வேறுபாடு இந்த நோய்க்குக் கிடையாது. 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் ஏற்படுவதற்குரிய வாய்ப்புக்கள் அதிகம் என்றாலும் அதற்கு குறைந்த வயதினருக்கும் ஏற்படுவதுண்டு. பெண்களைவிட ஆண்களுக்குத்தான் இந்த நோய் அதிகம் தோன்றுகிறது. பெண்கள் உடலில் சுரக்கும் ஈஸ்ட்ரோஜன் எனும் ஒரு ஹார்மோன் இந்நோய் அவர்களைப் பற்றாமலிருப்பதற்குக் காரணம் என்று கருதுகிறார்கள். எனினும் மாதவிடாய் நின்று விட்ட பெண்களுக்கு இந்நோய் வரலாம்.

எந்தவித இடர்வருகாரணிகளும் இல்லாத 40 வயதுடையவர்களுக்கு மாரடைப்பும் மற்ற இருதய நோய்களும் ஏற்படும் சாத்தியக்கூறுகள் குறைவு 0.01 சதவீதம் எனலாம். இந்த நிலையில் 50 வயதுடையவர்களுக்கு இது ஏற்படும் வாய்ப்புகள் 0.05 சதவீதமாக உயர்கிறது. 65 வயதுடையவர்களுக்கு 0.1 சதவீதமாகிறது. இடர்வருகாரணிகளில் முக்கியமான மும்மூர்த்திகள்,

1. மிகை இரத்த அழுத்தம்
2. இரத்தத்தில் அதிக கொலலெஸ்டெரால் அளவு.
3. புகை பிடித்தல், என்பன.

40 வயதானவர்களிடம் இம்மூன்று 'காரணிகளும் இருந்தால் முதலில் கவனிக்கப்பட வேண்டிய காரணி கொலெஸ்டெரால் அளவுதான். இந்த வயதில் 'கொல்லும்



காரணி' யாகச் செயல்படுவது இதுதான். இரத்தத்தில் கொலெஸ்டெரால் அளவைக் கட்டுப்படுத்துவது இந்த வயதினர் செய்ய வேண்டிய முதல் வேலை. 50 முதல் 60 வயதினரிடையே செயல் ஆதிக்கம் செலுத்துவது மிகை இரத்த அழுத்தம் இந்த வயதினர் கவனிக்க வேண்டிய காரணி இது. எப்படியிருந்தாலும் . இந்த மும்மூர்த்திகைளயும் வழி அனுப்பிவிட்டால் மாரடைப்பு மற்ற இருதய நோய்கள் ஏற்படாமல் தடுக்கலாம். இரத்தத்தில் கொலெஸ்டெரால் அளவைக் குறைப்பது, மிகை இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவது, "புகையே நீ போ" என்று பிகை பிடித்தலை வழி கூட்டி அனுப்புவது ஆகிய மூன்றும் மாரடைப்பு மற்றும் பல இருதய நோய்களுக்கு எதிராக நாம் போடும் மூன்று தாழ்ப்பாள்கள் எனலாம்.

### அறிகுறிகள்

ஆண்களிடமே அதிக அளவில் காணப்படும் இந்த நோய்க்குக் காரணம் அவர்களின் பழக்க வழக்கங்கள், வேலையின் தன்மை முதலியன எனலாம். மாரடைப்பு நோய்க்கான அறிகுறிகள் பல உள்ளன. கடும் மார்புவலி அத்தகைய அறிகுறிகளில் ஒன்று. சாதாரணமாக நாம் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போதே இந்த வலி தோன்றுகிறது. "அழுகிற பிள்ளைக்குப் பால் கிடைக்கும்" என்ற பழமொழி இருதயத்திற்குத் தெரியுமோ தெரியாதோ ஆனால் அது அதிக இரத்த ஊட்டம் கேட்டும் எழுப்பும் அழுகுரல் தான் மார்பு வலி. மற்ற வேறு பல காரணங்களினாலும் மார்பு வலி ஏற்படும். ஆனால், மாரடைப்பின் அறிகுறியாகத் தோன்றும் மார்புவலி பெரும்பாலும் இருதயத்திலோ இருதயப் பகுதியிலோ தோன்றுவதில்லை. இந்த வலி ஸ்டெர்ணம் எனப்படும் மார்பின் நடு எலும்பின் பின்பகுதியில் தோன்றுகிறது. சிலருக்குக் குறிப்பாக வயதானவர்களுக்கு நீரிழிவு நோயினால் இருதய நரம்பூட்டம் பாதிக்கப்பட்டவர் களுக்கும் இந்த வலிதெரியாது. அப்படியே இருந்தாலும் லேசான வலியாகத்தான் இருக்கும். சிலருக்கு ஒரு வித எரிச்சல் உணர்வுதான் இருக்கும்

இந்தவலி கடுமையாக இருக்கும். எனினும் இதைப்பற்றி இந்த வலி உள்ளவர்களால் விவரித்தும் சொல்லமுடியாது. சிலர் மார்பை ஏதோ கனமான பொருள் அழுத்துவது போல் இருக்கிறது என்பார்கள். வேறுசிலர் கசக்கி நசுக்குவது போலிருக்கிறது என்பார்கள். மார்பைக் குத்துவது போலவும், குடைவது போலவும், எரிவது போலவும், விரிவது போலவும் இருப்பதாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விவரிப்பார்கள்.


மெல்ல இந்த வலி மார்பின் மற்ற பகுதிகளுக்குப் பரவும். பிறகு, கழுத்து, தாடை, தோள்பட்டைகள், இடது கை பின்பக்கம் ஆகிய பகுதிகளுக்குப் பரவுகிறது. தண்டுவடத்தில் இருதயத்திற்கு நரம்பூட்டம் அளிக்கும் நரம்புகள் கிளம்பும் அதே கூறிலிருந்து, இந்தப் பகுதிகளுக்கு நரம்பூட்டம் அளிக்கும் நரம்புகளும் கிளம்புவதால் இந்நிலை ஏற்படுகிறது. இதை சுட்டுவலி என்பார்கள். மார்பு வலி வைத்திய உதவியினாலேயோ இல்லாமல், சில மணி நேரங்களிலோ சில நாட்களிலோ குறைந்துவிடும். அனால் இது ஒரு மனக் கலக்கத்தையும், பயத்தையும் உண்டாக்கிவிடும். இது ஏற்படும் போது வியர்வை அளவிற்கு அதிகமாக ஏற்படும். உடல் வெளிறிப்போகும். வாந்தியும் ஏற்படலாம்.

எல்லாவித மார்புவலியையும் மாரடைப்பின் முன்னோடி என்றோ அறிகுறி என்றோ முடிவெடுக்கக் கூடாது. "இரத்தம் ஊட்டம் தா" என்று கேட்பதற்கு எழுந்த அழுகையொலி மட்டுமல்ல இந்த நெஞ்சுவலி, "இருதயத்தைப் பாதிக்கும் செயல்களை உடனே நிறுத்தி விடுங்கள்" என்று கேட்கும் கெஞ்சல் ஒலி, "டாக்டரிடம் காண்பித்து (இருதயத்தை) வலுப்படுத்தும் முயற்சியில் இன்றே இறங்குங்கள்" என்று கேட்கும் கட்டளைக் குரலும் கூட..

அடுத்து இருதய அதிர்ச்சி, மாரடைப்பின் அறிகுறி. முகம் வெளுத்துப் போதல், கை கால்கள் சில்லிட்டும் போதல், குறைவான இரத்த அழுத்தம், மெல்லிய வழுவிழந்த நாடித் துடிப்பு, குறைவான உடல்வெப்பம் முதலியன இருதய அதிர்ச்சியைச் சுட்டிக் காட்டும் அடையாளங்கள். மார்பு வலி அதிகமாக இருப்பதாலும் இருதய தசைக்கு இரத்த ஊட்டம் குறைந்து விடுவதாலும் அதிர்ச்சி ஏற்படுகிறது. வியர்வை அதிகமாகப் பெருகி வழிதோடும். இந்த நிலை அதிக நேரம் நீடித்தால் நோயாளி பிழைப்பது கடினம். உடனடியாகக் கவனித்துத் தகுந்த தீவிர சிகிச்சை அளித்தால் நோயாளி பிழைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. சிறுநீர் போகாததும் நுரையீரல் நீர்க் கோவையும் இருதய அதிர்ச்சியை மேலும் தூண்டிவிடும்.

நுரையீரல் செல்களில் அளவிற்கதிகமாக நீர் சேர்ந்து கொள்ளுவதே நுரையீரல் நீர்க்கோவை என்பது. மூச்சிரைப்பு நுரையீரலில் நீர்க்கோவை ஏற்பட்டுள்ளதை அறிவிக்கும் அறிகுறி. இடது வெண்ரிக்கிளின் விரிந்து சுருங்கும் தன்மையில் ஏற்படும் பாதிப்பு மிட்ரல் வால்வு குறுக்கம் முதலியன நுரையீரல் நீர்க்கோவை ஏற்படக் காரணமாகின்றன. இந்த நீர்க்கோவை இருதய அதிர்ச்சியை மேலும் தூண்டிவிடும். இருதயச் செயலிழப்பும் மாரடைப்பின் அறிகுறி மாரடைப்பிற்கும் இருதயச் செயலிழப்பிற்கும் வேறுபாடு உள்ளது. இருதயத் தமனிகளில் இரத்த ஒட்டம் தடைப்பட்டு இருதய தசையின் பகுதி ஊட்டம் இல்லாமல் வரண்டு உலர்ந்து போவது, அதன் விளைவாக இருதயப் பணி தடைப்படுவது மாரடைப்பு. அதிக வேலைப்பளு காரணமாகவோ, போதிய வலுவின்மை காரணமாகவோ இருதயம் தனது பணியைச் சரிவரச் செய்ய இயலாமல் போவது இருதயச் செயலிழப்பு அதாவது இருதயம் இரத்தத்தைப் பீச்சி அடிக்கும் தனது பணியை முழுதிறனுடன் செய்ய இயலாத நிலை, மூச்சுவிடுவதில் சிரமம், நுனி நீலம்பாய்தல், சரும நிறம் நீலமாதல் கணுக்காலில் வீக்கம், சிறுநீர் போகும் அளவு குறைதல் முதலியன இருதயச் செயலிழப்பின் அறிகுறிகள்.

நாடித்துடிப்பின் வேகம் அதிகரிக்கலாம். இதனால் இருதயம் துரிதமாக சுருங்கி விரிவதால் அதற்குப் போதுமான ஒய்வு கிடைப்பதில்லை. சில சமயம் மெதுவாகவும் நடைபெறும். சில சமயங்களில் முறைகெட்டுத் துடிக்க ஆரம்பிக்கும். அதாவது துடிப்பின்




லயநயத்தில் மாறுபாடுகள் ஏற்படும். திடீரென்று ஏற்படும் மயக்கமும் அளவிற்கதிகமான வியர்வையும் மாரடைப்பின் அறிகுறிகள்தான்.

மாரடைப்பின் பலவகையான அறிகுறிகள் பொதுவாக நோயாளிகளையும், அவர்களது உறவினர்களையும் ஒரு விதக் குழப்பத்தில் ஆழ்த்திவிடும். அவர்களுக்கு எதனால் ஏற்படுகிறது என்றும் தெரியாது. என்ன செய்வதென்றும் புரியாது. சிலர் உடனே சோடா குடிப்பார்கள். சிலர் வெளிக்குப் போனால் சரியாகப் போய்விடும் என்று முக்கி முனகி வெளிக்குப் போக முயற்சி செய்வார்கள். வேறுசிலர் உடனே தேகப்பயிற்சி செய்ய ஆரம்பித்து விடுவார்கள். மற்றும் சிலர் மேலும் கீழுமாக நடைபயில்வார்கள். இந்தச் செயல்கள் இருதயத்தின் வேலைப்பளுவை மேலும் அதிகரிக்கும். மேலும் பல சிக்கல்களை உருவாக்கும்.

இம்மாதிரி அறிகுறிகள் தோன்றினால் உடனே டாக்டரை வரவழைத்துக் காண்பிப்பதுதான் சிறந்த வழி மட்டுமல்ல, ஒரே வழியும் கூட. மாரடைப்பினால் ஏற்படும் பல ஆரம்பச் சிக்கல்களை குறைக்கவும் முடியும். உயிருக்கு ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்கவும் முடியும்.

**அறிமுறைகள் - நோய் நிர்ணயம்**

தற்போது மாரடைப்பிற்கான சிகிச்சை முறைகள் முன்காணிப்பு ஆகியவற்றில் வெகுவாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளன. மாரடைப்பு நோய் உள்ளவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளித்து மீண்டும் ஓரளவு பழைய நிலைக்குக் கொண்டு வருவதில் வெற்றியும் கண்டு வருகிறது, இன்றைய இருதய மருத்துவவியல் துறை.

மாரடைப்பு நோயில் முன்கணிப்பு செய்வது எளிதான காரியமல்ல. அறிகுறிகளும், அறிமுறைகளும் இப்பணியை எளிதாக்குகிறது. அறிகுறிகள் என்பது இத்தாக்குதலின் போது ஏற்பட்ட அனுபவங்களை, கஷ்டங்களை நோயாளிகள் கூறுவது. நோயின் வரலாறு, நோயாளியின் குடும்ப வரலாறு ஆகியவற்றை நோயாளியிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது, நோயாளியை நேரிடையாகப் பரிசோதித்துப் பாா்ப்பது, பல கருவிகளின் துணையுடன் ஆய்வு செய்வது ஆய்வுக்கூட தேர்வாய்வு செய்வது முதலியன நோயின் தன்மையை முறையாக அறிந்து கொள்ளக்கடைபிடிக்கும் அறிமுறைகள்.

நோயாளியைக் கூர்ந்து நோக்கியும், நாடி பிடித்துப் பார்த்தும் உடலின் மார்பு, வயிற்றுப் பகுதியைத் தொட்டுப் பார்த்தும் தட்டிப் பார்த்தும் நோயின் தன்மைகளை டாக்டர்கள் ஓரளவு நிர்ணயம் செய்வார்கள். நாடித்துடிப்பு சாதாரணமாக ஒரு நிமிடத்திற்கு 72 வரை இருக்கும். இந்த நிலையில் நாடியின் எண்ணிக்கை 100 முதல் 120 வரை சில நேர்வுகளில் இருக்கும். வேறு சில நேர்வுகளில் நாடித்துடிப்பு மிகவும் குறைந்தும் விடலாம். நிமிடத்திற்கு 40 ஆக இருக்கலாம். துடிப்புகளும் ஒரே சீராக இல்லாமல் தாறுமாறாக இருப்பதுமுண்டு.

ஸ்டெதஸ்கோப்பின் மூலம் பரிசோதனை செய்யும்போது இருதய துடிப்பின் ஒலி குறைந்திருக்கும். மிகைத்துடிப்புகளும், வழக்கத்திற்கு மாறான ஒலிகளும் கேட்கும். இருதயம் உராய்வதினால் ஏற்படும் உராய்வொலியும் கேட்கும்.

ஸ்பிக்மோ மானோமீட்டர் எனும் இரத்த அழுத்தமானியின் உதவியுடன் இரத்த அழுத்தத்தை சோதிப்பார்கள். இருதய அதிர்ச்சி இருந்தால் அழுத்தம் குறைவாகக் காண்பிக்கும். தெர்மா மீட்டரின் உதவியுடன் உடல் வெப்பமும் கண்டறியப்படும். இருதய மின்னலை வரை படம் மூலம் இருதயப் பணியை கண்காணிப்பார்கள். மார்புவலி இல்லாதபோது இந்த வரைபடத்தில் எவ்வித மாறுதலும் இருக்காது. இருதய மின்னலை வரைபடம் மூலம் மாரடைப்பு நோய்ப் பற்றி முன்கணிப்பு செய்வது கடினம். மார்புவலி என்று சிகிச்சை எடுத்துக்கொண்ட பின்னரும் சிலருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. மாரடைப்பின் போது இருதய மின்னலை வரைபடம் எடுக்கும் போதுதான் இரத்த ஓட்டத்தில் ஏற்பட்டுள்ள தடை மாறுதல்கள் அல்லது இரத்த ஓட்டத்தடை தெரியும்.

இரத்த ஊட்டம் எப்பகுதிக்கு கிடைக்கவில்லையோ இருதயத் தசையின் அப்பகுதியிலுள்ள திசுக்கள் இறந்துபோய் தழும்பு போலாகி விடுகிறது. சினோ ஏட்ரியல் கணு உருவாக்கும் மின்னலைகள் இருதயத் தசையில் பரவி சுருங்கலியக்கத்தைத் தூண்டுகின்றன என்பது

தெரியும். இந்த மின்னலைகள் தழும்பு போலுள்ள உயிரற்ற பகுதியில் பரவிச் செல்லாது. அப்பகுதிக்கு வரும்போது மின்னலைகள் தாறுமாறாகச் செல்லும். இந்தத் தாறமாறான போக்கை மின்னலை வரைபடம் தெளிவாகக் காட்டிவிடும்.

ஆய்வகச் சோதனை செய்து பார்த்தும் நோயை நிர்ணயம் செய்வார்கள். ஆய்வகச் சோதனை என்பது இரத்தப் பரிசோதனை செய்து. மாரடைப்பு நோயுள்ளவர்களுக்குப் பல்தோற்ற துகளுடைய வெள்ளணுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். பல்தோற்ற துகளுடை வெள்ளணுக்கள் என்பது வெள்ளணுக்களில் ஒரு வகை. உடலிலுள்ள வெள்ளணுக்களில் 70 சதவீதம் இது உள்ளது.

சிவப்பணு படியும் விகித சோதனையும் இந்த ஆய்வில் ஒன்று. இரத்தத்தில் பிளாஸ்மா எனும் மஞ்சள், நிற புரத நீர்மம் உள்ளது. இரத்த அணுக்கள் எல்லாம் இதில்தான் படிந்துள்ளன. சிவப்பணுக்களின் அடர்த்தி எண் பிளாஸ்மாவைவிட அதிகம். இரத்தத்தை ஒரு குடுவையில் சேமித்து வைத்தால், அதிக அடர்த்தி கொண்ட சிவப்பணுக்கள் குடுவையின் அடியில் படிகின்றன. சாதாரண நிலையில் இது ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் தான் படியும். மாரடைப்பு நோயில் இந்த விகிதம் அதிகமாக இருக்கும்.

இரத்தத்தில் ஸீரம் எனும் வெளிறிய மஞ்சள் நிற நீர்மம் உள்ளது. இதில் சில நொதிகள் கலந்திருக்கும். இந்த நொதிகள் சாதாரண அளவைவிட அதிகமாயிருக்கும். இருதயத் தசைகளிலுள்ள நொதிகள் வேதியியல் வினைச் செயல்களில் வினையூக்கிகளாகச் செயல்படுகின்றன. உயிரற்ற தசைத் திசுக்கள் வெளியிடும் நொதிகள் இரத்தவோட்டத்தில் கலக்கின்றன. இரத்த ஸீரத்தில் நொதிகளின் அளவையும் அதிகரிக்கின்றன.

தவிர நோய்கணிப்பிற்கு வேறுபல உத்திகளையும் கடைபிடிக்கிறார்கள். அவைகள், உட்புகா, ஆய்வு உத்திகள்(Non Invasive Techniques) உட்புகு ஆய்வு உத்திகள் (Invasive) என்பன. உட்புகா ஆய்வு உத்திகளின் மூலம் எத்தகைய நோயாளிகளுக்கும் உட்புகு ஆய்வு உத்திகள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே நிர்ணயிக்கிறார்கள். உட்புகா உத்தி என்பது உடலின் வெளியிலிருந்து உட்புற நிலைகளை வரைபட திரைப்பட ஊடு கதிர் ஒளிப்பட முறைகளில் கண்காணித்து ஆய்வறுதி செய்தல்.

பரவலாக கடைப்பிடிக்கும் உட்புகா ஆய்வு முறைகள்:

1. உடற்பயிற்சி செய்கையில் தேர்வு நோட்டமிடுதல்.
2. கதிரியக்க ஐஸோடோப்புகள் மூலம் உருவச்சாயல்.
3. இரு பரிமாண இருதய எதிரொலி வரைபடம்
4. 24 மணி நேரத் தொடர் – இருதய மின்னலை வரைபட பதிவு (ஹோல்ட்டர்–மானிட்டரிங்) முதலியன.

நோயாளியை சில எளிய உடற்பயிற்சிகள் செய்யச் சொல்லிவிட்டு இருதய மின்னலை வரைபடம் (ஈ.சி.ஜி.) மூலம் இருதய பணித்திறனைக் கணிப்பது உடற்பயிற்சியின் போது தேர்வு நோட்டமிடும் முறை பயிற்சியின் போது ஈ.சி.ஜி.கோடிட்டுக் காண்பிக்கும் 12 முனைப்புகளையும் ஒரே சமயத்தில் பதிவு செய்து பகுப்பாய்வு செய்ய தற்போது கம்யூட்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. உள்ளுறை இருதய தமனி நோய், அதன் வளர்ச்சி நிலை, மருந்து மூலம் குணப்படுத்த இயலுமா அல்லது அறுவை சிகிச்சையால் தான் குணப்படுத்த முடியுமா என்பது. இருதய நோயாளியின் புனர்வாழ்வு நிகழ்ச்சி முறையைக் கண்காணிப்பது முதலியவற்றை கணிக்க இந்தத் தாங்கறுதி ஆய்வு செய்யப்படுகிறது. எனினும் இம்முறையில் இருதய நோய்களில் சில வகைகளைத்தான் கணிக்க முடியும்.

செயற்பயிற்சியின் போது ஏற்பட்ட இரத்த ஒட்ட தடைமாறுதல் இருதயத் தமனி நோயின் தன்மையை விளக்கும். தாங்கறுதி ஆய்வில் உறுதி செய்யப்பட்ட தடைமாறுதல் நிகழ்வுகள் இருதயத் தமனி நோயின் தீவிரத்தைக் காட்டும்.

கதிரியக்க ஐஸோடோப்புகள் மூலம் உருவச் சாயல் பெற்று ஆய்வு செய்யும் முறை சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதியமுறை. இம்முறையின் மூலம்,

1. இடது வெண்ரிக்கிளின் செயல்தன்மை,
2. தசையின் பரவவிடு தன்மை – ஆகிய இரு தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இடது வெண்ரிக்கிளின் பணித்திறனை மூகா (Muga) அலகீட்டின் மூலம் கணிப்பதுண்டு. மல்ட்டிப்பிள் அப்டேக் கேட்டட் அக்யூசிஷன் ஸ்கான் (Multiple Uptake Gated Acquisition Scan) என்பதின் சுருக்கமே மூகா அலகீடு. டெக்னிஷியம் என்பது ஒரு தனிமம். இதனுடைய கதிரியக்க ஐஸோடோப்பின் மூலம் இரத்தச் சிவப்பணுக்கள் குறியிடப்படும். இவ்வாறு குறியிடப்பட்ட சிவப்பணுக்களுடன் இரத்த ஓட்டம் நடைபெறுவதை காமா ஒளிப்படக் கருவி (Gama Camera) மூலம் படமெடுத்து பகுப்பாய்வு செய்து பார்ப்பார்கள். எளிய உடற்பயிற்சி செய்யும்போது எடுக்கப்படும் படத்தில் நல்ல நிலையிலுள்ள இடது வெண்ரிக்கிள் வெளியேற்றும் இரத்த வீதம் அதிகமாக இருக்கும், இடது வெண்ரிக்கிளில் பாதிப்பு இருந்தால் அதாவது இரத்த வோட்ட தடை மாறுதல் இருந்தால் வெளியேற்றும் வீதம் குறைவாக இருக்கும்.

தசைகளின் தன்மைபற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள கதிரியக்க தால்லியம் ஐஸோடோப்பு அலகீடு முறை பயன்படுத்தப்படுகிறது. தால்லியம் இருதயத் தசையில் (மையோ கார்டியம்) நன்கு பரவக் கூடிய பகுதியில் விரைவில் பரவிவிடும். நோயாளியை உடற் பயிற்சி செய்யச் சொல்லிவிட்டு உச்ச கட்டத்தில் ஊசி மூலம் தால்லியத்தை உடலில் செலுத்துவார்கள். இடது வெண்ரிக்கிள் தசைப்பகுதியில். இப்பயிற்சியின் போது ஏதாவது ஒரு பகுதியில் இரத்தம் செல்லுவதில் தடை ஏற்பட்டால் அப்பகுதியில் தால்லியம் பரவிச் செல்லாது.

அலகீட்டில் அப்பகுதி தண்புள்ளியாகத் தெரியும். இரத்த ஓட்டத் தடை ஏற்பட்ட இடது வெண்ரிக்கிளின் தசைப் பகுதியின் பரவவிடு தன்மை ஒய்வு நிலையில் சீர்பெறுகிறது. அப்போது தால்லியம் இப்பகுதியில் (தணபுள்ளி) நுழைந்து பரவுகிறது. பாஸிட்ரான் உமிழ் ஊடுகதிர் உள்தள அலகீட்டுக் கருவி (Positron Emission Tomographic) மூலமும் இதைத் தெரிந்து கொள்வதுண்டு. நம் நாட்டில் பெருவாரியாகக் கையாளப்படுவது உடல் பயிற்சியின் போது மூகா அலகீட்டின் உதவியுடன் கண்காணிக்கும் முறைதான்.

இருபரிமாண இருதய எதிரொலி வரைபடம், இருதயத்தில் ஏற்பட்டுள்ள பலவகை நோய்களை விளக்கமாகக் காட்ட உதவும் ஒரு கருவி. இடது வெண்ரிக்கிளின் செயல்திறனை அறிந்து கொள்ளவும், இதைப் பயன்படுத்துவதுண்டு. இருதய தசையின் சுருங்கலியக்கம், சுணக்கம் ஏற்பட்டுள்ள பகுதிகள் முதலியன இதில் தெளிவாகத் தெரியும். இருதயத் தமனிகளில் இரத்த உறைவு ஏற்பட்டுள்ள பகுதி இருதய வால்வுகளின் நிலை, இடது வலது இருதய தமனி நாளங்களின் நிலை ஆகியவற்றை இதன் மூலம் கண்டறியலாம்.

ஹோல்ட்டர் மானிட்டரிங் இருதய டெலிமெட்ரி போன்ற உத்திகளும் இருதய நோய்களை நிர்ணயம் செய்ய கடைபிடிப்பதுண்டு. நெஞ்சுவலி, சீர்கெட்ட இருதயத் துடிப்பு, மூச்சிறைப்பு முதலான நோய்களைக் கணிக்க இந்த உத்திகள் பெருமளவு பயன்படுகிறது. மாரடைப்பு நோயாளிகளிடம் சிகிச்சைக்குப் பின் ஏற்படும் அபிவிருத்திகளைத் தொடர்ந்து கண் காணிக்க இம்முறை பரவலாகப் பயன்படுத்தப் படுகிறது.


நோயின் தன்மை, சோதிக்கும் போதுள்ள நிலை, சிகிச்சை செய்யும்போது ஏற்படும் அபிவிருத்தி, எந்த அளவு முன்னிருந்த நிலை திரும்பும் என்றெல்லாம் கணிக்க, கண்காணிக்க மேற்கூறிய தேர்வாய்வு முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

உட்பகுதி ஆய்வு உத்திகளில் மிக முக்கியமாக பயன்படுத்தப்படும் முறை இருதய தமனி வரைபட முறை. எக்ஸ் கதிர்கள் ஊடுருவா தன்மையுடைய பாய்மத்தை ஊசி மூலம் இருதய அறைகளில் செலுத்திவிட்டு எக்ஸ்ரே கருவிமூலம் படம் எடுத்துப் பார்ப்பது இந்த முறை. அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலையிலுள்ளதா மருந்தின் மூலமே குணப்படுத்திவிட முடியுமா பின்னால் இதன் நிலை எப்படியிருக்கும் என்றெல்லாம் நிர்ணயம் செய்யவும் முன்கணிப்புச் செய்யவும் இருதய தமனி வரை படம் பெரிதும் உதவுகிறது.

இருதயமே ஒரு புதிர்! இருதய நோய்கள் அதைவிடப் பெரும்புதிர்! மாரடைப்பு புதிர் மட்டுமல்ல – ஒருவகை உள்பயத்தையும் உண்டாக்கும் நோய் என்ற நிலை பல ஆண்டுகளுக்கு முன் வரை இருந்து வந்தது. இன்று இருதய இயல் வல்லுநர்கள் கடைப்பிடிக்கும் உத்திகள், நோய் நிர்ணய முறைகள் முன்கணிப்பு, இருதயத்தை வளமுடன் வைத்திருக்க அவர்கள் கூறும் வழிமுறைகள் இந்நிலையை வெகுவாக மாற்றி வருகிறது.

**சிகிச்சை**

அறிகுறிகள், அறிமுறைகள் மூலமாக நோயைப்பற்றி நிர்ணயம் செய்துவிட்டு உடனடியாக சிகிச்சை முறைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிடுவார்கள். இருதய இயல் வல்லுநர்கள். தீவிர சிகிச்சைப் பிரிவில் (Intensive Care Unit) மாரடைப்பு நோயாளிகளை தங்க வைத்து மருத்துவம் செய்ய ஆரம்பிப்பார்கள். சிகிச்சையின் பலனைத் தொடர்ந்து கண்காணித்தும் வருவார்கள்.



இருதய இயல் சிகிச்சைப் பிரிவில் எந்தவித அவசரத் தேவைக்கும் உதவும் கருவிகள் உள்ளன. செயற்கை இருதயத் துடிப்பு நிர்மாணி (Artificial Pacemaker) இருதய செயல் கண்காணிப்புக்கருவி, அலகீட்டுக் கருவிகள், முக்கியமான மருந்து வகைகள், ஆக்ஸிஜன் சிலிண்டர் முதலானவை உடனடி சிகிச்சை அளிக்கும் வகையில் தயாராக இருக்கும்.

சிகிச்சையில் மிக மிக முக்கியமானது, நோயாளிக்குப் போதிய ஓய்வு கொடுப்பதுதான். முழு உடல் ஓய்வு இருதயத்தின் வேலைப் பளுவை வெகுவாகக் குறைக்கும். ஓய்வுகால அளவு நோயாளிக்கு நோயாளி மாறுபடும். ஒரு சில வாரங்கள் ஓய்வு போதுமானது என்பது இன்றைய பொதுவான கருத்து.

மாரடைப்பு நோயாளிக்கு உடல் ஓய்வுடன் மன ஓய்வும் அவசியம். அவர்களது மன கலவரத்தைக் குறைக்க வேண்டும். உற்சாகப் படுத்தி முழுநம்பிக்கை ஊட்ட வேண்டும். மருந்துகள் தீர்க்கும் நோயின் அளவு பாதிப் பங்கு என்றால் நம்பிக்கை தீர்ப்பது மீதிப்பங்கு.

மாரடைப்பு ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் இருதய தமனிகளில் ஏற்படும் அடைப்பு. இந்த அடைப்பு அந்த நாளங்களில் இரத்தம் உறைந்து கட்டியாகி இரத்த ஓட்டத்தைத் தடை செய்வதுதான். இப்போது இந்த அடிப்படைக் காரணியையே களைவதற்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஊசி மூலம் நேரிடையாக இரத்த நாளங்களில் செலுத்தப்படும் இந்த மருந்துகள் இரத்த உறைகட்டிகளைத் தகர்த்து இரத்த ஓட்டத்திற்கு வழி வகுத்துக் கொடுக்கின்றன. மரபின் புனை திறயியல் (Genetic Engineering) இரத்த உறை எதிர் மருந்துகள் உற்பத்தி செய்யும் "பாக்டீரியா தொழிலகம்" முதலாக பல புதிய உத்திகளும் மாரடைப்பிற்கு எதிராக இப்போது கடைபிடிக்கப்படுகின்றன.

ஆஞ்சியோ பிளாஸ்டி, மாற்று வழி அமைப்பு, போன்ற சிகிச்சை முறைகளும் பின்பற்றப்படுகின்றன. இருதய தமனி வரைபடம் மூலம் எந்தப் பகுதியில் அடைப்பு ஏற்பட்டுள்ளது என்று கண்டுபிடித்து அடைப்பின் தன்மைக் கேற்ப சிகிச்சை முறைகள் கையாளப்படும். லேஸர் மூலம் அடைப்பை அகற்றும் முறையும் கையாளப்படுகிறது. அடைப்பின் தன்மை அகற்றக் கூடியதாக இருந்தால் ஆஞ்சியோ பிளாஸ்டி முறை சிகிச்சை அளிக்கப்படுகிறது. இல்லாவிடில் ஒட்டுச்சினை செருகி மாற்றுவழி அமைக்கும் சிகிச்சை அளிக்கப்படுகின்றன.

ஆஞ்சியோ பிளாஸ்டி முறையில் கதீட்டர் எனும் நுண் செருகு குழல் அடைப்பு ஏற்பட்டுள்ள இருதய தமனி வரை செலுத்தப்படும். அந்தக் குழலின் முனையில் பலூன் போல் விரியக் கூடிய ஒரு குமிழமைப்பு இருக்கும். அடைப்புள்ள பகுதியை இக் குழல் சென்றடைந்ததும் பலூன் போலுள்ள குமிழமைப்பை விரிவடையும்படி செய்யப்படும். விரியும் குமிழமைப்பு அப்பகுதியிலுள்ள படர் காப்பை தமனியின் உட்சுவருடன் சேர்த்து அழுத்தி இரத்த ஓட்டம் செல்லும் பாதையை விரிவுபடுத்துகிறது. இந்த முறைக்கு பலூன் ஆஞ்சியோ பிளாஸ்டி என்று பெயர். லேஸர் ஆங்கியோ பிளாஸ்டியில் லேஸர் கற்றைகள் அடைப்பைத் துளைத்துக் கொண்டு சென்று இரத்த ஓட்டம் தடையில்லாமல் செல்ல வழி வகுக்கிறது.

தமனியில் அடைப்பு கடுமையாக இருந்தால் ஒட்டுச்சினை செருகி மாற்றுவழி அமைக்கும் அறுவை சிகிச்சை செய்யப்படும். நோயாளியின் கால் பகுதியிலிருந்து சிரைநாளத் துண்டு ஒன்றை எடுத்து ஒரு முனையை மகாதமனியில் பொருத்தி, இன்னொரு முனையை இருதய தமனியில் அடைப்பு இல்லாத பகுதியில் செருகி பொருத்தி விடும் முறை இது. அதாவது இருதய தமனியில் அடைப்பு ஏற்பட்டுள்ள பகுதியைத் தவிர்த்து விட்டு அதற்கடுத்த அடைப்பு இல்லாத பகுதியில் ஒட்டு நாளத்தை செருகிவிடுதல். இதனால் இரத்த ஓட்டம் தங்கு தடையில்லாமல் மாற்று வழியாகப் பாய்ந்து மீண்டும் இருதயத் தமனியில் அடைப்பு இல்லாத பகுதியின் வழியாக இருதயத்தில் இரத்த ஊட்டம் தேவைப்படும் பகுதிக்குச் செல்லுகிறது. இன்னொரு வகையில், விலா எலும்பின் முன்முனைக்குப் பின்னால் செல்லும் தமனி நாளத்தின் வழியை அறுவை சிகிச்சை மூலம் ஒட்டுச் சினைமாற்று வழியாகத் திருத்தி அமைத்து விடுவது இத்தகைய சிகிச்சைகள் இப்போது சர்வ சாதாரணமாக வெற்றிகரமாகச் செய்யப்படுகிறது.

எனினும் எப்போதும் ஒன்றைமட்டும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எந்தவித சிகிச்சை முறையானாலும் சரி அதன் வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பது நோயாளியின் முழு ஒத்துழைப்புதான். நோயின் அறிகுறிகள் தெரிந்தாலும் அதை அலட்சியப் படுத்துவது பெரும்பாலானவர்களின் மனப்போக்கு, நெஞ்சுவலி, உறுத்தல், விரல்நுனிகள் மரத்துப் போதல், வாந்தி உணர்வு, மிதமிஞ்சிய வியர்வை முதலான அறிகுறிகளுக்கெல்லாம் தற்காலிகமான கை வைத்தியம் செய்து கொண்டு நோயைமுற்ற வைத்துக் கொள்வது இருதய நோய் சிகிச்சையின் வெற்றி வாய்ப்பைப் பெரிதும் பாதிக்கக் கூடியவை. சிறு சந்தேகம் இருந்தாலும் சரி உடனடியாக டாக்டரை அணுகினால் அல்லது மருத்துவ மனைக்குச் செல்வதால் மருந்தின் மூலமே தீர்க்கக் கூடிய இருதய நோய்களுக்கு அறுவை சிகிச்சை வரை போக வேண்டிய நிலை ஏற்படாது.

மாரடைப்பு ஒரு பயங்கர அனுபவம் சிகிச்சைக்குப் பின்னும் நோயாளிகளுக்கு ஒருவித உள்பயம் இருந்து கொண்டிருக்கும், இந்த உள் பயத்தை அகற்றவேண்டும், அதே சமயம் முந்திய தன்னிலைக்குக் கொண்டுவரும் எளிய பயிற்சி நிகழ்ச்சிகள், படிப்படியாக அமைத்து அவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும்.இடர்தரு காரணிகளைக் கட்டுப் படுத்துவது. இருதயத்தை வலுப்படுத்துவது, நோயாளியின் உள்பயத்தை நீக்கி தன்னம்பிக்கை ஊட்டுவது முதலியன மாரடைப்பு மீண்டும் ஏற்படாமலிருக்கக் கடைபிடிக்க வேண்டிய வழிகளாகும்,

**வருமுன் தடுத்தல்**

மாரடைப்பு ஏற்படாமல் தடுக்க வழி இல்லையா ? என்று ஆவலுடன் கேட்டார் ஒருவர். 'மூன்று வழிகள் உள்ளன' என்றார் ஒரு டாக்டர். அந்த வழிகள் என்னென்ன என்று கேட்டபோது அவர்கூறிய பதில்

1. வருமுன் தடுத்தல்.
2. வருமுன் தடுத்தல்.
3. வருமுன் தடுத்தல்.

என்பதுதான். எளிய வழிகள் தான். ஆனால் உண்மையான நிலை விளக்கம்.

மாரடைப்பு ஏற்படுவதற்கு மரபுக் கீற்றில் கறைபாடுதான் காரணம் என்று கருதுகிறார்கள். இந்த அடிப்படை குறைபாடைத் தீர்ப்பதன் மூலம் மாரடைப்பு ஏற்படாமல் தடுத்து விடலாம் என்பது இருதயயியல் வல்லுனர்களின் கருத்து. அதற்கான முயற்சியில் வெற்றி பெறும் வரை, மாரடைப்பின் பிடியிலிருந்து தப்பிக்க நமக்கு இருக்கும் ஒரே வழி "வருமுன் தடுத்தல்" தான்.

வருமுன் தடுத்தல் என்பது இடர்தரு காரணிகளைக் கட்டுப்படுத்துவது அல்லது தவிர்ப்பது. புகைபிடிப்பது ஒரு முக்கிய காரணி. இதிலுள்ள நிகோடின் இரத்தத்திலுள்ள தட்டணுக்களின் ஒட்டும் தன்மையை அதிகரிக்கச் செய்கிறது. இரத்தத்திலுள்ள கொழுப்பின் அளவையும் உயர்த்துகிறது. இந்தப் பழக்கத்தை அடியோடு நிறுத்திவிட வேண்டும். குடிப்பழக்கத்தையும் நிறுத்திவிட வேண்டும்.

வயதிற்கேற்ப உணவு முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். கொலெஸ்டெராலின் அளவை உண்ணும் உணவின் மூலமும் குறைக்க முடியும். மருந்தின் மூலமும் குறைக்கலாம். தானிய வகைகள், காய்கறிகள், பழங்கள், பயற்றங்காய் வகை காய்கறிகள் முதலியன கொலெஸ்ட்டரால் அளவைக் குறைக்கின்றன. குறிப்பாக இவைகளிலுள்ள நாப் பொருள்கள் ஜீரணமாவதில்லை. அவைகள் கொலெஸ்ட்டெராலை கவர்ந்திழுத்துக் கொண்டு வெளியேறுகின்றன. காய்கறிகளிலுள்ள நாப் பொருளைவிட தானியங்களிலுள்ள நாப் பொருளுக்கு இந்தத் திறன் அதிகம். உண்ணும் உணவின் மூலம் கொலெஸ்ட்ரால் அளவைக் குறைக்க முடியாத நிலையில் மருந்துகளின் உதவியை நாடலாம்.

உணவில் கட்டுப்படுத்திக் கொள்வது அல்லது தவிர்ப்பது நல்லது.

1. கொழுப்பு உணவுகள், உறையும் தன்மை கொண்ட எண்ணெய் வகைகள், அதிகமாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. பொரித்த உணவு வகைகள், வறுத்த உணவு வகைகளைக் குறைப்பது தவிர்ப்பது நல்லது.

2. சர்க்கரை மற்றும் இனிப்பு வகைகள்

3. கொலெஸ்ட்டரால் அளவை அதிகரிக்கும் உணவுப் பொருள்

4. உப்பு—குறிப்பாக ஊறுகாய் வகைகள்

5. குடி

6. காப்பி, காஃபின் அடங்கிய பானங்கள், குளிர்பானங்கள் முதலியன.

அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டியவை.

1. எல்லாவிதமாக தானிய வகைகள் கைக்குத்தல் அரிசி, பார்லி, கோதுமை, தினை, பருப்பு, புல்லரிசி.

2. கிழங்கு வகைகள், பயற்றங்காய் வகைகள் உருளைக்கிழங்கு, சர்க்கரைவெள்ளிக்கிழங்கு, அவரை, பீன்ஸ், பட்டாணி.

3. பழங்களும், காய்கறி வகைகளும்.

4. குறைந்தது ஒரு நாளைக்கு **6** முதல் **8** டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

5. காலை உணவு மிக முக்கியம், எந்தக் காரணத்தைக் கொண்டும் காலை உணவைத் தவிர்க்கக் கூடாது.

வேலை, ஓய்வு, எளிய உடற்பயிற்சி குறிப்பிட்ட இடைவெளி விட்டு உணவு உண்ணுதல், குறைந்தது அரைமணி நேரமாவது நடத்தல், நல்ல பழக்க வழக்கங்கள் மாரடைப்பு ஏற்படாமல் தடுக்கும் சாதனங்கள். தினமும் ஒரு ஆஸ்ப்பிரின் சாப்பிட்டால் மாரடைப்பு விலகிப் போகும் என்று ஒரு புதுமொழி கூறப்படுகிறது. இக்கருத்தை "நியு இங்கிலாந்து ஜெர்னல் ஆப் மெடிசின்'' என்ற பத்திரிகையில் வெளிவந்துள்ள ஒரு அறிக்கையும் வலியுறுத்துகிறது. இரத்த நாளத்தில் இரத்த உறைகட்டி ஏற்படுவதைத் தவிர்க்கிறது ஆஸ்ப்பிரின். இரத்தத்திலுள்ள தட்டணுக்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு கட்டியாகிறது. அவ்வாறு ஒட்டிக் கொள்ளாமல் தடுக்கிறது ஆஸ்ப்பிரின். எனினும் இதைப் பற்றிக் கருத்து வேறுபாடுகளும் உள்ளன.

ஆஸ்ப்பிரின் இரத்த உறைவைத் தவிர்க்கிறது அல்லது தாமதப்படுத்துகிறது. எனவே இருதய நோய்களுக்கு எல்லாம் இது ஒரு அனைத்துநோய் மருந்தாகக் கருதமுடியாது, வருமுன் தடுக்கும் வழிகளில் ஒன்றாக இதைச்சேர்த்துக் கொள்ளவும் முடியாது. மாரடைப்பு முதலான இருதய நோய்கள் வராமல் பார்த்துக் கொள்வது. காலத்திற்கு முன்னாலேயே கிழட்டுத் தன்மை அடையாமலிருப்பது. இருதயத்தை நல்ல நிலையில் வலுவுடன் வைத்துக் கொள்வது, வயதானாலும் உடல்வலுவுடனும் நலத்துடனும் இருப்பது எல்லாமே அவரவர்களின் கையில்தான் உள்ளது.

டாக்டர்கள், மருத்துவமனை, மருந்து வகைகள் நவீன மருத்துவக் கருவிகள் முதலியன நமது உடல்நலத்தை மீட்டுத்தரலாம். ஆனால் அவைகளுக்கு அந்த வாய்ப்பையே கொடுக்காமலிருப்பது, அதாவது நமது உடல் நலத்தை எப்போதும் பேணிப் பாதுகாப்பது நமது கையில்தான்.

— *"உடலியல் கலைக் களஞ்சியம்"*

*பகுதி—5*

*வெளியீடு : அல்லயன்ஸ்* •

# கல்லூரிகளில் கணினி அறிவியல் அறிமுகப்படுத்தும் திட்டம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கணிப்பொறி அறிவியல் அறிமுகப்படுத்தும் திட்டத்தின் தொடக்கவிழா கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் 1.12.2000 அன்று சென்னை மாநிலக் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழகத்திலுள்ள 60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 30 ஆயிரம் மாணவ–மாணவிகள் கணிப்பொறி அறிவை ஆண்டுதோறும் பெறும் உயர்ந்த நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புதிய திட்டத்தினை தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். மாநிலக் கல்லூரியின் கணிப்பொறி மையத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்தவைத்து கணினியை இயக்கி வைத்தார்.

இத்திட்டத்தினைத் தொடங்கி வைக்கும் பொருட்டு முதற்கட்டமாக மாநிலக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயிலும் செல்வி சத்யா, சைலஜா, புலோரன்ஸ் பிரேமா தேவி, சடகோபன், ஜெகதீசன் ஆகியோர்க்கு இப்பாடத் திட்டத்திற்கான பயிற்சிப் புத்தகத்தினை முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.

### முதல்கட்டமாக ரூ.1.5 கோடி


மேலும் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நிட் (NIIT), ரவி சங்கர் சிஸ்டம்ஸ் மற்றும் எஸ்.ஆர்.எம். சிஸ்டம்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு முதற்கட்ட மாக 1.5 கோடி ரூபாய்க்கான காசோலையை தமிழக அரசின் நிறுவனமான மின் அணு கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஞானதேசிகனிடம் இந்த விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார். இந்தத் தொகை மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.


### திட்டத்தின் சிறப்பம்சங்கள்

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு அன்றாட வாழ்க்கையில் இன்றியமையாததாகி விட்டது. கணினி மற்றும் இணைய பயன்பாட்டின் அறிவு பெறாத மாணவர்கள் வேலை வாய்ப்பு சந்தையில் தனித்து விடப்படும் நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். 21–ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ள இத்தருணத்தில் கணினி மற்றும் இணைய கல்வியினை அனைத்து இளங்கலை பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் வழங்குவது அரசின் குறிக்கோள்களில் ஒன்றாகும் என அரசு கருதுகிறது. எனவே, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கணிப்பொறி அறிவியல் பயிலாத மாணவ, மாணவியர் அனைவருக்கும் கணினிக் கல்வியை அறிமுகப்படுத்தும் திட்டத்தினை முதற் கட்டமாக ஐந்து ஆண்டுகளுக்கு ஏறத்தாழ 30 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர் களுக்கு கணினி மற்றும் இணைய பயன்பாட்டினை அறிமுகப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இரண்டாம் ஆண்டு பட்ட வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படும். அதே நேரத்தில் மூன்றாம் ஆண்டு மற்றும் நிறைநிலை பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்களும் இப்பயிற்சித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இத்திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறுவர். நடப்பாண்டில் இதுவரை இப்பயிற்சித் திட்டத்தில் 25,178 மாணவ, மாணவியர் சேர்ந்துள்ளனர். இம் மாணவர்களின் இனவாரியான விவரம் பின்வருமாறு :

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் | 6,620 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 5,917 |
| பிற்படுத்தப்பட்டோர் | 11,204 |
| பிறவகுப்பினர் | 1,437 |






இப்பயிற்சிக்கான காலம் ஓராண் டாகும். இப்பயிற்சி பல்கலைக்கழக கல்வி வரம்பிற்கு அப்பாற்பட்டு அளிக்கப்படும். பயிற்சியில் சேரும் ஒவ்வொரு மாணவருக்கும் நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் வீதம் வாரத்தில் ஐந்து மணி நேர பயிற்சி அளிக்கப்படும். இந்த ஐந்து மணி நேர பயிற்சி இரண்டு மணி நேர கருத்தியல் போதனையாகவும், மூன்று மணி நேர செய்முறைப் பயிற்சியாகவும் வழங்கப்படும். ஒவ்வொரு மாணவருக்கும் 10 மணி நேர இணையப் பயிற்சி உட்பட 150 மணி நேரத்திற்குக் குறையாமல் இத்திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப்படும். இந்த 150 மணி நேர பயிற்சியில் 60 மணி நேர கருத்தியல் போதனையும் 90 மணி நேர செய்முறை பயிற்சியும் அளிக்கப்படும். ஒவ்வொரு மாணவருக்கும் செய்முறை பயிற்சிக்கென தனித்தனியே ஒரு கணிப்பொறி வழங்கப்படும் என்பது இத்திட்டத்தின் சீரிய அம்சமாகும்.

**அரசு நிர்ணயித்துள்ள பயிற்சிக் கட்டணம் மிகவும் குறைவானது**

பயிற்சிக்கென கட்டணமாக ரூ.2,000 ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் வசூலிக்கப்படும். இக்கட்டணத்தை நான்கு தவணைகளிலும் செலுத்தலாம். தனியார் கணினி பயிற்சி நிறுவனங்களில் இதே போன்று பயிற்சிக்கு ரூ.15,000 முதல் ரூ.25,000 வரை கட்டணம் வசூலிக்கப்படுவதை ஒப்பு நோக்குகையில் அரசு நிர்ணயித்துள்ள பயிற்சிக் கட்டணம் மிகவும் குறைவானதாகும்.

இத்திட்டத்தை அரசு கல்லூரிகளில் செயல்படுத்த தமிழ்நாடு மின்னணுவியல் கழகத்தை முகமை நிறுவனமாக அரசு நியமித்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மூன்று சிறந்த தனியார் கணினி பயிற்சி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. சென்னை, NIIT நிறுவனம் 48 அரசு கல்லூரிகளிலும், சென்னை எஸ்.ஆர்.எம்.சிஸ்டம்ஸ் நிறுவனம் 3 அரசு கல்லூரிகளிலும் கோயம்புத்தூர் ரவிச்சந்திரா சிஸ்டம்ஸ் நிறுவனம் 9 அரசு கல்லூரிகளிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த உள்ளன. இந்நிறுவனங்கள் அவற்றிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கல்லூரிகளில் கணிப்பொறி மற்றும் இதர உபகரணங்களை நிறுவி எம்.சி.ஏ./எம்.எஸ்.சி.(கணினி அறிவியல்)/பி.ஈ. (கணினி பொறியியல்) பட்டம் பெற்ற பயிற்சியாளர்களையும் நியமித்துள்ளன.

மேற்கண்ட நிறுவனங்களே உபகரணங்களைப் பராமரித்தல், பயிற்சிக்கான புத்தகங்கள் வழங்குதல், மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் மற்றும் எழுதுபொருள் கட்டணம் போன்ற செலவினங்களை மேற்கொள்ளும். ஐந்தாவது ஆண்டின் இறுதியில் கல்லூரியின் கணினி மையங்களில் உள்ள கணிப்பொறி மற்றும் உபகரணங்களோடு இணைந்த கட்டமைப்பு வசதிகள் அந்தந்த கல்லூரிகளின் உரிமையாகிவிடும். இவ்விதம் பயிற்சி அளிப்பதில் அரசுக்கு எவ்வித மூலதன செலவினமும் இல்லை. வருவாய் செலவினமாக காலாண்டுக்கு ஒருமுறை குத்தகை தொகை செலுத்துவது மாத்திரமே அரசால் மேற்கொள்ளப்படும்.

**முதல்வர் உரை**

திட்டத்தினை தொடங்கி வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

"இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகம் கணினித் துறையிலே முன்னணியில் இருக்கின்றது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். மேலும் இதனை ஊக்குவிப்பதற்கும், மாணவர்களிடையே பரப்புவதற்கும் அரசு எடுத்துள்ள முயற்சியிலே ஒரு கட்டம்தான் இன்றைய நிகழ்ச்சி என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இதற்கு முன்பு +2 வரையிலே கணினிப் பயிற்சியை கடந்த ஆண்டு இந்த அரசு தொடங்கி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பொழுது அரசு கல்லூரிகளில் இந்த முயற்சி தொடங்கப்பட்டிருக்கின்றது. இது கணினி யுகம். இந்த கணினி யுகத்தோடு சேர்ந்து நாமும் நடைபோட வேண்டும் என்பதிலே ஊக்கம் கொண்ட இந்த அரசு உங்களுடைய ஒத்துழைப்போடு இந்த முயற்சியை தொடங்கியிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு உங்கள் நல்லாதரவு என்றும் தேவை என்று கேட்டுக் கொள்கிறேன்"

★ ★ ★

# கரூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்தியத் துணைக்கண்டத்தில் முன்னோடி திட்டமாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் போன்ற அடிப்படை வசதிகளை ஊரகப் பகுதியில் மேம்படுத்தும் திட்டங்கள் 1997–98–ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கரூர் மாவட்டத்தில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.950.06 இலட்சம் செலவில் 1,121 பணிகள் 11 ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டன.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.581.39 இலட்சம் செலவில் 234 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் 100% முழுப்பங்குத் தொகையாக ரூ.300.54 இலட்சமும் பகுதி பங்குத் தொகையாக ரூ.97.29 இலட்சமும் ஆக ரூ.397.836 இலட்சம் பொதுமக்கள் பங்கு ரொக்கமாகவும், பொருளாகவும், உழைப்பாகவும் வழங்கப்பட்டுள்ளன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.252.90 இலட்சம் செலவில் 254 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதுபோன்று அனைத்து சமுதாயத்தினரும் சாதிமத வேறுபாடு இன்றி ஒற்றுமையுடன் வாழ சமத்துவபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 4 சமத்துவ புரங்கள் ரூ.352.59 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 400 வீடுகளுடன் உருவாக்கப் பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.252.90 இலட்சம் செலவில் 213 பணிகள் நடைபெற்றுள்ளன.


இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.884.63 இலட்சம் செலவில் 3,215 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் கீழ் 536 புதுப்பித்தல் மற்றும் பழுது சரிபார்த்தல் பணிகளுக்காக ரூ.41.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1355.66 இலட்சம் செலவில் 868 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 8 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.87.32 இலட்சம் செலவில் 127 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.


ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.334.59 இலட்சம் செலவில் 7,284 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மில்லியன் கிணறு திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 260 பணிகள் ரூ.184.31 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.



குறைந்தபட்ச அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் 125 பணிகள் ரூ.39.80 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1999–2000 நிதியாண்டில் 95 சுயஉதவிக் குழுவினருக்கு ரூ.159.17 இலட்சம் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. தனி நபர் மானியமாக 84 குழு உறுப்பினர்களுக்கு ரூ.6.66 இலட்சமும் உள் கட்டமைப்பு வசதிக்கான 27 பணிகள் மேற்கொள்ளக் குழு மானி யமாக ரூ.59.40 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.



கீழ் 137 குடும்ப நபர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.7.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சீருடைகள், குறிப்பேடுகள், பாடநூல்கள் ஆகியவை 98,197 மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளன. விடுதிகள் பராமரிப்பு திட்டத்தின் கீழ் 37 பணிகள் ரூ.3.44 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. ஆதிதிராவிட நலப்பள்ளிகள் பராமரிக்கும் திட்டத்தின் கீழ் 21 பணிகள் ரூ.2.29 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இத்துறையின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்க்கு போஸ்ட்மெட்ரிக் பட்டப் படிப்பு வரை இலவசக்கல்வி. சுகாதாரக் குறைவான தொழில் செய்வோர் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை, கல்விக் கடன் உதவித் தொகை போன்ற பல்வேறு கல்வி உதவித் தொகைகள் 38,133 நபர்களுக்கு ரூ.1 கோடியே 6 இலட்சத்து 46 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

ஊரகப்பகுதிகளில் இளைஞர்கள் நல்ல உடல்வளம், மனவளத்துடன் ஆரோக்கியமாக வாழ 80 ஊரக விளையாட்டு மற்றும் பொழுது போக்கு மையங்கள் கரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு தொடங்க திட்டமிட்டு 15.6.2000 முடிய 26 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**பிற்பட்டோர் நலத்துறை**

மாவட்ட பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 11,663 நபர்களுக்கு ரூ.170 இலட்சம் செலவில் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 37,110 நபர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.85 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1,489 மாணவ மாணவியருக்கு சீருடைகளும், 1,100 நபர்களுக்கு சலவைப் பெட்டிகளும், 260 நபர்களுக்கு சவரக் கருவிகளும், 200 நபர்களுக்கு போயர் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

பேரறிஞர் அண்ணா நினைவுப்பரிசு, மாவட்ட அளவிலான பரிசு ஆகியவை 37 நபர்களுக்கு ரூ.52,300 செலவில் வழங்கப்பட்டுள்ளன. சலவைக்கடை மானியக்கடன், சவரக்கடை மானியக்கடன், நடமாடும் சலவையகம் மானியக்கடன் ஆகியவை 32 நபர்களுக்கு ரூ.44,400 வழங்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிட நலத்துறை**

மாவட்ட ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் 97–98, 98–99, 99–2000 ஆண்டுகளில் இலவச வீட்டுமனைப் பட்டா 8,225 நபர்களுக்கு ரூ.1.26 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. மயானப்பாதை பராமரிப்புத் திட்டத்தின் கீழ் 39 பணிகள் ரூ.2.7 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடும்ப கல்வித் திட்டத்தின் கீழ் 137 குடும்ப நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**வேளாண்மைத்துறை**

வேளாண்மைத்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் வேளாண்மை வளர்ச்சித் திட்டம், வேளாண்மை விரிவாக்கத் திட்டம், நெல் மற்றும் சிறுதானிய விதைகள் கொள்முதல், எண்ணெய் விரிவாக்கத் திட்டம், எண்ணை வித்து உற்பத்தித்திட்டம், முதலமைச்சர் அவர்களின் சாலையோர மரம் வளர்ப்புத் திட்டம் போன்ற 37 திட்டங்கள் ரூ.240.05 இலட்சத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வாண்டில் ரூ.162.10 இலட்சம் மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகின்றன. நவப்ரா திட்டம், ஒருங்கிணைந்த தென்னை அபிவிருத்தித் திட்டம் போன்ற 4 திட்டங்கள் ரூ.244.59 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**உழவர் சந்தை**

கரூர் மாவட்டத்தில் கரூர், வேலாயுதம்பாளையம் ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன. 22.3.2000 முதல் 14.6.2000 வரை கரூர் உழவர் சந்தையில் 7,26,277 கிலோ காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.47,55,643 ஆகும். இதில் 9,259 விவசாயிகள் உழவர்சந்தை கடையில் காய்கறிகளை விற்பனை செய்து பயனடைந்துள்ளனர். 2,85,929 நுகர்வோர்கள் பயனடைந்துள்ளனர்.

வேலாயுதம்பாளையம் உழவர்சந்தையில் 22.3.2000 முதல் 14.6.2000 வரை ரூ.13,80,111 மதிப்பில் 1,99,082 கிலோ காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2,746

விவசாயிகள் காய்கறிகளை விற்பனை செய்து பயனடைந்துள்ளனர். 49,821 நுகர்வோர்கள் பயனடைந்துள்ளனர்.

**தோட்டக்கலைத்துறை**

தோட்டக்கலைத்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த நறுமணப்பயிர்கள் அபிவிருத்தித் திட்டம், வெப்ப பிராந்தியத்தில் பழப்பயிர்கள் அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம், வேர் மற்றும் கிழங்குவகை அபிவிருத்தித் திட்டம் போன்ற பல திட்டங்கள் ரூ.57.51 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
**(நகர கோட்டம்)**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகரக் கோட்டத்தின் மூலம் நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் ரூ.1370 இலட்சம் செலவில் 4 குடிநீர்த் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதில் காவேரி ஆற்றில் இருந்து இனாம் கரூர் மற்றும் தாந்தோணி பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டங்களும் அடங்கும். புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 5 பேரூராட்சிகளில் ரூ.27 இலட்சம் செலவில் குடிநீர்த்திட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் நகராட்சி பேரூராட்சிப் பகுதிகளில் 2 குடிநீர்த் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
**(ஊரகக் கோட்டம்)**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊரகக் கோட்டத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ரூ.802.33 இலட்சம் செலவில் 277 குடியிருப்புகளுக்கு கிராம குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மின்விசை புனரமைப்பு திட்டத்தின் மூலம் 72 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த்திட்டப் பணிகள் ரூ.70.35 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.257.72 இலட்சம் செலவில் 108 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வெள்ளியனை, சின்னபனையூர், மண்மங்கலம் மற்றும் புத்தாம்பூர் ஆகிய சமத்துவபுரங்களுக்கு ரூ.28.20 இலட்சம் செலவில் குடிநீர்த்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கரூர், அரவக்குறிச்சி, க.பரமத்தி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களின் 564 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.17.21 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளன. 1999–2000 ஆண்டில் புளோரைடால் பாதிக்கப்பட்ட 64 குடியிருப்புகளுக்கு ரூ.1 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. நடப்பாண்டில் 150 குடியிருப்புகளுக்கு ரூ.8.50 கோடி செலவில் முழுமையடையும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்படவுள்ளது.

**கால்நடை பராமரிப்புத்துறை**

கால்நடை பராமரிப்புத் திட்டத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ஒரு புதிய கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டுள்ளது. 2 கால்நடை மருந்தகங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் சிறப்பு மத்திய உதவி திட்டத்தின் கீழ் செம்மறியாடு வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.12.37 இலட்சமும் வெள்ளாடு வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்த ரூ.7.83 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு நடைபெற்று வருகிறது.

**சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 34 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இம்முகாம்களில் 13,265 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஆண்மை நீக்கம் 1161 கால்நடைகளுக்கும், செயற்கை முறை கருவூட்டல் 716 கால்நடைகளுக்கும், சினைப்பரிசோதனை 5,209 கால்நடைகளுக்கும், மலட்டுத்தன்மை சிகிச்சை 2,357 கால்நடைகளுக்கும், குடற்புழு நீக்கம் 56,354 கால்நடைகளுக்கும் செய்யப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை 32 கால்நடைகளுக்கும், தடுப்பூசி 53,055 கால்நடைகளுக்கும் செய்யப்பட்டுள்ளது.

மொத்தம் ரூ.3,70,463 செலவில் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

**சமூக நலத்துறை**

சமூக நலத்துறையின் கீழ் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.3,25,40,000 நிதியுதவி அளிக்கப்பட்டு 3,254 ஏழை பெண்கள் பயனடைந்துள்ளனர்.

அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமணம் நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூ.9,60,000 நிதியுதவி அளிக்கப்பட்டு 74 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூ.92,000 நிதியுதவி அளிக்கப்பட்டு 12 ஏழை மகளிர் பயனடைந்துள்ளனர்.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூ.29,000 நிதியுதவி அளிக்கப்பட்டு, 5 ஏழை மகளிர் பயனடைந்துள்ளனர்.

டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூ.200 வீதம் ரூ.21,99,200 நிதியுதவி அளிக்கப்பட்டு 10,996 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.



இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 295 நபர்களுக்கு தையல் இயந்திரங்கள், வழங்கப் பட்டுள்ளன.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் 288 தொழில் முனைவோருக்கு ரூ.1334.72 இலட்சம் தொழிற்கடனாக வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டம் மூலம் கடந்த நான்காண்டுகளில் மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறைகளுக்கு ரூ.1248.475 இலட்சம் செலவில் 141 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அரசுக்கு சொந்தமான கட்டடங்களில் 618 பராமரிப்புப் பணிகள் ரூ.403.890 இலட்சம் செலவில் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

**பொதுப்பணித்துறை**

**(ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம்)**

பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு ஆற்றுப்பாதுகாப்புக் கோட்டத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் புதிய தடுப்புச் சுவர்கள் கட்டும் பணிகள் ரூ.37.5 இலட்சம் செலவிலும் காவேரி ஆறு வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் 309.25 கி.மீ. நீளத்திற்கு ரூ.170.75 இலட்சம் செலவில் தூர்வாரும் பணிகளும், ஏரிகள் மற்றும் குளங்கள் ரூ.34 இலட்சம் செலவில் தூர் வாரும் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. நவம்பர் 99 மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வாய்க்கால் மற்றும் வடிகால்கள் உடைப்புகள் ஏற்பட்டுள்ளதை செப்பனிடுவதற்காக ரூ.103.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்**

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ஆதிதிராவிட நலத்திட்டத்தின் கீழ் 168 நபர்களுக்கு ரூ.5.29 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தாட்கோ நலத்திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்க 416 நபர்களுக்கு ரூ.12.48 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

**மின்சாரத்துறை**

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ரூ.1530 இலட்சம் செலவில் 3,057 விவசாயப் பம்புசெட்டுகளும், ரூ.50 இலட்சம் செலவில் 2480 குடிசை களுக்கும், ரூ.268 இலட்சம் செலவில் 536 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் ரூ.964 இலட்சம் செலவில் 1,285 தொழிற்சாலைகளுக்கும் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ரூ.867 இலட்சம் செலவில் 867 மின்மாற்றுகளும் ரூ.446 இலட்சம் செலவில் 1,784 தெருவிளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1999–2000 நிதியாண்டில் தோகமலையில் ரூ.59 இலட்சம் செலவில் புதிதாக 33/11 கே.வி.துணை மின்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 811 விவசாயப் பம்புசெட்டுகளும் 322 குடிசைகளுக்கும், 266 தொழிற்சாலைகளுக்கும் மின் இணைப்பு வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை**

உடல் ஊனமுற்றோர் மறு வாழ்வுத்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, காலிப்பர் மற்றும் கிரட்சஸ் ஆகியவை ரூ.5.93 இலட்சம் செலவில் 382 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பராமரிப்பு உதவித்தொகை, வங்கிக்கடன் உதவி, திருமண நிதியுதவி, கல்வி உதவித்தொகை, இலவச பேருந்து பயணச் சலுகை ஆகியவை ரூ.20.46 இலட்சம் மதிப்பில் 2,390 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. முடநீக்கியல் சாதனங்கள், செயற்கை அவயங்கள் போன்றவை தயாரிக்க இயற்பியல் சிகிச்சைப் பிரிவு, காதுகேட்கும் திறன் அறியும் பிரிவு ஆகியவை ரூ.5.1 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் 558 நபர்கள் பயனடைந்துள்ளனர். ஊனமுற்றோர் மற்றும்

இளம்பிள்ளைவாத முகாம்கள் நடத்தப்பட்டதன் மூலமாக 3,426 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.1.11 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

#### போக்குவரத்துத் துறை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் 31 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 114 புதிய பேருந்துகள் மாற்றப்பட்டு இயக்கப்பட்டுள்ளன. 56 வழித்தடங்கள் தடம் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது. 1,05,487 மாணவ மாணவியருக்கு இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 50 சதவீத பேருந்து பயண சலுகை மூலம் 39,529 நபர்கள் பயனடைந்துள்ளனர். 658 மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கும், 138 சுதந்திர போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கும் இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 114 கண்பார்வை யற்றவர்களுக்கும், 205 உடல் ஊனமுற்றோர்களுக்கும் இலவச பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான சிற்றுந்து திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் 73 சிற்றுந்துகள் ஊரக பகுதிகளில் இயங்கி வருகின்றன.

#### தாட்கோ

தாட்கோ மூலம் கடந்த நான்காண்டுகளில் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்புரிவதற்காக 151 நபர்களுக்கு ரூ.12.05 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 169 நபர்களுக்கு ரூ.94.74 இலட்சம் மானியம் மற்றும் விளிம்புத்தொகை வழங்கப்பட்டுள்ளது. சுயவேலைவாய்ப்புப் பயிற்சித்திட்டத்தின் கீழ் 58 நபர்களுக்கு ரூ.2.02 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 3–ஆம் வகுப்பு முதல் 6–ஆம் வகுப்பு வரை பயிலும் 7312 ஆதிதிராவிட பெண் குழந்தைகளுக்குக் கல்வி பயில ரூ.37.88 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டள்ளது. தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 2 நபர்களுக்கு மானியம், விளிம்புத் தொகை மற்றும் குறுகிய கால கடனாக ரூ.7 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

#### இந்து சமய அறநிலையத் துறை

இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 8 நபர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. திருக்கோயில் பணியாளர்கள் குடும்ப நலத்திட்டத்தின் கீழ் 5 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.1.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கால பூஜை நிதியுதவித் திட்டத்தின் கீழ் 54 திருக்கோயில்களுக்குத் தலா ரூ.2500 வீதம் ரூ.1.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. திருக்கோயில்கள் திருப்பணி வேலைகளுக்காக அரசு மானியமாக ரூ.2.45 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணித் திட்டத்தின் கீழ் 4 திருக்கோயில்களுக்குத் தலா ரூ.25,000 வீதம் ரூ.1,00,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2000–2001 ஆண்டு திருக்கோயில்கள் சார்பாக இலவச திருமணங்கள் நடத்தப்பட உள்ளன.

#### கூட்டுறவுத்துறை

கூட்டுறவுத்துறையின் மூலம் கடந்த நான்காண்டு களில் குறுகிய கால கடனாக ரூ.61.58 கோடியும், மத்தியகால கடனாக ரூ.7.21 கோடியும், நீண்டகால கடனாக ரூ.20.83 கோடியும், பண்ணை சாராக்கடனாக ரூ.9.22 கோடியும், கொதுவைக் கடனாக ரூ.35 இலட்சமும் நகையீட்டுக் கடனாக ரூ.67.31 கோடியும், வீடுகட்டும் கடனாக ரூ.2.73 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத்துறையின் மூலம் ரூ.18 இலட்சம் செலவில் 4 புதிய மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 5 இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. கரூர் மாவட்டத்தில் 7 மகளிர் நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மகளிர் சிறுவணிகக் கடன் 2,927 மகளிர்க்கு ரூ.17.86 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அபராத வட்டி தள்ளுபடி செய்யும் திட்டத்தின்கீழ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் இதுவரை ரூ.2.71 இலட்சம் அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் புதிய திட்டத்தின் அடிப்படையில் 1.5.98 முதல் 31.5.2000 முடிய இம்மாவட்டத்தில் 2,57,517 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த நான்காண்டுகளில் 37 முழுநேர நியாய விலைக்கடைகளும்,102 பகுதி நேர நியாய விலைக்கடைகளும், 7 மகளிர் அங்காடிகளும் திறக்கப்பட்டுள்ளன.

#### பேரூராட்சிகள்

கரூர் மாவட்டத்தில் உள்ள 13 பேரூராட்சிகளில் கடந்த நான்காண்டுகளில் 591 சாலைப் பணிகள் ரூ.611.46 இலட்சத்திலும், 372 வடிகால் அமைக்கும் பணிகள்ரூ.225.77 இலட்சம் செலவிலும் நிறைவேற்றப் பட்டுள்ளன. 48 சிறுபாலங்கள் ரூ.15.06 இலட்சம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. 505 குடிநீர்த்திட்டப் பணிகள்ரூ.175.66 லட்சம் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ளன. 185 புதிய சோடியம் ஆவி விளக்குகள் ரூ.9.08 இலட்சம் செலவிலும், 1,304 புதிய குழல் விளக்குகள் ரூ.42.45 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. 116 இதர பணிகள் ரூ.198.17 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

#### கல்வித்துறை

கல்வித்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் 667 இடைநிலை ஆசிரியர்களும் 20 உடற்கல்வி

ஆசிரியர்களும் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 8 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 93 தொடக்க பள்ளிகளுக்குப் புதிய கட்டங்களும், 18 பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. 14 புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறி கல்வி அறிமுகம் திட்டத்தின் கீழ் 1999–2000 ஆண்டில் ஆறு மேல்நிலைப்பள்ளிகளில் கணிப்பொறி கல்வி துவக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

**மாவட்ட தொழில் மையம்**

பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் சுய தொழில் தொடங்க1,209 நபர்களுக்கு ரூ.754 இலட்சம் கடனாக வழங்கப் பட்டுள்ளது. 2000–2001 ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 360 நபர்களுக்குக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் 117 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**நெடுஞ்சாலைத்துறை**

நெடுஞ்சாலைத்துறையின் நிரந்தர கோட்டம், கிராம சாலைகள் மற்றும் கரும்பு அபிவிருத்தி கோட்டம் மூலமாக கடந்த நான்காண்டுகளில் ரூ.2147.39 இலட்சம் செலவில் 1042.10 கி.மீ. சாலைகளில் வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில சாலைகள் 55.30 கி.மீ. மாவட்ட சாலைகள் 234.60 கி.மீ. இதர மாவட்ட சாலைகள் 752.20 கி.மீ. செப்பனிடப்பட்டுள்ளது. திட்டப்பணியின் கீழ் ரூ.441.10 இலட்சம் மதிப்பீட்டில் 13 பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டு அதில் 6 பாலங்கள் ரூ.61.20 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 7 பாலங்கள் ரூ.379.90 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. பகுதி 2 திட்டத்தின் கீழ் 2000–2001 நிதியாண்டில் 3 பணிகள் ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுள்ளன. நபார்டு வங்கி திட்டத்தின் கீழ் டி.இடையப்பட்டி சாலையில் ரூ.81.25 இலட்சம் மதிப்பீட்டில் உயர்மட்ட பாலம் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

**கரூர் நகராட்சி**

கரூர் நகராட்சியில் கடந்த நான்காண்டுகளில் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் விநியோகம், சாக்கடை, சிறு பாலங்கள், பொது கழிப்பிடங்கள், ஆழ்துளை கிணறுகள் போன்று 313 பணிகள் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.377.72 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 10 பணிகள் ரூ.20.75 இலட்சம் செலவிலும் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் 40 பணிகள் ரூ.15.71 இலட்சம் செலவிலும்,



சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3 பணிகள் ரூ.8.34 இலட்சம் செலவிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், பத்தாவது நிதிக்குழு மற்றும் அடிப்படை வசதி திட்டங்களின் மூலம் 34 சோடியம் ஆவி விளக்குகள் ரூ.1.36 இலட்சம் செலவிலும், 173 தெருவிளக்குகள் ரூ.8.89 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. கரூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அமராவதி ஆற்றுப்பாலம் கட்டும் பணியை ரூ.1556 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு தற்பொழுது பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

#### குளித்தலை நகராட்சி

குளித்தலை நகராட்சியில் கடந்த நான்காண்டுகளில் 54 தார்சாலை அமைக்கும் பணிகள் ரூ.57.12 இலட்சம் செலவிலும், 45 சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகள் ரூ.39.04 இலட்சம் செலவிலும், 6 கப்பி சாலைகள் ரூ.2.41 இலட்சம் செலவிலும் போடப்பட்டுள்ளன. 37 தெருவிளக்குகள் ரூ.1.69 இலட்சம் செலவிலும் 290 குழல் விளக்குகள் ரூ.11.62 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. 5 குடிநீர்த்திட்டப்பணிகள் ரூ.1.65 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. 69 வடிகால் அமைக்கும் பணிகள் ரூ.21.18 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. 36 சிறுபாலங்கள் ரூ.10.03 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 4 நீரடி பொதுக்கழிப்பிடங்கள் ரூ.3.56 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ளன. 20 இடங்களில் உள்ள கழிப்பிடங்களை மேம்படுத்தும் வகையில் ரூ.6.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. தற்போது 26 இடங்களில் ரூ.58.07 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை போடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

#### வேளாண்மைப் பொறியியல் துறை

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக கடந்த நான்காண்டுகளில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 330 பணிகள் ரூ.379.625 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மில்லியன் கிணறுகள் திட்டத்தின் கீழ் 54 பணிகள் ரூ.55.534 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாவட்ட பரவலாக்கும் திட்டத்தின் கீழ் ஒரு பணி ரூ.1.48 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. மண்வள பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 330 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.4.70 இலட்சம் செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சொட்டு நீர்ப் பாசன திட்டத்தின் கீழ் 86 பணிகள் ரூ.47.80 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

#### வருவாய்த்துறை

வருவாய்த்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் முதியோர் உதவித் தொகை 2,06,625 நபர்களுக்கு ரூ.262.11 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. விதவை உதவித் தொகை 3,06,595 நபர்களுக்கு ரூ.388.25 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. ஊனமுற்றோர்க்கான உதவித் தொகை 26,696 நபர்களுக்கு ரூ.33.62 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை 44,714 நபர்களுக்கு ரூ.58.80 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. விவசாய கூலி உதவித் தொகை 97,877 நபர்களுக்கு ரூ.124.02 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இலவச வீட்டு மனைப்பட்டா ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த 21,704 நபர்களுக்குப் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த 15,160 நபர்களுக்கு முற்பட்ட வகுப்பைச் சேர்ந்த 100 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. விபத்து நிவாரண உதவித்திட்டத்தின் கீழ் 307 நபர்களுக்கு ரூ.33.10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. நலிந்தோர் நலத்திட்டத்தின் கீழ் 3,673 நபர்களுக்கு ரூ.228.74 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

#### மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்

கரூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 446 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளின் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக அமைக்கப்பட்ட 8 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மாநில அரசின் மானியமாக ரூ.370.51 இலட்சம் வழங்கப்பட்டு அதில் 7 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. ஒரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இதுதவிர 66 சலவை மற்றும் சாயத்தொழிற்சாலைகள் தனியாக சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயக்கி வருகின்றன. மாவட்டத்தில் உள்ள 55 கல் உடைக்கும் தொழிற்சாலைகள் காற்று மாசு தடுப்பு சாதனங்களை அமைத்து சுற்றுச் சூழலுக்குக் கெடுதல் ஏற்படாத வகையில் இயங்கி வருகின்றன. புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் காற்று மாசு படுவதை தடுத்து வாரிய நிர்ணய தர அளவுக்குக் கொண்டு வருவதற்காக அந்த நிறுவனம் சுமார் ரூ.15 கோடி செலவிட்டுள்ளது. அதேபோல் புலியூர் செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேசன் லிட்., என்ற நிறுவனமும் வாரிய நிர்ணய தர அளவுக்குக் கொண்டு வருவதற்காக சுமார் 5 கோடி வரை செலவிடப்பட்டுள்ளது. கரூர், குளித்தலை நகராட்சிகள் வனத்துறை ஆகியவற்றுடன் இணைந்து 1.6.2000 முதல் மரம் வளர்ப்பு'திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

#### சுகாதாரத்துறை

கடந்த நான்காண்டுகளில் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.38.50 இலட்சம் செலவில் அறுவை அரங்கு வசதியுடன் கூடிய கண்சிகிச்சை பிரிவும் ரூ.16.50 இலட்சம் செலவில் இருதய அறுவை சிகிச்சை பிரிவு கட்டடமும், ரூ.20 இலட்சம் செலவில் சித்தமருத்துவ பிரிவு கட்டடமும், ரூ.12.57 இலட்சம் செலவில் பிணவறை கட்டடமும், ரூ.10 இலட்சம் செலவில் 75 கிலோ வாட்ஸ் திறன் கொண்ட ஜெனரேட்டர் அறையும் கட்டப்பட்டுள்ளது. ரூ.13 இலட்சம் செலவில் டிரான்ஸ்பார்மர் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் செலவில் குழந்தைகள் உள்ளிருப்பு பகுதியும்,

ரூ.30 இலட்சம் செலவில் காசநோய் மையக் கட்டடமும் கட்டப்பட்டு வருகின்றன. குளித்தலை அரசு மருத்துவ மனையில் ரூ.12 இலட்சம் செலவில் குழந்தைகள் நலப்பகுதி கட்டடம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவ மனைகளாக தரம் உயர்த்தப் பட்டுள்ளன.

குடும்ப நலப்பிரிவு மூலம் 11,496 நபர்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையும் அளிக்கப் பட்டுள்ளது. 21,500 பெண் களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டுள்ளது. கருத்தடை மாத்திரைகள் விநியோகிக் கப்பட்டுள்ளன.

மாவட்ட பார்வையிழப்பு தடுப்புச் சங்கம் மூலமாக கடந்த நான் காண்டுகளில் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டு 17,328 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 12,483 நபர்களுக்கு உள்விழி லென்ஸ் பொருத்தப்பட்டுள்ளது. 4,845 நபர்களுக்கு இலவச கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது.

**வருமுன் காப்போம் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 86 சிறப்பு மருத்துவ முகாம்கள் 12.6.2000 வரை நடத்தப்பட்டுள்ளன. இம்முகாம்களில் 18,434 ஆண் களுக்கும், 23,095 பெண் களுக்கும் 12,132 குழந்தை களுக்கும் பரிசோதனை செய்யப் பட்டுள்ளனர். இதில் 4,416 நபர்களுக்கு தொடர் சிகிச்சை அளிக்க தெரிவு செய்யப்பட்டு அரசு மருத்துவ மனைகளில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப் பட்டு வருகிறது. இதுவரை ரூ.2,30,506 மதிப்பிலான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 82 முகாம்கள் நடத்த திட்டமிடப் பட்டுள்ளது.

– ஏ. சந்திரசேகரன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கரூர்.

★ ★ ★


## தமிழ்நாட்டில் நடப்பாண்டில் 9 நகரங்களுக்கு பாதாள சாக்கடைத் திட்டம்

திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கரூர், தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, இராமேஸ்வரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய நகரங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் சம்பந்தமாகவும், நகரின் கழிவுநீர், நதிநீர் மற்றும் கடல்நீரை மாசுபடுத்துவதை தவிர்ப்பதற்கான திட்டங்கள் பற்றியும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி. மணி அவர்கள் தலைமையில், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம் (மற்றும்) சுற்றுப்புற சூழல் துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்கள் முன்னிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் 5–12–2000 அன்று கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் நிதித்துறை செயலர் திரு.ஆர். சந்தானம், வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல்துறை செயலர் திரு.எஸ்.ராஜரெத்தினம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திருமதி. எஸ். மாலதி, நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.க. கணேசன், பேரூராட்சிகள் இயக்குநர் திரு.தா.சந்திரசேகரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சி.பி.சிங், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஆ.மு.காசிவிஸ்வநாதன் மற்றும் சுற்றுப்புற சூழல் துறை இயக்குநர் ஆகியோர் கலந்துகொண்டனர். மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பாலு அவர்கள் மேற்படி நகரங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து, வெளியிட்ட அறிவிப்புகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலே கண்ட 9 நகரங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டங்களுக்கான மொத்த மதிப்பீடு ரூ. 550 கோடி ஆகும். இதில் சுமார் ரூ.250 கோடி மத்திய அரசின் பங்காகவும், சுமார் ரூ.110 கோடி மாநில அரசின் பங்காகவும் அமையும். இத்திட்டங்கள் நடப்பாண்டிலேயே செயல்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் உடன் மேற்கொள்ளப்படும்.

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927



# கலைஞர் ஆட்சியில்

## கிராம மக்களின் வசதிக்காக
## இதுவரை இயங்கி வரும் மினி பஸ்கள் 1500

சின்னச் சின்ன ஊருக்குள்ளும்
சிற்றுந்து ஓடுது !

தமிழக அரசின் சாதனைக்கு
சிந்து பாடுது !



தமிழரசு

பதிவு எண். M.8676
LICENCE No. TN/MS(C)/PP-23







